
www.tamilarangam.net

சரිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் - 125
ஜூலை 02- ஜூலை 16 ,1997
விலை 10.00 ரூபா



## முஸ்லிம் மாகாணம்:
## தீர்மானிக்கும் உரிமை முஸ்லிம்களுக்கே!

## யாழ்ப்பாணம்:
## காணாமல் போனோரின் கதை!

## மட்டக்களப்பு:
## யார் இந்த ராசிக்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

*"சரிநிகர் சமானமாக வாழ்மிந்த நாட்டிலே"*

-பாரதி

**ஆசிரியர் குழு**

பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி. செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

**வடிவமைப்பு**
ஏ.எம்.றஷ்மி

**வெளியிடுபவர்**
ச. பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு - 03.

**அச்சுப்பதிவு**
நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை.

**ஆண்டு சந்தா விபரம்**
இலங்கை ரூபா 300/=

வெளிநாடு US $ 50
(தபாற்செலவு உட்பட)
காசுக்கட்டளை/ காசோலை
யாவும்
MIRJE என்ற பெயருக்கு
எழுதப்படல் வேண்டும்.

எல்லாத்தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
4, ஜயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு - 05.

தொலைபேசி: 593615, 584380
தொலை மடல் : 594229

முன்னைய பிரதிகள்
வேண்டுவோர் எழுதுக.
கைவசம் உள்ள பிரதிகள்
அனுப்பிவைக்கப்படும்.

பிரசுரத்துக்கென் அனுப்பபட்டுப்
படைப்புகள் திருப்பி
அனுப்பப்பட மாட்டாது.

படைப்புக்களை தாளின் ஒரு
பக்கத்தில் தட்டச்சுச் செய்தோ
அல்லது தெளிவான
கையெழுத்தில் பிரதி செய்தோ
அனுப்பி வைக்கவும்.


## திருத்தம்-

**இதழ் 124 பக்கம் 13ல் நெற்றிக் கண்ணன் என்பவரால் எழுதப் பட்ட அபூநிதாலுக்கான பதிலில், முதலாவது கலத்தில் நான்காம் பந்தியில் ஆறாம் வரிக்குப் பின்னர் இவ்வாறு வந்திருக்க வேண்டும்.**

**''....யாளர்கள், ஆசிரியர்கள், ஓர் உடற்பயிற்சி உத்தியோகத்தர், தபால் அதிபர் ஆகியோர் ...'' விடுபட்ட இவ்வரிகளை வாசகர்கள் சேர்த்து வாசிக்கவும்.**

**இதற்கு அடுத்த பந்தியாக வரவேண்டிய பகுதி 14ம் பக்கத் தில் முதலாவது கலத்தில் 'சுருக்கமாக என ஆரம்பித்து இரண்டாவது கலத்தில் ''உண்மையில் இது'' என முடிவடைகின்றது. இடம் மாறியுள்ள இப்பகுதியை விடு பட்ட பகுதிக்கு அடுத்ததாக இணைத்து வாசிக்கவும்.**

**பக்கம் 18ல் 'பேராசிரியர் கணபதிப்பிள்ளை' நூலுக்கான குறிப்பினை எழுதியவர் மு. பொன்னம்பலம் அவர்கள்.**

**இத்தவறுகளினால் வாசகர்க ளுக்கு ஏற்பட்ட அசௌகரி யங்களுக்காக வருந்துகிறோம்.**

*ஆசிரியர்*

# "அவர்கள் புலிகளிடம் போய்விட்டார்கள்!"

30.06.1997 முதல் மனித உரிமை செயல ணிக்குழுவின் நடவடிக்கைகள் யாவும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசு பிரகடனப்படுத்தியுள்ளமை அரசின் தமிழ் பேசும் மக்கள் மீதான மலினப்போக்கையும், யுத்தத்தின் மீதான தீவிர நேசிப்பையுமே காட்டுகிறதெனலாம்.

அரசின் இந்த விசேட வர்த்தமான மூலமான அறிவித்தல் யுத்தத்தால் சீரழிந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களை மாத்திரமின்றி ஜனநாயக அமைப்புகள், சர்வதேச உள்நாட்டு மனித உரிமை அமைப்புகள் ஆகியவற்றையும் அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.

1991ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் பத்தாம் திகதியன்று செயற்படத் தொடங்கிய இவ் மனித உரிமை செயல ணிக்குழு பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் என்பவற்றின் கீழ் கைது செய்யப் படும் நபர்களின் அடிப்படை உரிமைகளை பேணுவதற்கும், கைது செய்யப்படுபவர்களின் தகவல்களை சேகரிப்பதிலும் ஈடுபட்டு வந்தமை குறிப்பித்தக்கது.

ஒன்பது பிராந்திய அலுவலகங் களில் சுமார் 83 ஊழியர்கள் பணி யாற்றி வந்துள்ளார்கள். இவர்கள் அனைவரும் ஆறுவருடங்களை பூர்த்தி செய்தவர்களாவர். அரசின் இத்தடை உத்தரவு இவர்களையும் கூட கேள்விக்குள்ளாக்கியிருக் கிறது. இவர்களின் எதிர்காலம் பற்றியும் எதுவும் குறிப்பிடப்பட வில்லை.

மனித உரிமை செயல ணிக்குழு ரத்துச் செய்யப்பட்டு ஓர் ஆணைக் குழு நியமிக்கப்பட்டுள்ள போதி லும் அது அதிகாரிங்களுடன் செயற் படத்தொடங்கும் கால எல்லைக்குள் கைது செய்யப்படுவோர், காணா மல் போவோர் பற்றிய தகவல்களை யாரிடம் முறையிடுவது.

திடீரென மனித உரிமை செயல ணிக்குழுவை ரத்துசெய்தமை தமிழ் பேசும் மக்களுக்கெதிராக பலாத்கா ரத்திலும், பாலியல் வன்முறையா லும், கொலையிலும், கண்டபடி கைது செய்தலிலும் ஈடுபடும் அரச படையினரை தட்டிக்கொடுப் பதற்காகவே அமையப்போகிறது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கத்தின் தகவலடிப்படையில் கிழக்கில் 1990ஜுன் 1991ஜுன் ஒரு வருடகால இடைவெளியில் மட்டும் அரசபடைகளால் ஏறத்தாழ பத்தாயிரம் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 5200 சம்பவங்கள் நடந்துள் ளதாகவும் தெரியவருகிறது.

யாழ் குடாநாட்டில் ரிவிரெச இராணுவ நடவடிக்கையின் பின்னர் 700க்கு மேற்பட்டோர் படையினரால் கைதாகி காணாமல் போயுள்ளதும், நூற்றுக்கணக்கா னோர் சிறைகளில் அடைக்கப்பட் டுள்ளதும் தெரிந்த விடயமே.

இதைவிட தென்னிலங்கையிலும் தலைநகர் கொழும்பிலும் கைது செய்யப்படும் தமிழர்கள் எண் ணிக்கை கணக்கிலடங்காதவை. கைது செய்யப்பட்ட சிலர் காணா மலும் போயுள்ளார்கள். அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் பொல்கொட வாவியில் மிதந்த தமிழ் இளைஞர்கள் சடலங் கள் என்பனவும் மனித உரிமை செயலாணிக்குழு இருந்தபோதே நிகழ்ந்தது. இவ்வகைவென்றால் மனித உரிமை செயல ணிக்குழு இல்லாவிட்டால் நினைத்துப் பார்க்கவே முடியாது.

இருப்பினும் இவ் மனித உரிமை செயல ணிக்குழு சம்பவம் நடந்து இடத்திற்கு அதிகாரிகளை அனுப்பி யமை வாக்குமூலங்களை பதிவு செய்தமை பொலிஸ் நிலையம் தடுப்பு முகாம்களுக்கு சென்று தடுத்து வைக்கப்பட்டோரை பார் வையிட்டது போன்றமை நிலை மையை ஓரளவுக்கேனும் சுமுகமாக் கியதெனலாம்.

ரிவிரெச இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ் குடாநாட்டில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பற்றி படையதிகாரி களிடம் கேட்டபோது அவர்கள் விடுவிக்கப்பட்டு புலிகளிடம் போய்விட்டதாக கூறியதாக தெரிகிறது.

இனிவரும் காலங்களிலும் படையி னரால் கைது செய்யப்பட்டு காணா மல் போவோர் புலிகளிடம் போய் விட்டார்கள் என்று கூறப்பட்டாலும் கவலைப்படவோ ஆச்சரியப் படவோ ஒன்றுமில்லை.

இலங்கை மக்களின் குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் உயிர், உடமை, பாதுகாப்பு, சுதந்திரம் என்பவற்றின் மீதான நெருக்குதலையே இது காட்டுகின்றது.

*எம்.பி*

# தொலுக்கு முதலிகள்

திருகோணமலை அரசாங்க அதிபர் எச்.டி. சந்திரதாச அவர்க ளுக்கு உத்தியோகபற்றற்ற ''தொலுக்கு முதலிகள்'' நியமிக்கப் பட்டுள்ளனரா? இந்தக் கேள்வி அகதி முகாமில் இருக்கும் தமிழ் முஸ்லிம் மக்களிடையே தலை தூக்கியுள்ளது. ஏனெனில், அவர் அகதிமுகாமுக்கு விஜயம் செய்யும் போது இந்த ''தொலுக்கு முதலிகளும்'' கூடவே காணப் படுகின்றனர்.

அண்மையில் லவ்லேன் பகுதியி லுள்ள அகதிமுகாம்களுக்கு அர சாங்க அதிபர் விஜயம் செய்திருக் கிறார், வேறு அதிகாரிகளுடன். தெகிவத்தை பியதாசா என்றழைக் கப்படும் ஒருவரும், லீலசேன என்ற ஒருவரும், கூடவே வந்து அகதிகளுடன் தாறுமாறாக நடந்து கொள்ள முற்பட்டுள்ளனர்.

இத்தனைக்கும் இந்த இரண்டு பேருக்கும் அரசாங்க அதிபருடன் வரவேண்டிய தேவை எதுவுமே இல்லை. இவர்கள் வெறும் அடி யாட்களே. இச் செல்வாக்கினால் நிவாரணம் கூட பெற்று வருகி றார்கள். அரச உத்தியோகத்தர் அல்லாதோருக்கு புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்ட நஷ்டஈட்டை முதல் பட்டியலி லேயே பெற்றுக் கொண்டவர்கள் இவர்கள் என்றால் வேறு விபரம் தேவையில்லை. இதுவரை ஒரு தமிழருக்கேனும் இந்த நஷ்டஈடு வழங்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசாங்க அதிபர் ஒரு முகாமுக்கு விஜயம் செய்யும் போது அதற்குப் பொறுப்பான கிராம உத்தியோ கத்தருடன் வருவதுதான் வழக்கம். ஏனெனில், முகாமின் உண்மை யான நிலை கிராம உத்தியோ கத்தருக்கே தெரியும்.

அரசாங்க அதிபர் அவ்வாறு செய்யா மல் மேற்கொண்ட விஜயத்தினால் தான் அடியாட்கள் பெரிய மனிதர் களாக நடந்து கொண்டனர். லவ் லேன் பகுதியில் இரண்டு முகாம்கள் இருக்கின்றன. ஒன்றில் 217 குடும் பங்களும், மற்றையதில் 36 குடும்பங்களும் இருக்கின்றன. இதற்குள் 30 தமிழ்க் குடும்பங்கள் போக ஏனையவை முஸ்லிம் குடும்பங்கள்.

இந்த விஜயத்தின் போது அரசாங்க அதிபரோ கூட வந்த வேறு அதிகாரி களோ முகாமில் உள்ளவர்களிடம் அடாத்தான கேள்விகள் எதுவும் கேட்கவில்லை.

ஆனால் தெகிவத்தை பியதாசவே தனக்கு விளங்கிய அளவுக்கு கேள்விகள் கேட்டிருக்கிறார். லீல சேன ஒத்துப்பாடியிருக்கிறார். இவர்கள் இறுக்கமான பாவனை யுடன் அடாத்தான கேள்விகள் கேட்டபோது அதிகாரிகள் எவரும் அவர்களை தடுக்கவில்லை என்பது தான் மக்களின் மனக்குறை.

கூலிவேலைக்காகவோ கடைத் தெருவுக்கோ, வெளியில் சென்றி ருந்த ஆண்களின் பெயர்களை வெட்டப் போவதாக அவர்களின் மனைவி மக்களிடையே பியதாச பயமுறுத்தல் செய்திருக்கிறார். சித்தி உம்மா என்ற பெண் கணவனை இழந்தவர். இவர் தனக்கு மாத்தி ரமே நிவாரணம் பெற்று வருகிறார். கணவனின் மரணச்சான்றிதழை ஏன் சமர்ப்பிக்கவில்லையென்று துள்ளிய பியதாச உடனே அதைக்கொண்டு வரும்படி வற்புறுத்தியிருக்கிறார். இச்சான்றிதழ் நிர்வாக ரீதியில் தேவையற்றதொன்று. அதுவுமல் லாமல் பியதாசவுக்கு வேண்டாத வேலையிது.

மக்களிடம் மனக்கசப்பை விதைத்து விட்டு சென்றதைத் தவிர அரசாங்க அதிபரின் அன்றைய விஜயத்தால் விளைந்த பலன் எதுவுமே இல்லை.

*விவேகி*

# 'வெட்டி' வேலை!

கடந்த இரண்டு வாரங்களாக கல்முனையில் தாழவட்டான் சந்தி யில் உள்ள வடபுற சோதனைச் சாவடியைச்சுற்றி பண்ட் அமைக்கும் பணியில் பொலிசார் ஈடுபட் டுள்ளனர்.

இதற்கென வீதிகளில் செல்லும் ஆண்களையே பொலிசார் பலவந் தமாக பயன்படுத்துகின்றனர். இதில் அரச ஊழியர்கள் உட்பட, மருத்துவமனை செல்வோர், அவசர தேவையின் நிமித்தம் செல்வோர் கூலிவேலைக்கு செல்வோர் என எல்லோரும் அடங்குகின்றனர்.

வழமையாக சில மணித்தியாலங்கள் வேலைசெய்ய நிர்ப்பந்திக்கப்படும் இவர்கள் வேறு ஆட்கள் கிடைக்கா விட்டால் தொடர்ந்து பல மணித்தி யாலயங்கள் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

இதனால் அன்றாடம் கூலி வேலைக்கு சென்று பிழைப்போரின் குடும்பங்களும் அன்றைய பொழுதை பட்டினியுடனேயே கழிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. பொலிசாரின் அடி, உதை மிரட்டல் பயம் காரணமாக அமைதியாக வேலை செய்து விட்டு போவதைத் தவிர இவர்களுக்கு வேறு வழி தெரியவில்லை.

இதேபோல் வீதியால் வரும் உழவு இயந்திரங்களும் இத்தேவைக்கு பயன்படுத்தப்படுகின்றன. அவசர வேலையெனக்கூறும் சாரதிகளிடம் அனுமதிப்பத்திரம் பறிக்கப்படும் என மிரட்டப்படுகின்றது. இவ்வாறு பொது மக்களை கைதிகளைப்போல் நடத்துவதும், வெட்டி வேலை செய்விப்பதும் இலங்கை சன்நாயக குடியரசில் அவசரகால விதிகளின் எத்தனையாவது சரத்தின் கீழ் என்பது தான் தெரியவில்லை.

இதனால் பண்ட் விரைவாக வளர் வதைப்போல் அருகில் மண் தோண்டப்படும் இடமும் (வயல்) குழியாகி அழிந்து போகின்றது.

# திரும்பாப் பணம்!

நீதிமன்றங்களில் செலுத்தப்படும் பிணைப்பணத்தை மீளப்பெறுவதில் மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளா குவதை எந்த ஒரு நீதிமன்ற நிர்வாக அதிகாரிகளும் கவனம் செலுத்திய தாக தெரியவில்லை.

ஒரு குற்றவாளி சந்தேக நபர் செலுத்தும் பிணைப்பணம் தீர்ப்பு வழங்கிய மாதத்திலேயே மீளத்தரப் படுமேயானால் எந்தவொரு கஷ்ட மும் ஏற்படமாட்டாது. ஆனால் தீர்ப்பு வழங்கி எத்தனையோ மாதம் சம்பந்தப்பட்டவர் நீதிமன்றத்துக்கு சென்று அலைந்து அவரின் பெறுமதி யான காலம் வீணடிக்கப்பட்ட பின்னரே இப்பணத்தை காணக் கூடியதாக உள்ளது.

அரசுக்கு கோடிக்கணக்கில் பண த்தை சம்பாதித்துக்கொடுப்பவை இந்த நீதிமன்றங்களே. ஆனால் ஏன் இந்த நீதிமன்றங்கள் பிணைப் பணங்களை குறிப்பிட்ட நேரத்துக்கு திருப்பிச் செலுத்தாது இழுத்தடித்து வருகின்றதென்று தெரியவில்லை. ஒரு குற்றவாளியோ, சந்தேகநபரோ குறிப்பிட்ட நேரத்தில் பிணைப் பணத்தையோ தண்டனைப் பணத் தையோ செலுத்தத்தவறின் கூட்டுக் குள் போக வேண்டி வரும். அதே வேளையில் நீதிமன்றங்கள் அப்பா விகளின் பிணைப்பணத்தை தீர்ப்பு வழங்கிய மாதத்திலேயே செலுத்த ஏன் நடவடிக்கை எடுப்பதில்லை.

தாமதத்திற்கு காரணம் தலைமை யகம் என நீதிமன்ற அதிகாரிகள் கூறும் காரணத்தில் உண்மை இருக்க லாம். ஆனால் தலைமையக வங்கிக் கணக்கில் அன்றன்று வைப்பில் இடும் தொகையை குறிப்பிட்ட நீதிமன்றங்கள் மீளப்பெறும் ஒரு நடவடிக்கையை தலைமையகம் செய்து கொடுத்தால் இப்பிரச்சினை எழாது. இல்லாவிடின் மக்களின் பணத்தை உடனுக்குடன் செலுத்தும் ஒரு துரித நடவடிக்கை மேற் கொள்ளவேண்டும். இவையிரண் டும் இல்லாது மக்களை அலைக் கழிப்பதில் நீதிமன்றத்திற்கு அப்படி என்னதான் ஆசையோ.


*துட்டகைமுனு*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# யார் இந்த ராசிக்?

சரிநிகரில் நான் எழுதிய இரு கட்டுரைகளிலும் ராசிக் குறூப் தொடர்பான சில விடயங்களை மாத்திரம் குறிப்பிட்டிருந்தேன். இவ்விடயங்கள் தொடர்பாக இன்று பலரது மத்தியிலும் ராசிக் குறூப் யார் என்பது தொடர்பான பல கேள்விகள் எழுந்துள்ளன. இந்நிலையில் இவர்கள் பற்றிய மேலும் சில குறிப்புகளை தருவது பொருத்தமானது என்று கருதுகிறேன். ராசிக் என்பது இவனது சொந்தப் பெயர் அல்ல. அது இவன் சார்ந்துள்ள இயக்கமான ஈ.பி.ஆர்.எல்.எவ். இனால் சூட்டப்பட்ட பெயர் ஆகும். இவனுடைய சொந்த இடம் காரைதீவு. தாய் தகப்பனாரால் இவருக்கு வைக்கப்பட்ட பெயர் கணேசமூர்த்தி. நினைத்ததை அடைகின்ற போக்கும், முரட்டுக் குணங்களும் இவனுடைய இயற்கைக் குணங்களாகும். இந்தக் குணங்களே பள்ளிப்பருவத்தில் இருந்த போது ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பாளர்களை கவர்ந்தது. அதிலிருந்து அவர்களும் இவனுடன் தொடர்புகளை வைத்திருந்ததுடன் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் போது 1981இன் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் சென்று இந்தியாவிற்கு கடல்வழிப்பாதையால் பயிற்சிக்காக அனுப்பிவைத்தனர். இவன் பயிற்சிக் காலங்களில் காட்டிய ஆர்வமும், விவேகமும் எதிர்காலத்தில் தலைவனாக ஆவதற்கு உரிய அறிகுறிகளை காட்டுகின்றதென பயிற்சிக் களத்தில் பலராலும் பாராட்டப்பட்டான். இவர்களுடைய பயிற்சிக்காலம் முடிவடைந்து 1986 இன் முற்பகுதியில் இலங்கைக்கு வந்து முல்லைத்தீவிலே தங்களுடைய குழுக்களுடன் நிலைகொண்டிருந்தான். 1986 டிசம்பர் பகுதியில் விடுதலைப் புலிகள் ஏனைய தமிழ் இயக்கங்களை விரட்டத் தொடங்கிய காலகட்டத்தில் ராசிக், தம்பி, ரகு, கணேசன் போன்ற 15பேர் கொண்ட குழுவினர் மணலாறு பகுதியில் உள்ள இராணுவ நிலையத்தில் கொப்பேக்கடுவவிடம் சரணடைந்தனர். சரணடைவதற்கு தலைவனாக இருந்தவன் ராசிக். அன்றிலிருந்தே அந்தக் குழுவினர் 'ராசிக் குறூப்' என அழைக்கப்பட்டனர். ராசிக் குழு இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து அரசின் விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஒற்றர்களாக செயற்பட்டு வந்தனர். இந்தக் காலகட்டத்தில் 1987 இல் கொப்பேக்கடுவவின் தலைமையிலான 'விடுவிக்கும் போர் (Operation Liberation) என்னும் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றது. இந்நடவடிக்கையை நடத்துவதற்கு கொப்பேக்கடுவ 'ராசிக் குழுவின்' முழு ஒத்துழைப்பையும் பெற்றிருந்தார். 'புலி' உறுப்பினர்களை இனம் காண்பதற்கும் புலிகளின் தளங்களை அழிப்பதிலும் இக்குழு முக்கிய பங்கேற்றது. இதன் பிற்பாடு 1987இன் நடுப்பகுதியில் நடைபெற்ற இலங்கை - இந்திய ஒப்பந்தத்தோடு இந்திய அமைதிப்படை இலங்கையில் காலடி எடுத்துவைத்து அம்மாதக் கடைசிப்பகுதியளவில் மட்டக்களப்புக்கு வருகை த்ந்த போது இதே ராசிக் குழுவினரும் வருகை தந்தனர். இங்கு வந்ததன் பிற்பாடு இவர்கள் ராசிக் குறூப் என்ற பெயரிலிருந்து 'மண்டையன் குறூப்பாக' தங்களது பெயரை மாற்றி செயற்படத் தொடங்கினார்கள். இவர்கள் வந்த புதிதில் 'புலி' உறுப்பினர்களின் குடும்பங்களையும், அவர்களை சார்ந்தவர்களையும் 'மண்டையில் போடுவது' என்ற நிலையில் செயற்பட்டார்கள். அதன் பிற்பாடு தங்களுக்கு எதிராக யார் செயற்படுகின்றார்களோ அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தையும் சுடத் தொடங்கினார்கள். இந்த வேலையில் ராசிக், தம்பி, ரகு, கணேஸ் போன்றவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். இந்த நேரத்தில் கடை முதலாளிகளிடமும், பணக்காரர்களிடமும் பணம் வசூல் செய்தல், கொள்ளை அடித்தல், நகை பறித்தல் போன்றனவும் இவர்களின் பணிகளில் ஒன்றாக இருந்தது. இந்த நேரத்தில் புளொட் அமைப்பிலிருந்து விலக்கப்பட்ட மோகனும் இவர்களுக்கு பக்கபலமாகவும், பங்காளியாகவும் இருந்து செயற்பட்டான். இவர்களின் இவ்வாறான செயற்பாடுகளுக்கும், மனிதஉரிமை மீறல்களுக்கும் எதிராக செயற்பட்டு குரல் எழுப்பிய வணக்கத்துக்குரிய பிதா சந்திர பெனாண்டோ அவரது பங்குமனையில் சுடப்பட்டார். இவருக்கு பக்கபலமாக இருந்து சமாதானக் குழுவில் செயற்பட்டு இவர்களால் செய்யப்பட்ட கொலைகளை கட்டுப்படுத்த முயன்ற வணசிங்கம் அதிபர் சுட்டுக் கொல்லப்பட்டார். ஈ.பி.ஆர்.எல்.எவ்.இல் இருந்த காலத்தில் இருந்தே ராசிக்குக்கு புலிகளை அல்லது அவர்களது குடும்பங்களை சார்ந்தவர்களை அழித்தல் என்ற குணம் இருந்து வந்தது. அக்குணம் இன்றுவரைக்கும் இருந்து கொண்டே இருக்கின்றது. இவன் எப்படியாவது தான் நினைத்ததை அடைய வேண்டும் என்ற மனோபாவம் படைத்தவன் அதுபோலவே தனது துணைவியாரையும் தேர்ந்தெடுத்தான். விருப்பமில்லாத ஒரு பெண்ணை கடத்திச் சென்று பலாத்காரமாக திருமணம் என்ற பந்தத்திற்குள் சேர்த்துக் கொண்டான். 'மண்டயன் குறூப்பாக' இருந்து மட்டக்களப்பில் செயற்பட்டு வந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணம் சாவகச்சேரி, மட்டுவில் பகுதிகளிலும் பல கொலைகள் இவர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1990ம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியப்படை மட்டக்களப்பில் இருந்து வெளியேறி திருகோணமலைக்கு சென்ற வேளையில் ராசிக், மோகன், கணேஸ் போன்றவர்கள் உன்னிச்சைக் காட்டினூடாக திருகோணமலை சென்றனர். ஏனையோர் இந்தியப்படையுடனே சென்றனர். அங்கிருந்து அவர்கள் இந்திய இராணுவத்துடன் இந்தியாவுக்குச் சென்றனர். இந்தியாவில் ராசிக் இருந்து கொண்டே ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் மத்தியகுழு உறுப்பினராகவும் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராவும் 96இன் கடைசிப்பகுதி வரைக்கும் கடமையாற்றினான். இந்த வேளையில் விடப்படும் அறிக்கைகள் அனைத்தும் தனது சொந்தப் பெயரான கணேசமூர்த்தி என்ற பெயரிலே வெளியிட்டு வந்தான். இவனுடன் இருந்த சகபாடிகள் தம்பி, ரகு என்பவர்கள் லண்டனுக்குச் சென்று சொந்தமாக எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை நடத்தி வருகிறார்கள். இவர்கள் மட்டக்களப்பில் இருந்த காலகட்டத்தில் பல லட்சக்கணக்கான சொத்துக்களுக்கு உரிமையாளர்களாக இருந்திருக்கின்றார்கள், இருக்கின்றார்கள். இந்தியாவில் இருந்து 96 இன் கடைசிப்பகுதியில் இலங்கைக்கு வந்த ராசிக் மீண்டும் தனது கைங்கரியங்களை மேற்கொண்டான். இதனால் தங்களுக்கும் பங்கம் ஏற்பட்டுவிடும் என்ற எண்ணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் ராசிக் குழுவினரிடம் இருந்து நிர்வாக ரீதியாக தங்களைப் பிரித்துக் கொண்டது. இன்று 90 பேர் கொண்ட ஒரு குழுவுக்குத் தலைவனாக ராசிக் இருந்து வருகின்றான். இதேவேளையில் ராசிக் உட்பட 42 பேர் இலங்கை இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அரசினால் வழங்கப்படும் சகல கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன. இதைத்தவிர தங்களை சார்ந்துள்ள ஏனையோரை வழி நடத்துவதற்காகவே இந்த வரி வசூலிப்பெல்லாம். வலையிறவுப் பாலத்தினூடாக எந்தவொரு வாகனமும் செல்லக்கூடாது என இராணுவம் கட்டுப்பாடு விதித்

→ 11

## உயிலங்குளம்: உயிர் கையில், உடல் மண்ணில்!

மடு, மல்லாவி, ஜெயபுரம், ஸ்கந்தபுரம், அக்கராயன், ஆளைவிழுந்தான், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, விசுவமடு, தருமபுரம் ஆகிய இடங்களில் இன்று ஆயிரக்கணக்கான மக்கள் சொல்லொணாத் துயரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இப்பகுதிகளில் இன்று அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும், மருந்துகளுக்கும், பால்மா வகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

அரிசி, சீனி, மா, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களும் பனடோல் உட்பட சகல மருந்துகளும் பல மடங்கு விலையாக விற்பனை செய்யப்படுகின்றன.

பணப்புழக்கம் வெகுவாகக் குறைந்துள்ளது. இதனால் மக்கள் இப்பகுதிகளில் தமது உடைமைகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்கின்றனர். தங்க நகைகளும் குறைந்த விலைக்கு விற்பனையாகின்றன.

தொழில் இன்றி, வருமானம் இன்றி தவிக்கும் இந்த மக்கள் ஒரு நாளைக்கு ஒரு நேர உணவைக் கூட உண்ணுவதற்கு வழியின்றி தவிக்கின்றனர். பிச்சைக்காரர்கள் தான் இன்று இப் பகுதிகளில் அதிகமாகின்றனர். பிச்சை எடுப்பதற்காக பாடசாலை செல்ல வேண்டிய பல சிறுவர்கள் இப்பகுதிகளில் உள்ள வர்த்தக ஸ்தாபனங்களிற்கு படையெடுக்கின்றனர்.

இப்பகுதிகளிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகள் அனைத்தும் நோயாளர்களினால் நிரம்பி வழிகின்றன. வைத்தியசாலைகளில் மருந்துக்குத் தட்டுப்பாடு. இட நெருக்கடி டாக்டர்கள், தாதிமார்கள் மற்றும் பலதரப்பட்ட ஊழியர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது. அக்கராயனில் இயங்கும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஏப்ரல், மே ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் சுமார் 50 ஆயிரம் பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர். 61 பேர் மரணமாகியுள்ளனர். தொற்று நோய்கள் வெகுவேகமாகப் பரவுகின்றன. கண்நோய், சொறி சிரங்கு, வயிற்றோட்டம், செப்ரிசிமியா, மூளைமலேரியா, மலேரியா போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள்தான அதிகமானவர்கள்.

வன்னி பெருநிலப்பரப்பில் 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கை கட்டம் கட்டமாக இடம்பெறுகின்றது. இங்கு வசித்த மக்கள் எல்லோரும் இன்று கதியற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

யாழ் மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து வன்னி பெருநிலப்பரப்பில் வசித்த மக்கள் வன்னி பெருநிலப்பரப்பில் சிறுகச் சிறுகச் சேமித்த சகல உடைமைகளையும் இழந்து இன்று வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

தமது சொந்த இடங்களுக்கு செல்வதற்காக வன்னிபெருநிலப்பரப்பில் வசித்த மக்கள் இன்று மீன்பிடிப் படகுகளில் பாலாவி, நாச்சிக்குடா, கிராஞ்சி ஆகிய கடல் பிராந்தியத்தினூடாக செல்கின்றனர். அண்மையில் நாச்சிக்குடா கடற்பரப்பில் இடம்பெற்ற படகு விபத்தில் 19 பேர் மாண்டனர். இதனைத்தொடர்ந்து படகு மூலம் செல்பவர்கள் மிகக்குறைவானவர்களே. இன்று வன்னிபெருநிலப்பரப்பில் இருந்த யாழ் மாவட்ட மக்கள் மன்னார் சென்று யாழ்ப்பாணம் செல்வதற்காக உயிலங்குளத்திலுள்ள இராணுவ தடை முகாமில் நீண்ட கியூவரிசையில் தவம் கிடக்கின்றனர்.

''மன்னாரில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு. தங்க வைப்பதற்கு இடமில்லை கப்பல் வசதி இல்லாமல் ஆயிரக்கணக்கானோர் யாழ்ப்பாணம் செல்ல முடியாமல் பெரும் அவதிப்படுகின்றனர். ஆதலால் யாழ்ப்பாணம் செல்வதற்காக வந்தவர்கள் எவரும் உள்ளே வர அனுமதிக்கப்படமாட்டார்கள். ''திரும்பிச் செல்லவும்'' நாட்கள் அறிவித்தபின்னர் வரவும்.'' இது உயிலங்குள இராணுவ முகாமில் இருக்கும் இராணுவத்தினரின் அறிவிப்பு.

ஆனால் மக்கள் இந்த அறிவிப்பை செவி சாய்க்காமல் தடைமுகாமிற்கு முன்னால் தவம் கிடக்கின்றனர்.

இங்கு இவ்வாறு அல்லல்படும் மக்கள் கொண்டு வந்த பணம் முடிவடைந்த பின்னர் தமது உடைமைகளை விற்பனை செய்கின்றனர்.

இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளான மன்னார், வவுனியா ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் அத்தியாவசிய தேவைகளுக்கு வருவதற்காக வந்த ஆயிரக்கணக்கானோர் பல நாட்களாக உயிலங்குள இராணுவ தடைமுகாமுக்கு முன்னால் கியூவரிசையில் இருக்கின்றனர். நாளொன்றுக்கு இராணுவத்தினர் சுமார் 250 பேருக்கு மட்டுமே அனுமதியளிக்கின்றனர். இதனால் வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்கு வருவதற்காக விடுதலைப் புலிகளின் அடம்பன் தடைமுகாமிலும் இராணுவத்தினரின் உயிலங்குளம் தடைமுகாமிலும் ஆயிரக்கணக்கானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

உயிலங்குள இராணுவ முகாமில் இருந்து இரவு நேரங்களில் அடம்பனை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் கியூவரிசையில் இருக்கும் மக்கள் இரவு நேரங்களில் பெரும் அல்லோலகல்லோலப்படுகின்றனர்.

யாழ் மாவட்டம் செல்வதற்காக உயிலங்குளத்தில் உள்ள மக்களை அரசாங்கத்தினர் மனிதாபிமான முறையில் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள் வருவதற்கு அனுமதி அளிக்க வேண்டும். மன்னாரில் வசதிக்குறைவாக இருந்தால் முன்னர் போல் வவுனியாவுக்கு மக்களைக் கொண்டு வந்து திருகோணமலை மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அங்குள்ள மக்களின் கோரிக்கையாகும்.

அன்பு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முஸ்லிம் மாகாணக் கோரிக்கை

# முஸ்லிம்களே தீர்மானிக்க வேண்டும்!



பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் கூட்டம் முடிவுகள் எட்டப் படவேண்டிய முக்கியமான அரசியல் விடயங்களில் முடிவுகள் எட்டப்படாமலேயே கூடிக் கலைந்துவிட்ட அதனது தெரிவுக்குழு அறிக்கைகள் இனப்பிரச்சினைக் கான தீர்வில் ஆக்கபூர்வமான முடிவுகள் எதனையும் தந்து விடவில்லை.

அதிகார அலகுகள் பற்றிய எவ்வித மான முன்மொழிவுகளும் இல்லாத இவ் யோசனைகளை வெறும் காலம் கடத்தும் ஏற்பாடாக நீடிக்க, அரசு - வடகிழக்குக்கான அதிகார அலகுகள் பற்றிய விடயத்தை தீர்க்கமாக முன்வைக்காமல் காலத்தை இழுத் தடிப்பதற்காகவும் தனது பலவீன மான நிலையை மூடி மறைப் பதற்காகவும் பௌத்த மேலாதிக்க எதிர்ப்பை முகம் கொள்வதற் காகவும் கடந்த மாதங்களில் தமிழ் கட்சிகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசையும் மோத வைக்கும் நாடகத்தை அரங்கேற்றிவிட்டி ருக்கிறது.

முஸ்லிம்களுக்கான முஸ்லிம் மாகாணம் குறித்த விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய தனி முஸ்லிம் மாகாணத்தை தனது கட்சியின் கோரிக்கையாக முன் வைத்திருக்கிறது. அக் கோரிக்கை குறித்த விடயத்தில் தமிழ்க்கட்சிகள் தங்களது அபிப்பிராயங்களை வெளியிடுவதற்குப் பதிலாக முஸ் லிம்களுக்கான முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை தமிழ்க் கட்சிகள் நிராகரிப்பது தமிழ்க்கட்சிகளுக் கான தார்மீகபொறுப்பாகாது.

முஸ்லிம்களுக்கான முஸ்லிம் மாகாணக் கோரிக்கை குறித்த விடயத்தில், முஸ்லிம்கள் தான் தங்களுக்கான தனிமாகாணம் வேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் விடயத்தில் உரித்துடையவர்களாகிறார்கள்.

ஒரு தேசிய இனம் தான் எதிர் கொள்ளும் தீவிரமான அரசியல் பிரச்சினைகளில் தன்னை தக்க வைத்துக்கொள்வதற்காக ஒரு தேசத்தையோ அல்லது தனக்கான அரசியல் அதிகார மையங்களை கட்டமைப்பதையோ நிராகரிக்க முடியாத உலக வரலாற்றின் பக்கங்களில் நாம் நிற்கிறோம்.

முஸ்லிம்களுக்கான தனிமாகாணக் கோரிக்கை தொடர்பாய் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் பல யதார்த்தமான பிரச்சினைகளை எதிர்கொள்வது தொடர்பான தீர்க்கமான கேள்விகளும் அக்கேள் விகளுக்கான பதில்களையும் தீவிர அலசல்களின் ஊடாக பெறுவது முக்கியமாகிறது. இவ் அலசல் களால் முக்கியமாக எழுப்பப்பட வேண்டிய இரு கேள்விகள் உள்ள தென நான் நம்புகிறேன். அவற்றில் முதலாவதாக **வடகிழக்கில் வாழும் ஒட்டுமொத்தமான முஸ்லிம்கள் இக்கோரிக்கை தொடர்பாய் என்ன கருத்தைக்கொண்டிருக் கிறார்கள். எதிர்க்கிறார்களா? ஆதரிக்கிறார்களா?**

**இரண்டாவதாக - வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம் புத்திஜீ விகளினதும், அமைப்புகளினதும் ஏனைய முஸ்லிம் கட்சிகளினதும் முஸ்லிம் மாகாணம் தொடர்பான நிலைப்பாடு என்ன?** இவ்விரண்டு வினாக்கள் தொடர்பாய் நாம் தீவிரமான பதில்களைத் தேட வேண்டியிருக்கிறது.

முதலாவது வினாத்தொடர்பாய் அம்பாறை மாவட்டத்திற்கு வெளி யில் வாழும் முஸ்லிம்கள் இக் கோரிக்கை குறித்து தங்களது எதிர்ப்பைத்தான் வெளிப்படுத்தி வருகின்றனர். இவ்வெதிர்ப்பு தொடர்பான மனநிலையை நாம் அவதானத்திற்கு உட்படுத்தும் போது - அம்பாறைக்கு வெளியில் வாழும் முஸ்லிம்களை பணயமாக வைத்து நடாத்தும் ஒரு பேரம் பேசும் அரசியல் யுக்தியே இது வென அம்பாறைக்கு வெளியில் வாழும் முஸ்லிம்கள் நம்புகின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசால் இன்று வலியுறுத்தப்படும் அம்பாறை மாவட்டத்திற்கு உள்ளான தனி முஸ்லிம் மாகாணக் கோரிக்கை விடயத்தில் மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதி ஹிஸ்புல்லாஹ் அவர்கள் கூட தனது பகிரங்கமான ஆதர வினை இதுவரை தெரிவிக்க வில்லை என்பது முக்கியமாக கவனத்திற்கொள்ளப்படத்தக்கது! வடக்கு கிழக்கு இணைப்பினால் கிழக்கில் வாழும் முஸ்லிம் சனத்தொகை விகிதமான 34.3வீதம் 17 வீதமாக குறைக்கப்படும் என்ற முஸ்லிம் காங்கிரசின் வாதமானது அம்பாறை மாவட்ட முஸ்லிம்களை தனியே தனது தனி மாகாணத்தில் பிரித்தெடுத்து விட்டால் ஏனைய மாவட்ட முஸ்லிம்களின் ஒட்டு மொத்தமான வீதம் 17வீதத்தையும் விட மிகவும் சிறு வீதமாக மாறிப் போகும் அபாயத்தை கிழக்கில் திருமலை, மட்டக்களப்பு, மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் உணர் கின்றனர்.

அடுத்ததாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் அம்பாறை மாவட்ட அரசியல் தலைமை மாத்திரம் தனி மாகாணக் கோரிக்கையை ஆதரிக்க ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் தலைமைகள் யாவும் (ரவூப் ஹக்கீம் நீங்கலாக) இது தொடர்பாய் அதிகம் வற்புறுததியதில்லை. முஸ்லிம்களால் பதிவு செய்யப்பட்ட ஏனைய இருகட்சி களான ஸ்ரீலங்கா முஸ்லிம் க ட்சியும், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியும் இக்கோரிக்கையை எதிர்க்கிறது. சேகு இஸ்ஸதீன் தலைமையிலான முஸ்லிம் கட்சி வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் மொழிமாநிலத்தை முன் வைப்பதுடன் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் அனைவ ரையும் பாதுகாப்பதற்கான உள் அலகுகளை கோருகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் இன்று கோரும் தனி முஸ்லிம் மாகாணத்திற்குள் சம்மாந்துறை தொகுதிக்குள் உள்ள தீகவாபி புனித பூமி அபிவிருத்தியும் அதற்கான முஸ்லிம் காங்கிரசின் பங்களிப்பும் பணியும் முஸ்லிம் களுக்கான தனி மாகாணம் தொடர்பான நிலைப்பாட்டையே அம்பாறை மாவட்ட முஸ்லிம் களைக் காப்பதாக நினைத்துக் கொண்டு வடகிழக்கில் ஏனைய மாவட்டங்களில் வாழும் முஸ்லிம் களை அந்தாத்தில் விடும் ஒரு ஏற்பாடாக இது அமைந்து விடும் என்ற அச்சம் பிற மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்கள் மனதில் பதிந்து விட்டிருக்கிறது. முஸ்லிம் களுக்கான தனிமாகாணக் கோரி க்கை விடயத்தில் இன்று உறுதி யாகவிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் - தனது முஸ்லிம் மாகாணம் தொடர்பான கோரிக்கை தொடர் பாய், அரசின் நிலைப்பாடு தொடர் பாக அசமந்தமாக இருந்து கொண்டு - ஏனைய கட்சிகளுடன் இது தொடர்பாய் பேசுவது தொடர் பாக வேடிக்கையானதாக இருக் கிறது. தனி மாகாணத்தை தாம் ஆதரிக்கிறோம் என அரசின் தீர்வுயோசனையில் அல்லது தெரி வுக்குழுவில் முஸ்லிம் காங்கிரஸ் தனது கோரிக்கையை அரசின் யோசனைகளின் ஊடாக முதலில் வெளிப்படுத்தி இருக்க வேண்டும்.

போட்டு உடைத்து இருக்கிறது. அம்பாறைத் தேர்தல் தொகுதியில் ஊவாவுடன் இணைப்பதற்கான முஸ்லிம் காங்கிரசின் இணக்கப் பாடு இன்று அதிக விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கும் சூழ லில் - தனி முஸ்லிம் மாகாணத்தில் வளம் மிக்க பூமிகளையும் நீர் பாசனத் திட்டங்களையும் சிங்கள ஆக்கிரமிப்பினூடே ஏற்கெனவே பறிகொடுத்து நின்ற முஸ்லிம் களுக்கு நியாயம் வழங்காது மௌனம் காத்து சிங்களவர்களுக்கு தாரைவார்த்துக் கொடுக்க இணங்கிய பின்பும் எஞ்சியுள்ள பூமிகளது சிங்கள ஆக்கிரமிப்பு விஸ்தரிப்பு வாதத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் இணங்கிப்போவது அதிர்ச்சியைத் தந்திருக்கிறது.

முஸ்லிம் காங்கிரசின் மற்றுமொரு சாதனையென கடந்த வருடத்தில் அதிகம் பிரச்சாரப்படுத்தப்பட்டு சிங்களவர்களால் ஆக்கிரமிக் கப்பட்ட முஸ்லிம்களுக்கு சொந்த மான விவசாய காணிகளுக்கு மாற்றுக் காணிகளை வழங்கப் போகிறோம் என உரிமைக்குரல் எழுப்பிய முஸ்லிம் காங்கிரசும், அதன் தலைவர் அஷ்ரஃப்பும் முஸ்லிம்களுக்கான ஒரு ஏக்கர் காணியைக் கூட மீளப்பெற முடியா மல் பலத்த அரசியல் தோல்வியை சந்தித்தது மட்டுமல்லாமல் தயாரத் தினவால் சாதிக்க முடியாமல் போன தீகவாபி புனித திட்டத்தை அபிவி ருத்தி செய்து அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் எதிர்கால அரசியல் வாழ்வுக்கும், நிரந்தரமான இருப் புக்கும் சாவுமணி அடித்திருக்கிறார்.

கடந்த பொசன் தினமான 20ம்திகதி 250 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட சிங்கள ஆக்கிர மிப்பு குடியேற்றத்தை திறந்து வைத்தது மாத்திரமல்லாமல், பௌத்த விகாரையில் கௌதம போதி புத்தர் சிலைக்கு முன் மலர் தட்டும் ஏந்தி தனது தனித்துவத்தை வெளிப்படுத்தி நின்றதை அரசு தொடர்பு சாதனங்கள் மிகவும் பிரச் சாரத்துடன் வெளிப்படுத்தியதைக் கண்ட அநேக முஸ்லிம்கள் அதிர்ச்சியடைந்தனர்.

தீகவாபியில் இழக்கப்பட்ட காணிக ளுக்கு ஒரு ஏக்கர் மாற்று காணி கூட வழங்கப்படாது இன்றும் அம்பாறை மாவட்டத்தையே முற்று முழுதாக

→13

அபூரோஸ்

# பூத்தட்டு சுமக்கும் அஷ்ரப்!

அமைச்சர் அஷ்ரஃப் கடந்த 20ம் திகதி தீகவாபி மாதிரிக் கிராமத்தைத் திறந்து வைத்தது தெரிந்ததே.

தீகவாபிபிரதேசம்சுமார்21/2 கோடி ரூபா செலவில்புனருத்தாரணம்செய்யப்பட்டது.

மூவினங்களுக்கும் உரித்தானபிரதேசமாக தீகவாபியும்சூழஉள்ள பிரதேசமும்இருந்து வந்தது. பள்ளக்காடு, பொன்னன்வெளிப் பிரதேசமெல்லாம் முஸ்லிம் தமிழ் மக்களினுடையவை.

அதனால் தானோ என்னவோ அன்று புனர்வாழ்வு அமைச்சராக விருந்த அமைச்சர் தயாரத்ன இவ்விடயத்தை தவிர்த்து வந்திருந்தார்.

தீகவாபி ஒரு புராதன விகாரையுள்ள பிரதேசம். அது பழைமை மங்காமல் இருக்கட்டும், ஏதாவது செய்ய எண்ணினால் சிறுபான்மை இனங்கள் பாதிக்கப்பட்டு அதனால் பகைமையை தேடிக்கொள்ள வேண்டி வந்துவிடக்கூடும் என்று நினைத்து தன்னைக் காப்பாற்றிக்கொண்டார் அவர்.

ஆனால், பொன்னன்வெளி கண்டம் முஸ்லிம்களுக்குரியது என்று கூறிக் கொண்டு பல வித விளம்பரங்களுடன் உறுதியை ஒப்படைக்க துணிந்தார் அமைச்சர் அஷ்ரஃப்.

விளைவு என்ன? எதிர்ப்பு கிளம்பியது. பெரும்பான்மையினர் எதிர்ப்பு. எதிர்ப்பினை சமாளிக்க முடியாமல் தீகவாபிபுனித பிரதேசத்தை அபிவிருத்தி செய்யவிருக்கிறேன். ஓரங்குலகாணியைத் தானும் பறிபோக இடமளிக்கமாட்டேன் என்று மார்தட்டினார் அவர்.

முதலில் எதிர்த்த விகாராதிபதி பின்னர் எந்தப் பேயையாவது கொண்டு அபிவிருத்தி செய்வோம் என்று கருதினாரோ என்னவோ எதிர்ப்பை விட்டுவிட்டார்.

மறுகணமே, தீகவாபிக்கு சென்றார். வரை படங்களை பார்த்தார். அரச வெகுஜன ஊடகங்கள் ஊதுகுழலை நிமிர்த்திப் பிடித்தன. குறுகிய காலத்துள் துரித கதியில் அம்பாறை அரச அதிபர் சுனில் கன்னங்கராவை நியமித்து வேலைகளை செய்து முடித்தார். இத்தனைக்கும் தீகவாபி பிரதேசம் அட்டாளைச்சேனை பிரிவிற்குள் வருகிறது. ஏன் அப்பகுதி பிரதேச செயலாளரை நியமிக்கவில்லை? அங்கு சிங்களவரைத்தவிர்த்து எவரும் ஆதிக்கம் செலுத்த முடியாது. இது தெரிந்தும் அஷ்ரஃப் அபிவிருத்தியில் இறங்கியதை என்னவென்று கூறுவது?

பொன்னன்வெளிகண்டத்தை பூரணமாகப் பெறலாம் என்றெண்ணி 170 லட்சத்தை செலவிட்டார்.

நடந்தது என்ன? இருந்ததையும் இழந்ததுதான் மிச்சம். அதாவது 500 ஏக்கர் என்று இருந்த தீகவாபி புனித பிரதேசம் 580 ஏக்கராக உருப்பெருத்தது. அதுமட்டுமல்ல "தர்மசக்கரம்" பொறித்த வெண்ணி றக்கல்லும் எல்லையில் நாட்டப் பட்டுள்ளது.

தேவைதானா? மேலும் தீகவாபி மாதிரிக்கிராமம் அமைக்க வீதிகள் தனிக்காட்டுக்குள் அமைக்கப்பட்டன. அங்கொன்றும் இங்கொன்றுமாக குச்சிக் குடிசைகள் இருந்தன.

பார்க்குமிடமெல்லாம் புதரும் பற்றையும். நீருக்கு ஆலாப்பறக்க வேண்டும்.

ஒரு வனாந்திரத்தை கொத்தி வெளியாக்கி வீதிகளை அமைத்துள்ளார் அவர்.

சில வீதிகள் சம்மாந்துறை முஸ்லிம்களின் காணியினுள் சென்று விழுகின்றன. அதாவது முஸ்லிம்களின் சில காணிகள் இத்திட்டத்தில் பறிபோகும் அபாய நிலையிலுள்ளது.

எந்த முஸ்லிம் இனத்திற்காக குரல் கொடுக்கிறாரோ அதே முஸ்லிம் இனத்தை நடுத்தெருவில் கொண்டு நிறுத்தும் கைங்கரியத்தில் அவர் இறங்கியுள்ளார்.

மூவினத்திற்கும் பொதுவாகவிருந்த இக்காணியை தற்போது சிங்கள இனத்திற்கு மட்டுமாக பகிர்ந்து கொடுக்க நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

மேலும் தீகவாபி விகாரையும் புனரமைக்கப்பட்டுள்ளது. அந்த திறப்பு விழாவிலே அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியும் கலந்து கொண்டார்.

அமைச்சர் மன்சூர் ஆலயத்திற்கு சென்றதை எள்ளிநகையாடிய அதே அமைச்சர் தீகவாபியில் பூத்தட்டு வைத்தார். ஆம். ரிவியில் பத்திரிகையில் இதை பார்க்கக்கூடியதாகயிருந்தது.

அன்றொருநாள் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு சென்ற முன்னாள் அமைச்சரை "தமிழன்" என்று எள்ளி நகையாடிய அதே அமைச்சர் அஷ்ரஃப் இன்று பூத்தட்டு சாத்துகிறார் தீகவாபி விகாரைக்கு.

மொத்தத்தில் முஸ்லிம்களின் காணி பறிபோனதுதான் மிச்சம். பள்ளக்காட்டை வெளியாக்க புதிய திட்ட மொன்றுள்ளதாம். இன்றைய நிலவரப்படி அப்பகுதி புலிகளின் பிரதேசமாகும்.

என்னதான் கோடி செலவழித்து அபிவிருத்தி நடந்தாலும் புலிகளை வழிப்படுத்தாவிடில் பிரயோசனமில்லை என்பது ஒன்றும் தெரியாத தொன்றல்ல.

ஒட்டுத்தொழிலகம் அமைந்துள்ள குடுவிலில் வாழும் முஸ்லிம் மக்கள், இரண்டு குழாய்க்கிணறு அடித்துத்தருமாறு மாதக்கணக்கில் மன்றாடினர்.

அது அமைச்சரின் காதைசென்ற டையவில்லை. மேலும், தமிழ்ப் பிரதேசங்களை புறக்கணித்து வருகின்ற அவர். சிங்களப் பகுதியை முன்னேற்ற நினைத்துள்ளார். இவையெல்லாம் அவர் யார் என்பதை உணர்த்துகின்றன. அற்புதமான அரசியல்வாதி அவர்!

நேசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பிரேமதாச நினைவு தினம்:
# அவர் குடும்பமும் இல்லை! கட்சியும் இல்லை!

—ரத்னா

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர். கே. சந்திரானந்த டி சில்வா அவர்களினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம், முன்னாள் ஐ.தே.க. பொதுச் செயலாளரும், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான சிறிசேன குரே அவர்கள், அவசரகாலச் சட்டத்தின் கீழ் (ஜுன் 16ம்திகதி) கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார். செயலாளரினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தேசிய பாதுகாப்புக்கும் சமாதானத்துக்கும் அச்சுறுத்தல் ஏற்படுவதைத் தவிர்க்கவே அவர் கைது செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், இதுவரை உத்தியோக ரீதியில் அரசாங்கம் கைதுக்கான காரணத்தை அறிவிக்காதது பல ஊகங்களை கிளப்பி விட்டிருக்கின்றது. எனலாம் அவையாவன;

★ குரே - ரணில் கூட்டு ஐ.தே.கவுக்குள் பலமான சக்தியாக தோன்றுவதைத் தடுத்தல்.

★ குரே அவர்களின் பிரேமதாச கேந்திர நிலைய நடவடிக்கைகள் காரணமாக, சிக்கலுக்கு உள்ளாகியிருக்கும் ரணில் அவர்களை இக்கைது மூலம் திருப்திபடுத்தி, புதிய அரசியல் யாப்பிற்கு சம்மதம் பெறமுயலுதல்.

★ ஐ.தே.க, பொ.ஐ.மு. ஆகிய கட்சிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுடன் இணைந்து குரே அவர்கள், அரச அதிகாரத்தை பெற முயற்சிக்கும் நடவடிக்கைகளைத் தடுத்தல்.

★ கட்டான பிரதேச பா.உ. ஒருவரின் மரணம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஆனந்த எனும் நபரை விசாரணை செய்தபோது கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்தமை.

★ மத்திய வங்கி குண்டு வெடிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் புலிகளுக்கு குரேயுடன் தொடர்பு உள்ளதென சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டநபரிடமிருந்து தகவல் கிடைத்துள்ளது.

அத்துடன், ரகசிய பொலிசார், ஜனாதிபதி சந்திரிகா அவர்களை கொல்லத் திட்டம் தீட்டியது தொடர்பாக கைது செய்யப்பட்டார் என பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்ததாக சிங்களப் பத்திரிகையொன்று தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

லலித் அத்துலத் முதலி கொலை விசாரணை தொடர்பான ஆணைக் குழுவினால், குரே அவர்களுக்கு பிடியாணை விடுக்கப்பட்டது தெரிந்ததே. அவர் இலங்கை திரும்புவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே ஆணைக்குழுவின் அத்தாட்சிப்பத்திரம் கலைக்கப் பட்டது. (ஆணைக்குழு நடவடிக்கைகளை துரிதமாக நிறைவேற்றும்படி ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.)

**ஐ.தே.கவின் நடவடிக்கைகள்:**

குரே அவர்கள் சுமார் ஒரு வருடகாலம் வெளிநாட்டில் வசித்துவிட்டு கடந்த ஏப்ரல் மாதம் 29ம் திகதி நாடு திரும்பினார். நாடு திரும்பியதும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச அவர்களின் 73வது ஜனன தினத்தை ஜுன் மாதம் 29ம்திகதி சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் கொண்டாட முயற்சிகளை மேற்கொண்டார். இது ஐ.தே.க வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச அவர்களின் படுகொலையின் பின்னர் குரேயின் தலைமைத்துவத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட பிரேமதாச கேந்திர நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அவ்விழா, ஐ.தே.கவின் கவனத்தை எவ்வளவு தூரம் ஈர்த்தது என்பதற்கு கட்சி நிறைவேற்றுக் குழு எடுத்த இரண்டு தீர்மானங்கள் சான்று பகர்கின்றன.

★ ஐ.தே.க அங்கத்தவர்களினால், பிற நிறுவனங்களுக்கோ, கட்சிக்கோ ஆட்களைச் சேர்ப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

★ கட்சி செயலாளரின் அனுமதியின்றி கட்சி அங்கத்தவர்கள் வெளி வேலைகளில் ஈடுபடுக்கூடாது என்பனவே அத்தீர்மானங்கள்.

அத்துடன் ஜனாதிபதிக்கு எதிராக ''குற்றஞ்சாட்டுதல்'' ஒன்றை ஆளும் கட்சியில் ஒரு சில பா.உ.க்கள் ஐ.தே.கவுடன் இணைந்து மேற்கொள்ளவிருப்பதை சுட்டும் அறிக்கையொன்றை தொடர்பூடகவியலாளர் ஒருவருக்கு வழங்கியதாக ஐ.தே.க, சரத் கொன்கஹாகே அவர்களைக் குற்றம் சாட்டியது. இதன் காரணமாக ஐ.தே.க தலைமைத்துவத்தினால் அவரும், அவரது மனைவியும் ஐ.தே.கவின் அனைத்து அதிகாரங்களிலிருந்தும் நீக்கப்பட்டனர். கொன்கஹாகே தம்பதியினர் சிறிசேன குரே அவர்களுக்கு நெருக்கமானவர்கள். குரே சார்பாக கொன்கஹாகே வழக்காடவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதே.

**பொ.ஐ.மு.வின் தந்திரம்:**

எவ்வாறாயினும் சிறிசேன குரே அவர்களின் கைது பொ.ஐ.முவின் அரசியல் தந்திரத்தையே வெளிப்படுத்துகின்றது. இதுவரை கைதுக்கான காரணம் அரசாங்கத்தினால் உத்தியோக ரீதியாக தெரிவிக்கப்படாமை இதனை தெளிவாக்குகின்றது.

குரேயின் நடவடிக்கைகள் மூலம் ஐ.தே.கவுக்குள் பெரும் பிளவை எதிர்பார்த்த ஆளும் கட்சி, சட்டத்தரணி சொக்ஸியின் தலைமையீட்டில் ரணில் - குரே சிக்கல் தணிக்கப்பட்டதன் காரணமாக ஏமாற்றத்தை சந்தித்தது. மற்றும் குரேயினதும் அனுரா பண்டாரநாயக்காவினதும் தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றிய யோசனையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றம், குரே, அனுரா ஆகியோரது தேசிய அரசாங்க யோசனைகளுக்கு வாய்ப்பாக அமைந்தது. அரசாங்கத்தின் நிகழ்கால அரசியல் போக்கு, அமைச்சரவை மாற்றம் ஆகியவற்றை விரும்பாதவர்களுக்கு இத்தேசிய அரசாங்கம் தொடர்பான செய்தி மகிழ்ச்சிகரமானதாக அமைந்தது. அத்துடன் பொ.ஐ.மு. தலைமைத்துவத்திற்கு எதிராக இருவரும் பாராளுமன்றத்தில் நடவடிக்கை ஒன்றை எடுக்கப்போவதாகவும் தெரியவருகிறது.

ஆரம்பத்தில் குரேயின் நடவடிக்கைகள் ஆளும் கட்சிக்கு சாதகமாக இருந்தபோதிலும் பின்னைய நடவடிக்கைகள் பாதகமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

ஜுன் 29ம்திகதி ஜனன தின விழா தடையின்றி நடைபெறும் என பிரேமதாச கேந்திர நிலையத்தின் இயக்குனரான தயான் ஜயதிலக்க லக்பிம (22.06.1997) பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தார். அவரிடம் ''குரே அவர்களின் கைது அமைப்பின் நடவடிக்கைகளுக்கு தடையா'' என வினவியபொழுது அவர் ''குரே அவர்கள் இருந்தால் அமைப்பின் செயல்பாடுகள் துரித

→

# இருண்ட ஐரோப்பாவை நோக்கி...




சிறந்த ஜனநாயக மரபுகளை பேணிப்பாதுகாப்பதாகவும், மனித உரிமைகளை மதிப்பதாகவும் மார்தட்டிக்கொள்வதில் நெதர்லாந்தும் சளைத்ததல்ல. உலகத்தில் சிறந்த பல ஜனநாயக நாடுகளில் ஒன்றாக உலக மக்களாலும் தனது சொந்த நாட்டு மக்களாலும், மதிக்கப்பட்ட நெதர்லாந்தின் ஜனநாயக முகமூடி அண்மையில் கிழிபட்டது. தனக்கு எதிராக கிளம்பும் எந்தவொரு தீவிரவாத எதிர்க்கட்சியையும்நெதர்லாந்து அரசு பொறுத்துக்கொள்ளாது என்பதை அது தலைநகர் அம்ஸ்ரடாமில் குறிப்பால் உணர்த்தியது.

ஜுன் 16ம், 17ம் திகதிகளில் ஐரோப்பிய ஒன்றிய (EU) நாடுகளின் தலைவர்களது உச்சிமகாநாடு அம்ஸ்ரடாமில் கூட்டப்பட்டது. **Eurotop** என்றழைக்கப்பட்ட இம் மகாநாட்டில் ஒன்றிணைந்த ஐரோப்பாவிற்கான பொது நாணயமான **EMU (European monetary Union)** ஐ 20ம் நூற்றாண்டின் இறுதியில் புழக்கத்திற்கு கொண்டு வருவது சம்பந்தமாக இறுதி முடிவுகள் இம் மகாநாட்டில் எடுக்கப்பட்டன.

மேலும் Fort Europa ஒன்றை உருவாக்கி புதிய அகதிகள் வருகையை தடைசெய்வது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் இம் மகாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகளை தத்தமது நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்ற எந்த அக்கறையுமின்றி அதாவது மக்களது விருப்பை அறியாமலே ஐரோப்பிய ஒன்றிய கட்டமைப்பில், அந்நாட்டு தலைவர்கள் முழுமூச்சாய் இறங்கினர். யூரோநாணய (EMU)த்தின் வருகை, அதனால் வருங்காலத்தில் ஏற்படப்போகும் விளைவுகள் என்பன பெரும் முதலாளிகளுக்கு சாதகமாகவும், சாதாரணமாக மக்களுக்கு பாதகமாகவும் அமையப் போகின்றது. இதனை முன்கூட்டியே ஐரோப்பியநாடுகளை சேர்ந்த 331 பொருளாதார நிபுணர்கள் எடுத்துக்கூறியும், அவர்களது வேண்டுகோள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளது. அதேநேரம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வாழும் 20 மில்லியன் வேலையற்றோரினதும், 50 மில்லியன் வறிய மக்களினதும் நலன் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் அக்கறைப்படவில்லை. சுருங்கக்கூறின் முதலாளிகளின் ஐரோப்பா உருவாகப் போகின்றது.

விவாதத்துக்குரிய (Eurotop) உச்சி மகாநாடு ஐரோப்பாவில் இதுவரை நலிந்து போயிருந்த இடதுசாரிக் கட்சிகளை ஒன்று சேர வைத்துள்ளது. ஜுன் 14அன்று அம்ஸ்ரடாமில் இடம்பெற்ற மாபெரும் பேரணியில் சுமார் ஐம்பதாயிரம் பேர் கலந்துகொண்டுள்ளனர். நெதர்லாந்தின் அண்மைக்கால வரலாற்றில் இடம்பெற்ற மாபெரும் மக்கள் எழுச்சியாக கருதப்பட்ட இப்பேரணியில் ஐரோப்பாவின் பல பாகங்களில் இருந்தும் வந்து சேர்ந்த வறிய வேலை வாய்ப்பற்ற மக்கள் கலந்து கொண்டனர். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், பல்வேறுபட்ட பொதுவுடமைக் கட்சிகள் புதிய உத்வேகத்துடன் கலந்துகொண்டதையும், புரட்சிக்காக அறைகூவல் விடுத்ததையும் காணக்கூடியதாகவிருந்தது.

இவற்றை விட தீவிர இடதுசாரி இளைஞர் குழுக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் நெதர்லாந்து பொலிசாரினால் தடுத்துநிறுத்தப்பட்டதோடல்லாமல் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். மேலும் 200 பேர் அடுத்த நாள் இடம்பெற்ற ஒன்று கூடலின் போது கைது செய்யப்பட்டனர். இதுவரை மொத்தம் 300க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கைதுகளின்போது பொலிசாரினால் வன்முறை பிரயோகிக்கப்பட்டதாக நேரில் கண்ட பத்திரிகையாளர் கூறியுள்ளனர். (பார்க்க; படம்) கைது செய்ததற்கு காரணங்களாக சில கட்டுக்கதைகளை பொலிசார் சோடித்தனர். பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாகவும், சட்டவிரோதமாக ஒன்று கூடியதாகவும் பொலிசார் தெரிவித்தனர். ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் எந்தவொரு பொதுச் சொத்தையும் சேதப்படுத்தாது அமைதியாக நடந்து கொண்டனர் என நேரில் கண்ட சாட்சிகள் கூறினர். மேலும் எந்த ஊர்வலத்திற்கும் தடையில்லையென நகர - பிதா ஏற்கெனவே அறிவித்திருந்த போதும் இதை சட்டவிரோத ஒன்று கூடலாக பொலிஸ் கருதியது வேடிக்கையானது. மேலும் இது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை தடைசெய்யும் ஒரு நடவடிக்கையுமாகும். இந்த ஆர்ப்பாட்டக்காரரின் வழக்கை விசாரித்த நீதிபதி, பொலிசாரின் இந்தக்கைது நடவடிக்கை சட்டத்திற்கு மாறானது எனவும், அரசு சட்டத்தை தவறாகக் கையாண்டிருப்பதாகவும் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

எது எப்படியிருப்பினும், நெதர்லாந்து பொலிசாரின் இந்த மனித உரிமை மீறல்கள் கண்டிக்கப்பட வேண்டியவை. மேலும், கைது செய்யப்பட்ட யுவதிகளின் மீது பாலியல் துஷ்பிரயோகம் இடம் பெற்றதாகவும்பொலிஸ்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தம்மை துன்புறுத்தியதாகவும் விடுதலையான கைதிகள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான சம்பவங்கள், இனி வரும் ஐரோப்பிய முதலாளித்துவ சர்வாதிகாரம், தனக்கெதிரான தீவிர இடதுசாரி சக்திகளை இரும்புக்கரம் கொண்டு அடக்க விரும்புகிறது என்பதை உணர்த்துகின்றன.

**நெதர்லாந்திலிருந்து**
**கலையரசன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காப்பரணிற்குள் கருத்தாழமிக்க மனிதர்கள் தான் கருத்தரிக்கின்றனர்!

எஸ்.ஜி.ராகவன்

சரிநிகரில் பெண்புலிகள் குறித்து ராதிகா குமாரசுவாமியால் ஆற்றப்பட்ட உரையின் தமிழாக்க கட்டுரைக்கு என்னால் எதிர்வினையாக எழுதப்பட்ட இரு தொடர்கட்டுரைகளையும் பிரசுரித்தமைக்கு எனது நன்றிகள். மேலும் சரிநிகரில் பெண் போராளிகளும், பெண் விடுதலையும் குறித்த கருத்துக்களத்தில் காத்திரமான விடயங்களை எதிர்பார்த்திருந்தேன். ரேவ்வும், சுவீஸ் ரஞ்சியுடனும் சுருங்கிப்போகுமோ? என எண்ணிய வேளையில் சரிநிகர் 120ல் மோகனா சிவானந்த குருவும், சிவசேகரமும் கருத்துக்களை முனவைத்திருந்தனர். அவை வரவேற்கக்கூடியவை.

ராதிகா அவர்களின் கட்டுரைக்கு நான் எதிர்வினை எழுத முனைந்த போது வரிக்கு வரி பதிலிறுக்க வேண்டியேற்பட்டது. இதன் காரணமாக ஏற்பட்ட சொல் வரட்சியினால் ''புத்தகப்பூச்சித்தனம்'' என்ற பதப்பிரயோகத்தை பாவிக்க வேண்டியேற்பட்டது. இப்பதபிரயோகம் ராதிகா அவர்களை கடுமையாக பாதித்திருப்பின் இதனையிட்டு மனம் வருந்துகின்றேன். ராதிகா அவர்கள் புத்தகங்களை நேசிப்பதையிட்டு நான் எள்ளளவும் சந்தேகம் கொள்ளவில்லை. அவர் புத்தகங்களை நேசிக்கின்றமையால்த்தான் பொறுப்புமிக்க உயர் பதவியொன்றை அலங்கரிக்கின்றார்.

உண்மையிலேயே புத்தகப் பூச்சித்தனம் என்ற பதத்திற்குள் நான் கூற முற்பட்டது என்னவெனில், ஈழவிடுதலைப் போராட்டம் நீதி நியாயங்களின் பக்கம் சாய்ந்திருக்கின்றமை இலகுவாக எவருக்கும் புரியும் போது போராட்டத்தின் பங்காளிப் பெண்களின் வருகையும் அதன் பின்னான பெண்களின் மறுமலர்ச்சி பற்றியும் பிரச்சினைக்குள்ளாக்கும் ராதிகா அவர்கள் தன் கருத்துக்களுக்கு வலுச்சேர்க்க குழப்பியடிக்கின்ற தொடர்பற்ற புதிய வியாக்கியானங்களை முன்வைக்கின்றார். புத்தகங்களையும், வேறு பிரசுரங்களையும் அடிப்படையாக வைத்துத்தான் போராட்டத்தின் கனமான பக்கங்கள் இவரால் அறியப்படுகிறது. இவை எந்தளவிற்கு அவரிடம் மாறுபட்ட கருத்துக்களை தோற்றுவித்திருக்கின்றது என்பதற்கு அவரது கட்டுரைகளே சாட்சி என்பதிலிருந்து பெண் விடுதலை குறித்த ராதிகா அவர்களின் மாறுபட்ட கருத்தியலை விமர்சிக்க புத்தகப் பூச்சித்தனம் என்பதை விட மோகனா சிவானந்தகுரு சொல்வதைப் போன்று மேசைகள் முன் அமர்ந்து ஆய்வுகளைச்செய்வதன் மூலமோ அறிக்கைகளை விடுவதன் மூலமோ எல்லாப் பிரச்சினைகளையும் யாராலுமே தீர்த்துவிட முடியாது என்பது மிகப் பொருத்தமானது என நினைக்கின்றேன்.

சரிநிகர் (112, 113, 118) இதழ்களில் ராதிகா அவர்களின் கட்டுரைகளிலிருந்து (எனக்கான பதிலுரையிலும்) என் மத்தியில் சில கேள்விகள் எழுகின்றன. அவற்றினைத் தர விரும்புகின்றேன்.

(அ) மாற்றங்கள் வரலாற்றுத் தேவையாக இருக்கின்றன அல்லது வரலாற்றில் மாற்றங்கள் நிகழ்கின்றன. இவ்வகையான மாற்றங்கள் சமூகத் தேவையாகவும், புரட்சிகரமானதாகவும் இருக்கும் போது புரட்சியின் பிற்பட்ட காலப்பகுதிகளில் சமூகம் இவற்றைப் புறக்கணிக்குமா?

(ஆ) யுத்தம் ஒன்று நடைபெற்றால் எவ்வகையிலும் மனிதாபிமானப் பிரச்சினை எழவே செய்யும். பெண்கள் அறவே யுத்தகிற்கு செல்லாதிருந்தால், நன்றாக இருந்திருக்கும் என்கிறார் ராதிகா அவர்கள். நல்லது அப்படியானால் ஆண்கள் யுத்தத்திற்குச் செல்வதை ஏற்றுக்கொள்ளலாமா? இதன் மூலம் மனிதாபிமானப் பிரச்சினைகள் எழாதா? ஆண்கள் மாத்திரம் யுத்தத்திற்குச் செல்வதால் மனிதாபிமானப் பிரச்சினைகள் மட்டுமல்ல பாரியளவிலான சமூகப்பிரச்சினைகளும் எழும் என்பதை உணரவில்லையா? ஒரு சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு முகங்கொடுக்கும் உரிமை கூட பெண்களுக்கு இருக்கக் கூடாதா? ஒரு போராளிப்பெண் குண்டைக் கட்டி வெடிக்கவைத்த பின் தானும் சிதைந்து சிதைக்க வேண்டிய வற்றையும் சிதைக்கிறாள். ஆனால் அவள் அவ்வாறு சிதையமுன் அவளும் அவள் சமூகமும் சந்தித்துக்கொண்டிருக்கின்ற கொடுமைகளுக்கு யார்தான் முற்றுப்புள்ளி வைப்பார்கள்? போராளிப்பெண்ணினதும், அவள் சார்ந்த சமூகத்தினதும் வாழ்வியல் கேள்விக்குறியானபோது போராளிப்பெண் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப் புறப்பட்டது தவறானதா? ராதிகா அவர்கள் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் குறித்து என்ன சொல்கிறார்? அதில் பெண்களின் பங்களிப்பு பற்றி என்ன சொல்கிறார்? நான் நினைக்கிறேன், அவர் சொல்வார் போலும், சுதந்திரத்திற்காக போராடும் தமிழர்கள் அல்பானியாவை உதாரணமாகப் பார்க்காதீர்கள்; ஆப்கானிய தலிபான் தீவிரவாதிகளை பாருங்கள் என (ஆப்கானில்தான் பெண்கள் யுத்தம் செய்வதுமில்லை பெண்ணுரிமையும் பேசுவதில்லை)

(இ) எமது தேசியம் சிதைவுறுத்தப்படும் போது நாம் சர்வதேசத்தைப் பற்றிச் சிந்திக்க முடியாது. சர்வதேச விழுமியங்கள் காக்கப்படுவது கூட தேசிய இனங்கள் சமத்துவமாக நடாத்தப்படும் போதுதான் சாத்தியமாகும். அம்பாறை தீப்பிடித்து எரிகின்றபோது என்னை ஆபிரிக்காவில் எரிகின்ற தீயைப் பற்றி கவலைப்படும்படி கூற முடியாது. முதலில் அயல், பின்னர்தான் அகிலம். ஆகவே உலகளாவிய விழுமியங்கள் குறித்து கடுங்கவலை கொள்வோர் இனத்துவ தேசியவாதத் தத்துவார்த்தங்கள், சுயநிர்ணய கோரிக்கைகளால் எழுகின்ற பிரச்சினைகளுக்கு நீதியான முறையில் தீர்வு காணாது மேற்கூறிய உலகளாவிய விழுமியங்களைக் காக்க முடியாது என்ற யதார்த்தத்தை விளங்க முன்வர வேண்டும். 21ம் நூற்றாண்டு தேசியங்களின் நூற்றாண்டாக உருவெடுத்து வருகின்ற சூழலில் ஐ.நா சபை கூட அது குறித்து கரிசனை கொள்ளத் தொடங்கியுள்ளது. தேசியங்களின் எழுச்சி வரலாற்றுத் தேவையாக இருக்கின்ற போது ஐ.நா.சாசனங்கள் கூட தேசியங்களின் உருவாக்கத்தையும், உரிமைகளையும் மறுதலிக்க முடியாதெனக் கூறும் போது ராதிகா அவர்கள் எவ்வாறு தேசியத்தின் தேவையை உதறிவிட்டு உலகளாவிய சமூக விழுமியங்களை கட்டிக் காக்கப் புறப்படுவதாகக் கூற முடியும்?

> "உலகளாவிய விழுமியங்கள் குறித்து கடுங்கவலை கொள்வோர் இனத்துவ தேசியவாதத் தத்துவார்த்தங்கள், சுயநிர்ணய கோரிக்கைகளால் எழுகின்ற பிரச்சினைகளுக்கு நீதியான முறையில் தீர்வு காணாது மேற்கூறிய உலகளாவிய விழுமியங்களைக் காக்க முடியாது"



(ஈ) பெண் விடுதலை என்பதன் பூரண வெற்றி ஆண், பெண் புரிந்துணர்வுகளின் நெகிழ்ச்சித்தன்மையால் ஏற்படுத்தக் கூடியதே ஒழிய ஆண்களை முற்றாக எதிர்க்கின்ற தன்மைகளால் அல்ல. பெண்கள் மீதான அடக்கு முறை, அடாவடித்தனம், துஷ்பிரயோகங்களையும் மற்றும் பெண் விடுதலை குறித்த இன்னோரென்ன நடவடிக்கைகளை மேற்கொள்வதை விடுத்து ஆண்களை காட்டேறித்தனமாக எதிர்க்கின்ற கருத்தாழமற்ற செயற்பாடுகள் பெண்விடுதலை குறித்த உண்மையான பிரச்சினைகளை கண்டறியத்தவறிவிடுகிறது.

ராதிகா அவர்கள் எனது கட்டுரையிலிருந்து ஆணாதிக்கப் பண்புடைய கருத்துத்தெறிப்பதாக கூறுகிறார். இதனை கோடிகாட்டியிருந்தால் நல்லாயிருந்திருக்கும். ஏனெனில், காப்பரண் வாழ்வியலை சிலகாலமேனும் அனுபவித்தவன் என்ற வகையில் அந்த ஆணாதிக்க பண்புகளை இனங்கண்டு புறந்தள்ள எனக்கு உதவக்கூடியதாக அமைந்திருக்கும் சிவசேகரமும் என்னிடமுள்ள ஆணாதிக்கப் பண்புகளை சுட்டிக்காட்டியிருக்கலாம். பூப்புனித நீராட்டு விழா பெண்ணடிமைத்தனமானது என்று இப்போது தான் கேள்விப்படுகிறேன். இவ்விழா பெண்ணடிமைத்தனமானதாயின் அதனை நிராகரிப்பதையிட்டு யாருமே ஆட்சேபிக்கப் போவதில்லை.

1977லிருந்து இன்று வரை இன அடக்குமுறையின் கொடும் வன்செயலை அனுபவித்தும் மற்றைய தமிழர்கள் தற்போது அனுபவிப்பவற்றை பார்த்தவன் என்றவகையிலும் கொடிய யுத்தம் இன அடக்குமுறையும் ஒழிந்து போவதாக என எந்நாளும் பிரார்த்திக்கும் நான் யுத்தத்தை எந்த வகையிலும் ஆதரிக்கவில்லை.

இக்கொடிய யுத்தம் ஒழிந்து போகும் பட்சத்தில் தமிழர்கள் சுயநிர்ணய உரிமையைப் பெற்றப்பின் ஜனநாயகச் சூழலுக்கும் மாற்றுக் கருத்துக்களுக்காவும் போராட வேண்டியேற்படின் புலிகளையும் நிராகரிக்க தமிழ் மக்கள் தயங்க மாட்டார்கள்.

இறுதியாக 21ம் நூற்றாண்டில் தேசியங்களின் பிரச்சினைகளை இனங்காணாது உலகளாவிய ரீதியில் மனிதத்துவ மேம்பாடு பற்றி பேசுவதைவிட சிவசேகரம் சொல்வதைப்போன்று மணலுக்குள் தலையைப் புதைப்பது யதார்த்தமானது தான். அதனையும் விட தலையை மாத்திரம் அல்ல உடலையே புதைத்து சமாதியடையலாம்.

''யதார்த்தத்தை விளங்கிக்கொள்ள முடியாத புத்தியீவித்தனம் செத்துப் போன பிணம் ஒன்றின் மூளைக்குச் சமமானது''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கைத்தமிழர் உயர்கல்வி: சில அவதானங்கள்

இலங்கைக்குத்தேசியபல்கலைக் கழகமொன்று தேவை எனக் கூறி பாடுபட்டவர்களில் முக்கிய மானவர்கள் பொன்னம்பலம் சகோதரர்கள், கலாநிதி ஆனந்த குமாரமி போன்ற. இலங்கைத் தமிழர்களாவர். தேசிய மறுமலர்ச் சிக்கும் மொழி கலாசார மேம்பாட் டுக்கும் உதவக் கூடியது முழுமை யான பல்கலைக் கழக அமைப்பே என்று வாதிட்டனர். ஏறத்தாழ நான்கு தசாப்தகால போராட்டத்தின் பின்னர் 1942ஆம் ஆண்டில் தான் இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

19ம் நூற்றாண்டிலேயே இந்தியா வில் பம்பாய், கல்கத்தா, சென்னைப் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டு விட்டன. இலங்கையில் 1921இல் நிறுவப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரியுடன் அப்போதைக்கு இலங்கையர்கள் திருப்தியுற வேண்டியிருந்தது.

1942 இல் இலங்கைப் பல்கலைக் கழகம் உருவான பின்னர், நாட்டின் பல்கலைக்கழகக் கல்வி வளர்ச்சி யில், தமிழ் அறிஞர்கள் பலரின் உழைப்பும், சிந்தனையும் முக்கிய பங்கு கொண்டன. பல்வேறு போதனாபீடங்களின் பண்பு ரீதியான வளர்ச்சிக்குத் தமிழ் அறிஞர்களும், பேராசிரியர்களும் பலவழிகளில் தொண்டாற்றினர். பல முதலாம் தலைமுறைப் பேராசி ரியர்களின் பணியை இவ்விடத்து நினைவு கூரவேண்டும்.

கு. நேசையா, அருட்தந்தை தனிநாயகம் அடிகள், விபுலானந்த அடிகள், பேராசிரியர் கணபதிப் பிள்ளை, வித்தியானந்தன், எலி யேசர், சி. அரசரத்னம், ஏ.ஜே. வில்சன், எஸ். இராஜரத்னம் என்று இப்பட்டியல் நன்கு நீளும்.


1950களிலும் 1960களிலும் தமிழ் அறிஞர்கள், பொருளியல், அரசி யல், வரலாறு, புவியியல், கல்வியியல் முதலிய துறைகளில் ஆராய்ச்சிப் புலமை மிகுந்தோராய் முன்னணியில் நின்றனர்.

இன்று தமிழர் தம் வரலாறு, சமூகவியல், பொருளியல் போன்ற இன்னோரன்ன துறைகளில் ஆய்வுகளையும் பன்னெறி சார்ந்த ஆராய்ச்சிகளைச் செய்து தமிழர் மேம்பாட்டுக்கான வழிகாட்டலைச் செய்ய போதிய உயர் மட்ட அறிஞர் குழாம் இல்லையென்ற நிலையே தோன்றிவிட்டது. இத்துறைகளி லெல்லாம் ஓரிரு சிறப்பறிஞர் மட்டுமே காணப்படுகின்றனர். சமூகவியல், மானிடவியல், உளவி யல் போன்ற துறைகளில் தேர்ச் சிப்பெற்ற சிறப்பறிஞர்கள் ஒருவர் கூட இல்லை.

தமிழியல், புவியியல் போன்ற துறை சார்ந்த பல இரண்டாம் தலைமுறை ஆய்வாளர்களில் நவீன ஆய்வுப் போக்குகளுக்கமைய இத்துறை ஆய்வுகளை அரசியல், சமூக, பொருளாதார செல்நெறிகளுடன் இயைபுபடுத்திச் சிந்திக்கக்கூடிய பன்னெறிச் சிந்தனையாளர்களின் தொகை அருகி வருவதைக் குறிப் பிட்டுக் கூறவேண்டியுள்ளது.

எடுத்துக்காட்டாக, இன்று இனப் பிரச்சினை தொடர்பாக தமிழர்க ளுக்கு சாதகமான, பாதகமான கருத்துக்களை வரலாறு, பொரு ளியல், அரசியல், சமூகவியல் என்ற பல்வேறு நிலைப்பாடுகளிலிருந்து வெளியிடுவோரும் கட்டுரைகள் எழுதுவோரும் பொதுவாகத் தமிழரல்லாத அறிஞர்களாகவே உள்ளனர். காலஞ்சென்ற நியூட்டன் குணசிங்க மற்றும் ஜயதேவ உயங்கொட, ஜெஹான் பெரேரா போன்றோரின் இனப்பிரச்சினைத் தொடர்பான தாராண்மை வாதக் கருத்துக்கள் போன்றவற்றுக்கு இணைப்பானவை உள்நாட்டு தமிழ் அறிஞரால் அதிகம் முன்வைக்கப் படவில்லை. ஏ.ஜே.வில்சன், எஸ்.ஜே. தம்பையா போன்றோர் வெளிநாட்டிலிருந்து விரிவாக எழுதுவது வேறு விடயம். அவ்வாறே தேசிய பொருளாதாரம், கல்வி முறை, சுற்றாடல் பிரச்சினை கள் போன்ற விடயங்கள் பற்றிக் காத்திரமாக சிந்தித்து எழுதும் பல்கலைக்கழகத் தமிழ் ஆய்வாளர் கள் மிகவும் அருகிவருகின்றனர். அறிஞர் தொகை குறையும்போது ஆய்வுகளும் எழுத்துப் பங்களிப் பும் குறைவது தவிர்க்க முடியாததே.

இலங்கைவாழ் இந்திய வம்சாவ ழியினர் பற்றி சில வார்த்தைகள் பற்றி சொல்லவேண்டும். கடந்த 50 ஆண்டு காலப் பல்கலைக்கழகக் கல்வி வளர்ச்சி இவர்கள் மத்தியில் 4-5 அறிஞர்களையாவது சரியாக உருவாக்கவில்லை. பேராசிரியர்கள் சின்னத்தம்பி, மூக்கையா, சந்திர சேகரன் - இதற்கு மேல் பட்டியல் நீளவில்லை. வரலாறு, இலக்கியம்,



சமூகவியல் என்று பற்பல துறைகளில் ஆய்வாளர்கள் எவரும் தோன்றவில்லை. இந் நிலையில் ஆய்வுப் பயிற்சியும் புலமையும் அற்றோர் தமது ஆற்றலுக்கேற்ப வெளியிட்டுவரும் சிறு பிரசுரங் களை இனம் காண முடிகின்றது.

உயர்கல்வி வாய்ப்புக்களைப் பெறாத இவ்வெழுத்தாளர்கள் முறையான உயர்கல்வியைப்பெற்றி ருந்தால் தமது சமூக, இலக்கிய ஆர்வங்களைக்கொண்டு ஒரு புதிய அறிஞர் தலைமுறையை உருவாக்கி யிருப்பர். இம்மக்கள் மத்தியில் கலை, இலக்கிய ஆர்வலர்களும், எழுத்தாளர்களும் வளர்ந்த அளவுக்கு சமூக அறிவியல் அறிஞர்கள் வளர்ச்சி பெறவில்லை.

நாட்டின் பல பகுதிகளிலும் செறிந்து வாழும் தமிழ் மக்கள் தம் பொருளாதார, அரசியல், சமூக, பண்பாடு மற்றும் கல்வித்துறைச் சிரழிவுகள்பற்றிய ஆய்வுபூர்வமான எழுத்துக்கள் இன்றைய ஒரு அத்தியாவசிய தேவை; தமிழ் மக்கள் இத்துறைகளில் இதுவரை காலமும் நடந்து வந்த பாதை, அவர்கள் கடந்து வந்த பாதை பற்றிய ஆறிவுபூர்வமான ஆக்கபூர் வமான ஒரு மதிப்பீடும் இன்றைய அவர்தம் நிலைமை பற்றிய கணிப்பீடும் தேவை. இவற்றை செய்யக்கூடிய கற்றறிவாளர்களின் பற்றாக்குறை எமது பல்கலைக் கழகங்களிலும் சமூகத்தின் மத்தியி லும் காணப்படுவது சுட்டிக்காட்டப் பட வேண்டிய ஒரு குறை. ஒரு சமூகத்தை அதன் பல்பரிமாண மேம்பாடு நோக்கி வழிநடத்திச் செல்லும் பொறுப்பை அச் சமூகத் தின் அரசியல் தலைமைப்பீடங்கள் மட்டும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது. சமூக மேம்பாட்டை நெறிப்படுத்தி வழிகாட்டக்கூடிய அறிவும் ஆற்றலுமிக்க சிந்தனையா ளர்களின் தலைமைத்துவமும் தேவை. உலகளாவிய புதிய போக்கு கள் கடந்த காலம், தற்காலம் பற்றிய வரலாற்றுணர்வு மட்டுமன்றி, எதிர்கால அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு, கல்வி முறைச் செல்நெறிகள் பற்றிய அறிவும் உணர்வும் இன்றைய அபிவிருத்திக் கொள்கைகள் பற்றித் தீர்மானிக்கத் தேவை என வலியுறுத்துகின்றன. இத்தகைய எதிர்காலவியல் நோக்கும் ஆய்வுப் பண்பும் எமது நாட்டில் தோன்றி விட்ட நிலையில், தமிழ்ச் சமூகம் இத்தகைய எதிர்கால வியல் சிந்தனையாளரின் பற்றாக் குறையுடன் நலிந்து வருவதைக் குறிப்பிடல் வேண்டும்.

இன்றைய பல்கலைக்கழகக் கல் வியில் மரபுவழி அம்சங்களின் செறிவை இலகுவில் இனங்காண முடிகின்றது. பாடசாலையின் உயர். நிலைக் கல்வி நிலை (ஆண்டு 12, 13) விஞ்ஞானம், கலை, வர்த்தக வியல் என்பவற்றை மட்டும் உள்ளடக்கிப் பின்னர் பல்கலைக் கழகக்கல்வி மருத்துவம், பொறியி யல், விஞ்ஞானம், கலை, முகாமைத் துவம், சட்டம் என்னும் மரபுவழித் துறைகளுடன் முற்றுப் பெறுகின் றது. புதிய பயிற்சி நெறி மாற்றங் களும் சீர்திருத்தங்களும் இவற்றை அண்டியதாகவே அமைந்துள்ளன.

சமூக அறிவியல், இயற்கை அறிவி யல் முதலாம் துறைகளில் இன்று ஏற்பட்டுவரும் பெருவாரி வளர்ச்சி, இரண்டொரு பாடநெறிகளுக்குள் உள்ள பிணைப்பால் ஏற்பட்டு வந்த பன்னெறி அணுகுமுறை (Inter-disciplinary approach), பல்வகைக் கலை மற்றும் அறிவியல், தொழில் நுட்ப இணைப்பினால் ஏற்பட்டு வரும் பிணைப்புத்துறைகள் (Composite disciplines) என்ற நவீன செல் நெறிகள் பற்றிய உணர்வின்றி பல்கலைக்கழகப் பயிற்சி நெறிகள் மரபுவழியில் இயங்கி வருகின்றன. இப்புதிய செல்நெறிகள் அறிவுத் துறைகளின் துரிதமான வளர்ச்சியை விட அவற்றின் அடிப்படை அமைப்பு மாற்றங்களையே பிரதிபலிக்கின்றன.

பல்வேறு அறிவுத்துறைகளின் பாகங்களைப் பல விகிதங்களில் சேர்த்து பொருளாதார சமூகவியல், அரசியற் பொருளாதாரம், பண் பாட்டு வரலாறு, விஞ்ஞானத்தின் சமூகவியல் என்று சமூக அறிவியற் துறையில் புதிய துறைகள் வளர்ச்சி பெற்றுள்ளன. இத்துறை சார்ந்த புதிய தலைமுறை ஆய்வறிஞர்கள் தமிழர் மத்தியில் உருவாகும் வகையில் அவர்தம் உயர்கல்வி வளர்ச்சி பெறவில்லை என்பதையே இவ்விடத்து வலியுறுத்த விரும்பு கின்றோம்.

இலங்கையில் 50 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட பல்கலைக் கழகக் கல்விமுறை ஒப்பீட்டளவில் 'சிறிய ஒரு உயர்கல்வி முறையாக' வளர விடப்பட்டமை இந்நாட்டின் சிறுபான்மையின மக்களுக்குப் பாதகமாக - அவர்கள் மத்தியில் பன்னெறி சார்ந்த அறிஞர் குழா மொன்று உருவாகத் தடையாக அமைந்துள்ளது. எட்டுப்பல்கலைக் கழகங்களையும் 32,000 மாணவர் களையும் 2600 ஆசிரியர்களையும் கொண்ட பல்கலைக்கழக அமைப் பில் இன்று தமிழர் வீதாசாரம் மிகக்குறைவு. மக்கள் தொகையில் தமிழர் 18 வீதம் என்ற கணக்கில், 6000 தமிழ் மாணவர், 400 ஆசிரி யர்கள் இருப்பார்களோ என்பது சந்தேகமே! எமது மதிப்பீட்டில் 3500-4000 மாணவர்கள் இருப்ப தாகவும் தெரியவில்லை. மொத்த மாணவரில் தமிழ் மாணவர் தொகை பல்கலைக்கழகக் கையேடு களில் சரியாகத் தரப்படுவதில்லை. அனுமதி ஆண்டிற்குரிய மாணவர் அனுமதி விபரங்கள் இன வாரியா கத் தரப்படுகின்றனவேயன்றி பல்கலைக்கழக மொத்த மாணவர் தொகை அவ்வாறு தரப்படுவ தில்லை.

மொத்த தமிழ் மாணவர்களைப் பல்கலைக்கழகவாரியாகவும் பயிற்சி நெறிவகைப்படியும் கணித் துப் பார்க்கும் போது யாழ். பல்கலைக்கழகம், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் ஆகியவற் றிலேயே பெரும்பான்மையான தமிழ் மாணவர்கள் பயில்வது தெரியவருகின்றது. இவை எந்த அளவுக்கு சகல வசதிகளுடனும், முழுமையாகவும், ஆசிரியர் பற்றாக்குறையின்றி இயங்கி வருகின்றன என்பது யாவரும் அறிந்ததே! பல்வேறு காரணங் களால் இப்பல்கலைக்கழகங்கள் தென்னிலங்கையில் இயங்கும் தேசியப் பல்கலைக்கழகங்களுக்கு இணையான முறையில் வளர்ச்சி பெறவில்லை என்பதை ஆதாரபூர் வமாக நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை.

பெரும்பான்மையான தமிழ் மாண வர்களுக்கான இடங்கள் இப்பல் கலைக்கழகங்களில் ஒதுக்கப்பட்ட நிலையில், தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்கள், சார்பளவில் அமைதியான சூழ்நிலையில் புதிய அமைப்பு மாற்றங்களைப் பெற்று வருகின்றன. தொழிலாளர் கல்வி நிறுவனங்கள், விஞ்ஞானம், மருத்துவம், முகாமைத்துவம், விவசாயம் முதலிய துறைகளில் பட்டப்பின்படிப்பு நிலையங்கள், கம்பியூட்டர் கல்விக்கான விசேட நிறுவனங்கள் எனப்பல்வகையான உயர்கல்வி அமைப்புகள் தென்னி லங்கைப் பல்கலைக்கழகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நவீன பயிற்சி நெறிகளைப் பொறு த்தவரையில் பட்டப்பின்படிப்பு மட்டத்தில் அறிமுகம் செய்யப்பட் டுள்ள சில பயிற்சி நெறிகள்:

-சமுதாய அபிவிருத்தியில் பட்ட பின் படிப்பு

- பெண்ணியல் ஆய்வில் பட்ட பின்படிப்பு (Women studies)

- தொழிலாளர் ஆய்வில் பட்ட பின்படிப்பு (Labour studies)

-பிரயோக உளவியல் பட்டபின் படிப்பு

- உளவியல் பரீட்சை முறையில் பட்ட பின்படிப்பு (Psychological testing)

ஆலோசனை வழங்கலில் பட்ட பின்படிப்பு (Councelling)

இவை மாதிரிக்குச் சிலவே! இப் பயிற்சி நெறிகளில் சில சிங்கள மொழியில் மட்டுமே நடாத்தப் படுகின்றன. இந்நிலையில் தமிழ் மாணவர்கள் இப்புதிய பயிற்சி நெறிகளைக் கற்றுத் தேறமுடியாத நிலை காணப்படுகிறது.

சுருங்கக்கூறின் தென்னிலங்கையில் பட்டப்படிப்புக் கல்வியும், பட்டப் பின்படிப்புக் கல்வியும் சமூக அறிவியற் துறை சார்ந்த ஆராய்ச்சிப் பயிற்சி நெறிகளும் பல புதிய பரிமாணங்களைக் கண்டு வருகின் றன. தமிழர்கள் பெருமளவுக்கு இப்புதிய உயர்கல்வி பாரம்பரியங் களுடன் எதுவித தொடர்புமின்றி வாழுகின்றனர். அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகளில் உயர் கல்வி தவிர்ந்த ஏனைய விடயங் களான வாழ்க்கைப் பாதுகாப்பு, வெளிநாடு செல்லல், புனர்வாழ்வு போன்ற அம்சங்கள் முன்னுரிமை பெற்று வருவது கண்கூடு.

இலங்கைப் பல்கலைக்கழக அமைப் பில் அனுமதி பெற்று உயர்கல்வி கற்றுவரும் தமிழ் மாணவர் தொகுதியில் மற்றொரு விசேட அம்சம் உண்டு. வடகிழக்கில் உள்ள 8 மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய சில தென்னிலங்கை மாவட்டங் களில் (கொழும்பு, கண்டி, நுவ ரெலியா, பதுளை போன்றன) தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்றனர் இவ்வாறு தமிழர்கள் பல மாவட் டங்களில் வாழந்தாலும் தமிழர்க ளுக்கான பல்கலைக்கழக அனுமதி யையும், பல்கலைக்கழகக் கல்வியில் தமிழர்களுக்குரிய உரிமையையும் பேணிப்பாதுகாப்பதற்கு யாழ். மாவட்ட மாணவர்களின் உயர்ந்த பெறுபேறுகளே உதவுகின்றன. நாடளாவிய ரீதியில் அனுமதி பெறும் தமிழ் மாணவரில் எறத்தாழ 70-75 வீதமானவர்கள் யாழ். மாணவர்களே! அனுமதி பெறும் மாணவர்களில் 45 வீதமானவர்கள் திறமை சித்தியடிப்படையில் தெரிவு செய்யப்படுவதால், யாழ். மாவட்ட மாணவர்கள், அனுமதியில் முன்னணியில் நிற்கின்றனர்.

இதன் முக்கிய தாற்பரியம் யாதெனில், யாழ். மாணவர்களின் கல்வி நிலை தற்போதைய போர்ச் சூழ்லினால் பாதிக்கப்பட்டு பெறு பேறுகளில் வீழ்ச்சி ஏற்படும் போது, அனுமதி பெறும் தமிழ் மாணவர் தொகையும் வீழ்ச்சியடைய நேரிடும் என்பதாகும். இவ்வீழ்ச்சியை ஏற் கெனவே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அண்மைக் காலங்களில் தமிழ் மாணவர் அனுமதி 1000 இலிருந்து 700ஆக வீழ்ச்சிய டைந்துள்ளது. எதிர்காலத்தில் 10,000 மாணவர்கள் அனுமதி

→19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இறுதிப்பகுதி ....

# பின் நவீனத்துவமும் பின் காலனித்துவமும்

கொ.றொ.கொண்ஸ்ரன்ரைன்

இந்த நவீனத்துவத்தின் அரசியல் வடிவமான ஜனநாயக அரசியல் முறைமை சுதேச சமூகத்தின் பாரம்பரிய அடுக்கமைவுமுறையினை மாற்றியமைப்பதில் உதவியது. எனினும் நீண்ட காலத்தில் அதுவும் தன் ஊடாட்டப் பண்பில் ஒரு புதிய அடுக்கமைவு சமூகத்தை உருவாக்கவே செய்தது. இது பெரும்பான்மை சமூகத்தில் செல்வாக்குள்ள ஒரு சிறு குழுவினரை முக்கியத்துவப்படுத்தி ஒரு அடுக்கமைவு சமூகத்தை கட்டியெழுப்புகிறது. இது மற்றைய நவீனத்துவ, நவீனவாத போக்குகளைப் போலவே ஐரோப்பிய மையவாத சிந்தனையையும் அடுக்கமைவு சமூக அமைப்பையும் பேணும் ஒரு ஊடாட்ட வடிவமாகவே திகழ்கிறது. இந்த வகையில் இதுவும் ஒரு பிரதான கருத்தாடல்தான்.

பல்லினங்களை / பல்தேசியங்களைக்கொண்ட சமூகங்களில்இந்த அடுக்கமைவு நிலையினை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்குலகில் தற்போது பங்கு பற்றல் ஜனநாயகம் (Participatory Democrasy) என்ற கருத்தாக்கம் முன்வைக்கப்பட்டு வருகிறது. இது பின் நவீன வாழ்வியலின் ஒரு விளைவாகவே கருதப்படவேண்டும்.

பின்நவீனத்துவமானது ஐரோப்பிய மையவாத, மேலைத்துவ போக்குகளின் முக்கியத்துவத்தை அல்லது முதன்மையினை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இதன் விளைவாக பின்காலனித்துவ உணர்வுகள் புதிய உத்வேகத்தினைப் பெற்றுள்ளன. இருப்பினும் மேலைத்தேசத்தவரிடையே பின்காலனித்துவம் ஒரு புதிய சிக்கலையும் ஏற்படுத்தவே செய்கிறது.

பின்காலனித்துவமானது தேசியவாத வளர்ச்சியுடன் தொடர்புடையது. இந்த தேசியவாத (Nationalism) சிந்தனை மேலைத்தேய சிந்தனையாளரிட்த்தில் பல்வேறுபட்டஎதிர் வினைகளைத் தோற்றுவித்துள்ளது. பின்காலனித்துவத்தைப் பற்றிப் பேசும் பல மேலைத்தேய சிந்தனையாளர்கள் தேசியவாதத்தை பற்றி பெரிதாக அலசிப்பார்க்கவில்லை.

தேசியவாத கருத்தாடலை இவர்கள் புறந்தள்ளி வைப்பதற்கு நாம் இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று, தேசியவாதமானது காலனித்துவ ஆட்சியை எதிர்த்து இன்னொரு வகையில் சொன்னால் மேலைத்துவத்தை எதிர்த்து எழுந்த சக்தியாகவே வரலாறு காட்டுகிறது. மற்றையது தேசியவாத கருத்தாடல் நாசி தேசியவாதத்தையும் அதன் அகோர வடிவங்களையும் பற்றிய நினைவலைகளை மீட்பதாகும். தேசியத்தின் பெயரால் செய்யப்பட்ட கொடுமைகள் மேலைத்தேசத்தவரிடத்தில்இன்னமும் ஒரு வெறுப்புணர்வை ஏற்படுத்தவே செய்கிறது. இவற்றை விட முக்கியமாக தேசியவாத கருத்தாடலானது காலனித்துவ நாடுகளின் ஊடாட்ட பண்பினடியாக உருவாவதால் தமது ஊடாட்ட மேன்மைக்கு ஒரு சவாலாகக் கருதி பாராமுகம் காட்டுவதும் ஒரு காரணமாகும்.

காலனித்துவ ஆட்சிக்கு எதிராக காலனித்துவ காலத்தில் உருவாகிய தேசியவாதங்கள் பின் நவீனத்துவ, பின்காலனித்துவ காலத்து தேசியவாதத்திலிருந்து சில அடிப்படைகளில் வேறுபடவே செய்கிறது. காலனித்துவத்துக்கு எதிரான அக்காலத்து தேசியவாதம் பாரம்பரிய அடுக்கமைவு சமூகத்தின் மீள் உருவாக்கத்தையும் 'மரபுகளையும்' மீட்டெடுக்கும் ஒரு எதிர்வினைத் தன்மை (Reactionary) கொண்டதாகவே அமைந்தது. இந்தவகையான தேசியவாதம் பல பிரச்சினைகளின் ஆரம்பத்தினையே குறிக்கிறது.

இதன் ஒரு வெளிப்பாடாக நாமதலித்தியத்தை கருதலாம்.

பின்காலனித்துவ / பின்நவீனத்துவ தேசியமானது பாரம்பரிய சமூகத்தை கட்டவிழ்ப்பு செய்யும் அதே வேளை, ஐரோப்பிய மையவாத காலனித்துவ மனச்சட்டகத்தையும் தகர்த்து ஒரு புதிய கருத்தாடலை உருவாக்க வேண்டும். ஆகவே பின்காலனித்துவ தேசியமானது இந்த சூழ்நிலையில் வாழ்பவர்களது ஊடாட்டப்பண்புகளிலிருந்து மேற்கிளம்பும் ஒரு புதிய் கருத்தாடலாக அமைய வேண்டும்.

மொழியானது பின் காலனித்துவத்திலும் தேசியவாதத்திலும் முக்கிய இடத்தை வகிக்கிறது. பல்தேசிய முதலாளித்துவ மொழியாக ஆங்கிலம் அமைவதனால் சுதேசிகளின் மொழி பெருமளவில் பயன்பாடற்றதாகியுள்ளதாக கருதப்படுகிறது.



இதனால் முதலாளித்துவ அச்சுக்கலையின் வளர்ச்சியின் பயனாகவே அது முதன்மைப்படுத்தப்பட்டு வருகிறது என சிலர் கருதுகின்றனர். இவர்களில் பெனடிக்ட் அன்டர்சனின் (Benedict Anderson) கருத்து முக்கியமானது. இவர் தேசியவாதத்தை அச்சுக்கலையின் ஒரு விளைவாகவே காண்கிறார். அதாவது சுதேசிய மொழி அச்சுவடிவில் பிரசுரமாகும் பொழுது, அது சுய அடையாளத்தையும் அதன் வாயிலாக தேசியவாதத்தையும் உருவாக்குவதாக அவர் கருதுகிறார்.

சர்வதேச ஊடாட்ட மொழி ஆங்கிலமாகவும் சுதேசிகளின் மொழி வேறாகவும் அமையும் பொழுது அது பின்காலனித்துவ சமூகத்தில் ஒரு புதிய சிக்கலை உண்டு பண்ணுகிறது. சுதேசிய மொழிகளின் வாயிலாக சர்வதேச ஊடாட்டத்தில் ஈடுபட முடியாமையும் ஆங்கிலத்தின் அவசியமுமே இதன் அடிப்படை. இந்த வாழ் நிலையதார்த்தத்தினை சைமன் டியூரிங் (Simon During) பின்காலனித்துவத்தில் ஏற்பட்டுள்ள பின் நவீன தன்மையாகக் கருதுகிறார்.

இந்தக் கருத்து நிலையினை வளர்த்துச்செல்லும் டியூரிங் பின்காலனித்துவத்தில் வாழ்பவர்களில் இரு பிரிவினரை இனம் காண்கிறார். ஒரு சாரார் காலனித்துவ ஆட்சி கொடுத்த மேலாதிக்க மனப்பாங்குடன் தம்மை இணைத்துக்கொள்ளாவிடினும் ஆங்கில மொழி அதன் கலாசாரம் ஆகியவற்றை கைவிட முடியாதிருப்பவர்கள் (Post Colonizer) மற்றையோர் காலனித்துவக் காலத்தில் சுதேசிய மொழி கலாசாரம் என்பவற்றின் சீரழிவுடன் தம்மை இனங்காண்பவர்கள் (Post Colonized). இது ஆங்கிலத்தை தம் தாய் மொழியாகவோ பிரதான மொழியாகவோ கொள்ளாத சமூகங்களிலேயே, செயற்படுகிறது.

பின் காலனித்துவ கருத்து நிலைகளை பாதிக்கும் பிறிதொரு அம்சம் பல்வேறு சமூகங்களில் காணப்படும் ஊடாட்ட பண்புகளின் பன்முகத்தன்மை. இந்த கருத்தாக்கத்தை விளக்குவதற்கு லொயிடார்ட் 'வித்தியாசம்' (Le Differend) என்ற பதத்தை பிரயோகிக்கிறார். பாதிக்கப்பட்டோர் (Injured) தமது பாதிப்பிற்கான நிவர்த்தியை (Justice) தம்மிடையே நிலவும் ஊடாட்ட பண்பினை அடிப்படையாகக்கொண்டு அளவிடுகிறார்கள்.

அதேவேளை இந்த பாதிப்பை ஏற்படுத்தும் சமூகம் (Colonizer) தம்மிடையே நிலவும் ஊடாட்ட பண்பினை பயன்படுத்தி தாம் ஏற்படுத்திய பாதிப்பினை அளவிடுகிறார்கள். ஆக, பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் தமது ஊடாட்ட பண்பின் மேலாதிக்க செல்வாக்கினால் பாதிக்கப்பட்டவர்களின் ஊடாட்டப் பண்பினால் உருவாக்கப்பட்ட கணிப்பை மௌனமடையச்செய்து விடுகிறார்கள்.

இந்த 'வித்தியாசம்' பற்றிய கருத்தாக்கம் லொயிடார்டினால் பல பரந்து பட்ட செயற்பாடுகளையும் விளக்குவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வித 'வித்தியாச' செயற்பாட்டினை எமது இனப்பிரச்சினையை பல்வேறு சமூக மட்டத்தினர் நோக்கும் முறைகளில் நாம் நன்கே அவதானிக்கக் கூடியதாயுள்ளது. பலவேளைகளில் நாம் காணும் பிரச்சினைகளை பிறர் பிரச்சினைகளாகவே காண்பதில்லை.

இந்தப் பின்னணியில் வைத்துப் பார்க்கும்பொழுது பின் நவீனத்துவ கருத்து நிலைகள் கூட பின்காலனித்துவத்தின் சரியான பரிமாணத்தை வெளிக்கொணரப் போதுமானவை அல்ல என்றே கருதத் தோன்றுகிறது.

காரணம் பின் நவீனத்துவ கருத்தாக்கங்கள் மேலைத்தேய ஊடாட்ட பண்புகளிலிருந்து உருவானது. ஆனால் பின் காலனித்துவ உணர்வுகள், பின்காலனித்துவ நாடுகளின் அல்லது சமூகங்களின் ஊடாட்ட பண்புகளில் இருந்து பிறக்கும் பொழுதுதான் அதாவது பின்காலனித்துவ சமூகங்களின் குரலாக அது வெளிப்படும் பொழுதுதான் அது முழுமைபெற முடியும்.

மேலைத்தேய அறிவியல் சார் அணுகுமுறைகள் ஐரோப்பிய அல்லது மேலைத்தேய மையவாத கருத்தியல் செல்நெறியினை கட்டவிழ்ப்பு செய்து 'பிறத்தியானாகக்' (The other) கருதப்பட்ட/ கருதப்படும் மக்களையும் மையத்திற்கு (Centre) கொண்டு வரும் முயற்சியாகவே அமைகிறது. இது ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கு (Marginalised) ஒரு புதிய உருவத்தை கொடுக்கவே செய்கிறது.

இது நவீனவாத சிந்தனைப்போக்கின் தர்க்க ரீதியான வளர்ச்சி நிலையின் விளைவாகவே ஏற்பட்டுள்ளது. இது மனிதாபிமான நோக்கில் எழுந்த ஒரு நிலையல்ல. இது அவர்களது சமூக நியமங்களை கேள்விக்குள்ளாக்குவதால் ஏற்பட்ட நிலையல்ல.

ஆகவே, இந்தக் கருத்தியல்களும் சிந்தனைப் போக்குகளும் மறைமுகமாக மேலைத்துவத்தின் மேலாட்சியினை வலியுறுத்தும் செயற்பாடாகவே அமைகிறது.

மேலைத்துவத்தின் ஐரோப்பிய மையவாத இருப்பிற்கு எப்படி இந்த 'பிறத்தியான்' என்ற கருத்துருவம் உதவியதோ அதே போல ஹோமி பாபா (Homi Bhabha), காயத்திரி ஸ்பிவாக் (Gayatri Spivak) போன்ற புலமைசார் நெறியினரின் கருத்தியல் நிலைப்பாடுகளுக்கும் இதே 'பிறத்தியான்' வெறொரு வடிவில் துணை நிற்கவே செய்கிறான். பின்காலனித்துவத்திற்காக குரல் கொடுக்கும் சில புலமைசார் நெறியினர் மேலைத்துத்தின் சிந்தனைப் போக்கின் அக முரண்பாடுகளில் பெருமளவு தங்கி நிற்பதனை நாம் காணலாம். இதனை குறிப்பாக எட்வர்ட் செய்தில் (Edward said) நாம் காணலாம். இந்த அணுகுமுறையானது மேலைத்தேச சிந்தனையின் 'பிறத்தியான்' என்ற கருத்தியலைக் கேள்விக்குள்ளாக்கும் அதே வேளை, பின்நவீனத்துவம் உருவாக்கிவரும் மையவாத தளர்வையும் கேள்விக்குள்ளாக்கும் ஆபத்து உள்ளது.

இந்த முரண்பாடுகளுக்கான அடிப்படைக் காரணம் பின்காலனித்துவ் உணர்வுகள், பின்காலனித்துவ சமூகங்களின் உணர்வுகள் பின்காலனித்துவ ஊடாட்டப்பண்புகளிலிருந்து மேற்கிளம்பாமையேயாகும்.

இந்த முரண்பாடு எமக்கு காலனித்துவ காலத்தில் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளின் கலை இலக்கிய கலாசாரம் சம்பந்தமாக காலனித்துவ மேலாதிக்க சக்திகள் கொண்ட மனப்பாங்கினையே ஞாபகப்படுத்துகிறது. காரணம், காலனித்துவக் காலத்திலும் பின்காலனித்துவக் காலத்திலும் காலனித்துவத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்களை ஆராய்வதற்கு மேலைத்தேய ஊடாட்ட பண்புகளில் வளர்ந்த அணுகுமுறைகளே உபயோகிக்கப்படுகின்றன.

ஆகவே பின்காலனித்துவ கருத்தாக்கங்கள் சைமன் டியூரிங் கண்ட காலனித்துவ மேலாதிக்கத்துடன் இனம்காணாவிடினும் காலனித்துவ மொழி வாழ்வியல் என்பவற்றிலிருந்து விடுபட முடியாத (Post colonizer)வர்களாலேயே பிரதானமாக முன்னெடுக்கப்படுகிறது. இவர்களது பார்வை தவிர்க்க முடியாத படி லொயிடார்டினது 'வித்தியாசத்தை' (le Differend) பிரதிபலிக்கவே செய்யும்.

ஆக, மேலைத்தேச பின்காலனித்துவ கருத்தாக்கம் மறைமுகமாக புதியதொரு காலனித்துவ அடுக்கமைவை உருவாக்குவதிலேயே வெற்றி காண்கிறது.

## உறவு




'அகதி'

*இதழ் - 11. ஜூன் 1997*
*வெளியீடு:*
*வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு*
*15 A, ரோஹினி வீதி,*
*கொழும்பு - 6.*

சிறு இடைவெளிக்குப் பின்னர் அகதியின் பதினொராவது இதழ் வெளிவந்துள்ளது. அரசியல் சார் இதழாக வடிவமெடுத்துள்ள அகதி தன் வழமையான அம்சங்களுடன் விஷேட கட்டுரையாக, வடக்கு முஸ்லிம்களின் வாக்குரிமை பற்றிய கட்டுரை பிரசுரமாகியுள்ளது. அகதி வெளியீட்டமைப்பின் தலைவர் கலாநிதி ஹஸ்புல்லாஹ்வினால் எழுதப்பட்ட இக்கட்டுரை வாக்கு வேட்டைக்குட்படும் வடக்கு முஸ்லிம்களின் சிந்தனைக்குரியதாகும்.

பத்தாவது இதழிலிருந்து ஆங்கிலத்திலும் சில கட்டுரைகள் வெளியிடுகிறது அகதி. அத்துடன் இவ்விதழில் கட்டுரை, கவிதைப் போட்டிகளுக்கான விபரங்களும், விண்ணப்பங்களும் பிரசுரமாகியுள்ளன.

**சத்யா**



'கட்டவிழும் முடிச்சுக்கள்'

*பெண்கள் தொடர்பான பொய்மைகளும், உண்மைகளும்.*
*வெளியீடு:*
*முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி, செயற்பாட்டு முன்னணி,*
*17, பார்க் அவெனியூ,*
*கொழும்பு -05*

இந் நூலில், பெண்கள் தொடர்பாக, சமூகத்தில் நிலவும் கீழ்த்தரமான மாயையான எண்ணக்கருக்கள், சிந்தனைகள் பற்றிய விளக்கங்களுடன் கூடிய கட்டுரைகளும், பழமொழிகளும் இடம்பெற்றுள்ளன.

பெண்ணின் குணாதிசயங்கள், பெண்ணின் இரண்டாம் தர நிலை, பெண் வெறுப்பு, குடும்பத்தில் பெண்ணின் நிலை பற்றிய பொய்களும், உண்மைகளும் தொடர்பாக முறையே கௌரி பழனியப்பன், சுல்பிகா, கலாநிதி செல்வி திருச்சந்திரன் ஆகியோர் கட்டுரை வடித்துள்ளனர்.


விளக்கப்படங்களுடன் கூடிய,சமூகத்தில் பெண்களை ஆதிக்கத்துக்குட்படுத்தும் பிரச்சினையொன்றை சாதாரணமான மக்கள், விளங்கக்கூடிய வகையில் எளிய தமிழில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதே. பின்னிணைப்பாக பெண்கள் பற்றிய பழமொழிகள் இணைக்கப்பட்டுள்ளன.

**ரத்னா.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





முறிந்த பனையிலிருந்து..

# மகாத்மா காந்தியின் இந்தியாவைப் பொறுத்தவரை இது துயரமான நடவடிக்கையே!

இங்கு நடந்து கொண்டிருப்பதை தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்த பல இராணுவ வீரர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை' என்பது நன்றாகவே தெரிகிறது. ஒரு முறை ஒரு ஜவான் சொன்னார்:

''உரும்பிராயிலும், கோப்பாயிலும் நடந்ததை நீங்கள் பார்த்திருக்க வேண்டும். நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப் பட்டுள்ளனர். ஆனால் புலிகள் தப்பியிருக்கின்றனர். கவனமாய் இருங்கள். வடக்கத்தவர்கள் மிகுந்த ஆத்திரமடைந்த மன நிலையில் இருக்கிறார்கள்'' வடக்கத்தவர்கள் என்று அவர் குறிப்பிட்டது இந்திய அமைதிப்படையிலிருந்த வட இந்தியர்களைத்தான். தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்த ஒரு இராணுவ அதிகாரியிடமிருந்து மனதை நெகிழவைக்கும் ஓர் அறிவுரை வெளிப்பட்டது. யாழ்ப் பாணத்தில் நன்கு மதிக்கப்பெற்றிருந்த ஒருவரைத்தனியே அழைத்துச் சென்று தன் மனதில் உறுத்திக் கொண்டிருந்ததை அவரிடம் கொட்டியிருக்கிறார் அந்த அதிகாரி. அவர் கூறியிருக்கிறார்: நீங்கள் யாழ்ப்பாண டவுனிலேயே இருந்து கொண்டிருந்தால், மக்கள் எவ்வளவு தூரம் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியவராது. உரும்பிராய் பக்கம் போய் அங்கு என்ன நடந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அப்பாவி மக்கள் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் தமிழர்களோ இல்லையோ அதிகாரிகளாகிய எங்களுக்கு தனிப்பட்ட முறையில் பிரச்சினைகள் புரிகிறது. ஜவான்கள் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்து வந்தவர்கள்; பல்வேறு கலாசாரங்களிலிருந்து வந்தவர்கள். அவர்கள் அத்துணை அறிவுபூர்வமானவர்கள் இல்லை. அவர்களுக்குத் தமிழரா, சிங்களவரா என்ற வித்தியாசம் கூடத் தெரியாது. அவர்களுக்கு ஒரு ஐந்து வயது குழந்தைகூட ஒரு புலிதான். ஒரே ஒரு முறை துப்பாக்கிச் சூடு நடந்தாலும் அவர்கள் ஒரு சுற்று வெடித்தீர்த்துத்தான் ஓய்வார்கள். அவர்களில் ஒருவன் கொல்லப் பட்டாலும் பத்து பொது மக்களை யாவது அவர்கள் கொன்று விடுவார்கள். இப்பொழுது சமீப காலமாகத்தான் நாங்கள் சில விரிவுரைகளை நடத்தி சூழ்நிலையை விளக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். நான் மிகவும் சோர்ந்து விட்டிருக்கிறேன். நான் இன்னும் நான்கு மாத காலத்திற்குள் இராணுவத்திலிருந்து விலகவிருக்கிறேன்''

இலங்கை இராணுவத்தின் செயல்களால் தமிழர்களும் துன்புற்றிருந்தனர் என்று கூறி அப்பெரியவர் அந்த அதிகாரியை சமாதானப் படுத்த முயன்றார். அந்த அதிகாரி, கைகளை விசிறி மறுதலிக்கும் பாங்கில் தலையை ஆட்டினார். அவர் கூறினார்: ''இராணுவம் என்பது இராணுவம்தான். எல்லா இராணுவங்களும் ஒரே மாதிரியானவைதான். இந்திய இராணுவம்தான் உலகத்திலேயே உள்ளவற்றில் மிகவும் ஒழுக்கக்கேடான இராணுவமாகும். இந்திய அமைதிப்படை இங்கே இருந்து கொண்டிருப்பதால் மக்கள் இந்திய அமைதிப்படையையோ அல்லது விடுதலைப் புலிகளையோ இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்தாக வேண்டும் என்று நான் நிச்சயமாகச் சொல்வேன். இந்திய இராணுவத்தை நீங்கள் சுட்டு வெல்ல முடியாது. புலிகள் ஒருவரைக் கொன்றால் இந்திய இராணுவம் பத்துபேரைச் சுடும். இந்தியப் படைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமென்றால் உண்மையிலேயே நீங்கள் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். லட்சக்கணக்கில் மக்களை ஒன்று திரட்டிக் கண்டனம் தெரிவிக்க வேண்டும். எப்பாடு பட்டாவது துப்பாக்கிச் சூட்டைத் தவிர்க்க வேண்டும்.''


### 2.5 ஒரு தனிப்பட்ட கணிப்பு

ஒருவேளை தற்போதைய நெருக்கடி நிலையைப் புரிந்து கொள்ள பல்கலைக்கழக மருத்துவ விரிவுரையாளர் ஒருவரது பின்வரும் குறிப்பு உதவக் கூடும்:

''ஒக்டோபர் 12ம்திகதி திருநெல்வேலியில் கொமாண்டோஸ் எனப்படும் அதிரடிப்படையினர் வந்து தரையிறங்கியதிலிருந்து இந்திய இராணுவத்தின் முழு உளவியலுமே மாறிப்போய் விட்டது என்றுதான் நினைக்கிறேன். திருநெல்வேலிப் பகுதி விடுதலைப் புலிகள் செறிந்திருந்த இடமாகும். விடுதலைப் புலிகளுக்கு இங்கு தம்மை வெற்றிகரமாக எளிதில் அணிதிரட்டிக்கொள்ள முடியும். வான் வழிப் பாதுகாப்பை இளக்காரத்துடன் ஒதுக்கிய கொமாண்டோக்கள் சற்றும் எதிர்பாராத விதமாகப் பின்வாங்க வேண்டியிருந்தது. இலங்கை இராணுவம் வான்வழிப்பாதுகாப்பு மேற்கொள்ளாமல் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டதில்லை. அந்தத் தருணம் வரை இந்திய இராணுவம் பொதுமக்களின் உயிர்கள் மீது கரிசனை காட்டியிருந்தது. அந்கச் சமயம் இந்தியப்படை வீரர்களின் சைனியம் ஒன்று எங்கள் வீட்டைக் கடந்து சென்றது. அவர்கள் ஆசுவாசத்துடன் பொது மக்களை நோக்கித் தோழமையுடன் கை அசைத்த வண்ணம் சென்றனர். இந்த சைனியத்தின் மீது விடுதலைப் புலிகள் சுட்டதையடுத்து என் வீடு யுத்தகளமானது. என்னோடு இருந்த பெண்மணியுடனும், குழந்தைகளுடனும் நான் அங்கிருந்து ஓடித் தப்பவேண்டியதாயிற்று. முதலில் எங்களை நோக்கியும் துப்பாக்கிச் சூடு நடந்தது. பிறகு நாங்கள் விடுதலைப் புலிகள் அல்ல என்று தெரிந்ததும் எங்களை ஒன்றும் செய்யாமல் நடந்து அப்பால் செல்ல அனுமதித்தனர். பக்கத்து வீட்டுக்காரர்களையும் கைகளை மேலே தூக்கியவாறு வெளியே வருமாறு இராணுவம் பணித்தது. அவ்வாறு அவர்கள் வெளியே வரும்போது விடுதலைப் புலிகளைச் சேர்ந்த ஒரு பையன் அவர்களுக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டு இராணுவத்தை நோக்கிச் சுட்டான். அதிகாரி அவர்களை வீட்டுக்குள் நுழைந்து கொள்ளுமாறு கத்தினார். சுட ஆரம்பிப்பதற்கு முன் வீட்டுக்குள் அவர்கள் நுழைந்து கொண்டு விடப் போதுமான நேர அவகாசத்தை அவர் அனுமதித்தார். விடுதலைப் புலிகள் மறைந்து நின்று சுடுவதற்கு பொதுமக்களை ஒரு தடுப்பாக பாவிப்பது என்பதில் ஒரு அர்த்தம் இருக்கத்தான் செய்தது. இந்திய வானொலி ஒலிபரப்பிய மாதிரி குரூரமான அர்த்தத்தில் அல்ல. அந்தச் சமயத்தில் இந்திய இராணுவம் பொது மக்களின் உயிர் மீதான அக்கறையைக் கவனத்தில் கொண்டிருந்தது.

பிறகு அவர்களின் மனோபாவம் பெரிதும் மாறிவிட்டிருந்தது. பயங்கரத்தைப் பிரயோகிப்பதுதான் என்று திட்டவட்டமாகத் தீர்மானம் செய்து கொண்டு விட்ட மாதிரித் தான் எனக்குத் தெரிகிறது. ஒரு கிழமைக்குப் பிறகு உரும்பிராயில் நடைபெற்ற கொலைகளின் உக்கிரத்தைப் பார்க்கும் போதும் அது நான் முன்பு அனுபவித்ததிலிருந்து எவ்வளவோ வித்தியாசமாக இருந்தது. ஒரு யுத்த களத்தின் பின்புலத்தில் குவிந்திருக்கக்கூடிய பெரிய இராணுவப்படையின் மீது ஷெல் தாக்குதல் நடத்துவதை ஒருவர் புரிந்து கொள்ள முடியும். ஆனால் எங்களுடைய சூழலில் அங்கு மிங்குமாக சிறு அளவில் பரவியிருக்கும் கெரில்லா படையினர் மீது ஷெல் தாக்குதல் நடத்துவது என்பது பயங்கரத்தை விளைவிக்கும் யுக்தியே. இதனால் வெறும் கசப்புணர்வு மட்டுமே வளர்ந்து செல்லும். இந்திய இராணுவம் பல விஷயங்களில் குழம்பியிருக்கலாம். ஆனால் அச்சுறுத்தல்கள் சேர்ந்தாற் போல குறிப்பிடும்படியாகத் தொடர்ந்து நடந்தமை, மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்ப வேண்டும் என்ற தீர்மானம் திட்டமிட்டே எடுக்கப் பட்டிருக்கிறது என்ற சந்தேகத்தை வலுப்படுத்தவே செய்கிறது. ''நான் உன்னைச் சுட்டு விடுவேன்.'', ''இந்த இடத்தை அப்படியே தரை மட்டமாக்கிவிடுவேன்'' போன்ற பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த அதிகாரிகளினதும் ஜவான்களினதுமான பயமுறுத்தல்கள் மலிந்துதான் போய் விட்டன. மகாத்மா காந்தியின் இந்தியாவைப் பொறுத்தவரை இது துயரமான நடத்தைதான்.

முறிந்த பனை நூலிலிருந்து நாம் பிரசுரித்து வந்த அத்தியாயத்தின் இறுதிப்பகுதி இது



எம்.எஸ்.எம். பாரிஸ்

வெந்துகருகி
உளம்கொள்ளமுடியவில்லை
மீண்டும் மீண்டு...
வெட்டத்துளிர்க்கும்எந்தாடி போல்
தவிர்க்கமுடியவில்லை
அந்த சோகத்தை.

நேற்றும்..
நெடுங்காத்திருப்பின்சுற்றில்
நெருப்புக்கருக்கொண்டு...
பெருமுச்சொன்று..
எரித்துப்போனதுநம்பிக்கையை

பசுமைதுளிர்க்கும்வாழ்வொன்றின்
நாளைக்காக...
செந்தசிவப்புநிறக்கொடுமைமீதினில்
இன்றுகளில்என்இளமை
கருகியுருகி வழிந்து...
தெருத்தாராய் பிசுபிசுத்து அப்பி...
நான் இங்கு...

நொந்துகொள்ளமுடிவதில்லை
எனக்குயாரையும்
இறைவன்உயர்ந்தவாய்
துளிவெற்றிகளும்
மிகுதிருப்தியும்
ஏறிமேல்போய்..
நிலம்பார்த்துச் சிரிக்க...
அவளும்அவர்களுமாய்
எனக்குநொந்துகொள்ளமுடிவதில்லை
யாரையும்.... எதையும்..

பேனாவெடித்து
மாற்றுவார்த்தைக்காய்அடம்பிடிக்க
எப்படிஎழுதுவது
அந்தவறுமைபற்றி....

சேர்ந்தேயிருப்பதென
வறுமையும்புலமையும்
சொல்லிப்போனதமிழ்ப்புலவ...!
எப்படி உன்னால்யதார்த்தம்
துப்பத்தெரிந்தது?
கொழும்பின்காபனப்பிய
காலைவிழுங்கிக்கொண்டுநான்

சில்லுச்சில்லாய்த்தெறிக்கும்..
என் "நான்" பாத்திரம்
ஓட்டைவிழுந்திடுமென்றஞ்சி
சிலப்பின்அகோரம்தணிக்க.
எழுதியகடிதம்

வெந்துகருகி
உளம்கொள்ளமுடிவதில்லை
மீண்டும் மீண்டு...
வெட்டத்துளிர்க்கும்எந்தாடி போல்
தவிர்க்கமுடியவில்லை
வறுமை தரும் சோகத்தை.

970605

வெட்ட வெட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாணவர்கள் சமாதான யாத்திரை!

## வெலிக்கந்தையில்




'எமக்கும் சுதந்திரமாய் வாழ ஆசை" War is good for nothing' 'அப்பிட்ட சாமய ஓண" போன்ற வாசகங்களைக் கொண்ட சுலோகங்களை தாங்கியவாறு பொலநறுவை மாவட்டத்தின் எல்லைப்புற கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ், முஸ்லீம், சிங்கள மாணவ, மாணவிகள் வெலிகந்த சிங்கள மகாவித்தியாலயத்தில் ஒன்று கூடி அந்த கிராமத்தின் பிரதான வீதிகள் ஊடாக சமாதானத்தை வேண்டி ஊர்வலம் நடத்தினார்கள்.

ஜூன் 24ந் திகதி காலை பொலநறுவை மாவட்டத்தின் எல்லைப்புற கிராமங்களான மன்னம்பிட்டி தமிழ் வித்தியாலயம், கரப்பளை கணிஸ்ட வித்தியாலயம், கட்டுவன்வில் முஸ்லிம் வித்தியாலயம், சேனபுர முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவ, மாணவிகளும் - வெலிகந்த சிங்கள மகாவித்தியாலயத்தின் சிங்கள மாணவ, மாணவிகளும் அப்பாடசாலையின் தலைமை ஆசிரியர் திரு.என்.ஜெ. ராஜகருணாவின் தலைமையில் சமாதான யாத்திரைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்த வேளையில் அங்கு வருகை தந்த பிரதேச சபை உறுப்பினர். திரு.சர்னேலிஸ் தயாவன்ச அவர்கள் தேசிய கொடியை ஏற்றி, 'இந்த எல்லைப்புற கிராம மாணவர்களின் சமாதான யாத்திரையும், அவர்களின் புரிந்துணர்வும் எமக்கும் இந் நாட்டு மக்களுக்கும் முன்மாதிரியாக விளங்க வேண்டும் என்று கூறினார். அவரைத் தொடர்ந்து தலைமை ஆசிரியர்கள் யுத்தத்தினால் மாணவ சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் இன்றைய சூழலில் சமாதானத்தின் அவசியத்தை வலியுறுத்தியும் தமது உரைகளை ஆற்றினர்.

அதன் பின்னர் "சமாதானத்துடன் வாழ்வதற்கு எமக்கும் இடம் அளியுங்கள்" எனும் வாசகம் மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட பதாகையை இரண்டு மாணவர்கள் முன்னெடுத்துச் செல்ல ஏனைய மாணவ, மாணவிகள் சங்கிலித் தொடர் போன்று தமது இருகைகளிலும் சமாதானத்தை வலியுறுத்தும் சுலோகப் பதாகைகளை உயர்த்திய வண்ணம் அக்கிராமத்தின் பிரதான வீதிகளின் ஊடாக ஊர்வலமாக மகாவலி பொருளியல் முகவர் நிறுவனம், பகுதி திட்டமிடல் முகாமையாளர் அலுவலக கட்டிடத்தின் முன்பாக வந்தடைந்தனர்.

அங்கு கூடியிருந்த பொதுமக்கள், மாணவர்கள் மத்தியில் 'சமாதானத்தை எடுத்துச் செல்லல் எனும் தலைப்பில், மாணவர்களாலும், 'குருநாகல் வீதி நாடக அமைப்பினராலும்' வீதி நாடகங்கள் காண்பிக்கப்பட்டன. இன்றைய அரசாங்கத்தின் 'சமாதானத்திற்கான யுத்தத்தின் போலித்தனங்களையும், அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுப்பொதி பற்றியும் மக்களிடம் உள்ள விளக்கமின்மை பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். அது மட்டுமல்லாமல் யுத்தத்தினால் சாதாரண பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுவதையும், யுத்தத்தினால் இலாபம் அடைபவர்கள் யார் என்பதையும் அரசியல்வாதிகளின் கபடத்தனங்களையும் குறிப்பிட்டு காட்டியதோடு, எல்லா இனங்களும் சம அந்தஸ்துடன் வாழவேண்டும் என்பதை வலியுறுத்தியும் இந்த வீதி நாடகங்கள் அமைந்திருந்தன.

மீண்டும் பாடசாலை மண்டபத்தினுள் ஒன்று கூடிய ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியில் 'இலங்கை ஆசிரியர் சங்க' அனுராதபுர மாவட்ட பிரதிநிதி ஜோசப் அவர்கள் பேசும்போது 'இந்த யுத்தத்தினால் மாணவர்கள் கல்வியை இழக்கின்றார்கள். குறிப்பாக கிராமப்புற மாணவர்கள் இரவு நேரங்களில் நித்திரை கொள்ள முடியாது, பீரங்கி வேட்டுக்களின் அச்சத்துடனேயே காலத்தைக் கழிக்கின்றார்கள். இதனால் எமது மாணவ சமூகம் மேலும் பின்னோக்கிச் செல்கின்றது. வட-கிழக்கு பகுதிகளிலும் இதே நிலைதான். ஆகவே நாம் ஒவ்வொருவரும் இவைபற்றி சிந்திக்க வேண்டும் என்று கூறினார். 'யுக்திய" ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய பேசும் போது உலக நாடுகளின் வளர்ச்சி பற்றியும் அந்நாடுகளின் நவீன கண்டு பிடிப்புகள் பற்றியும், யுத்தத்தினால் நமது நாடு ஒவ்வொரு வினாடியும் பின் நோக்கியே செல்கின்றது என்றும், இன்று யுத்தத்திற்கு செலவிடும் பணத்தை நல்ல வழியில் பயன்படுத்துவோமானால் நமது நாட்டில் உள்ள உயர்தர வகுப்பு மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கணணியை (Computer) பெற்றுத்தர முடியும் என்றும் பல விளக்கப்படங்கள் புள்ளிவிபரங்களின் ஊடாக மாணவர்களுக்கு கூறி இந்த தேவையற்ற யுத்தம் முடிவிற்கு வரவேண்டும் என தமது உரையில் குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்து பல பிரமுகர்கள் சமாதானத்தின் அவசியம் பற்றி பேசினார்கள்.

மதிய இடைவேளையின் பின்னர் "சாது ஜனராவ" இசைக்குழுவினர் இனங்களுக்கிடையே சமாதானத்தையும், ஐக்கியத்தையும் வலியுறுத்தும் பாடல்களைப் பாடி சமாதான யாத்திரை நிகழ்ச்சிகளை நிறைவுசெய்தனர்.

இவ்வாறு யுத்தத்தினால் பெற்றோரை, சகோதரர்களை, அயலவர்களை இழந்து பரிதவிக்கும் இந்த எல்லைப்புற கிராம மாணவர்களால் சமாதானத்தின் தேவையை உணர்ந்து தமது பங்களிப்பினை முடிந்தவரை வழங்கி ஏனைய பிரதேசங்களுக்கும் முன்மாதிரியாக இருக்கும் வெலிகந்த தலைமை ஆசிரியர் பாராட்டப்பட வேண்டிய ஒருவர் என்பது குறிப்பிடப்பட வேண்டும் அதே வேளை அவர் தெரிவித்த ஒரு கருத்து சற்று நெருடலாகவும் இருந்தது. அதாவது மதவழிபாட்டின் போது பௌத்த மதத்தினர் தமது மத ஆராதனையை நடாத்தும் வேளையில் பௌத்த மதம் தவிர்ந்த ஏனைய மதத்தினர் மௌனமாக தங்கள் தங்கள் மதத்திற்குரிய கடவுள்களை வழிபடுமாறு அவர் கேட்டுக் கொண்டதும், சிங்கள மொழியில்மட்டும் தேசிய கீதம் பாடப்பட்டதும் உண்மையிலேயே சமாதானத்தை வேண்டி வந்த தமிழ், முஸ்லீம் மாணவர்களின் முகங்களில் ஏமாற்றத்தின் பிரதிபலிப்புக்களையே தோற்றுவித்தது.. அவர்களிடம் இருந்த சிறு நம்பிக்கையையும் பாதிக்கும் ஒரு செயலாகவே இதைக்காணக் கூடியதாக இருந்தது. இவ்வாறான தவறுகள் தவிர்க்கப்டும் போது தான் இத்தகைய முயற்சிகள் முழுமையான வெற்றியைப் பெற முடியும். சமாதானத்திற்கான அத்திவாரத்தை பலமானதாக அமைக்கும் போது தான் எதிர்கால நன்முயற்சிகளை அதில் கட்டியெழுப்ப முடியும். எதிர் வரும் காலங்களிலாவது வரலாற்று தவறுகளை, சமாதான நன்முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் கருத்தில் கொள்வது ஆரோக்கியமான ஐக்கியத்திற்கு வழிவகுக்கும் என்று நினைக்கத்தோன்றியது.

○

அருவி




# யாழ் மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டார்களா?

வடக்கு கிழக்கு மாகாண தமிழ்த் தினப்போட்டிகள் முடிவடைந்து விட்டன. ஜூன் 23ம் திகதி அன்று திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் தமிழ் மொழித் தின விழாவும் இடம்பெற்று வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களைவிட இம்முறை போட்டிகள் சற்று இறுக்கமாகவே காணப்பட்டன. யாழ் மாவட்ட மாணவர்களின் வருகையே போட்டிகளை உற்சாகப்படுத்தியது எனக்கூறலாம். 347பேர் விஷேட கப்பலில் இலவச பயணிகளாக யாழ் மாவட்டத்திலிருந்து திருகோணமலைக்கு வந்திருந்தனர்.

இப்போட்டிகட்கு யாழ்ப்பாணத்தில் இருந்து நடுவர்கள் அழைக்கப்படவில்லை என்ற வாதம் சிலரால் பரப்பப்பட்டிருந்தது. பலரையும் கவர்ந்த ஒன்றாக இருந்த போதிலும், அது கடைசியாக பிசுபிசுத்துப் போய்விட்டது. ஏனென்றால் யாழ் வலைய கல்விசார் உத்தியோகத்தர்களே அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டியிருந்ததாகும்.

இது பற்றிய சிறு துண்டு பிரசுரங்கள் கையில் எழுதி போட்டோ பிரதி செய்யப்பட்டது. விழா மண்டபத்தில் இரகசியமாக விநியோகம் செய்யப்பட்டிருந்தது. எனினும் அது வெளியீட்டாளர் பற்றிய எந்த தகவலும் அற்ற மொட்டைக் கடதாசியாகவே காணப்பட்டது. இதில் காணப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரித்தபோது அவை பெறுமதியற்றதாகவே காணப்பட்டன.

விழா சரியாக பி.ப 3.15 ஆரம்பமாகியது. மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து வரவேற்புரையை மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஆரியசேன அவர்கள் நிகழ்த்தினார். சிங்களவரான ஆரியசேன மிகத் தெளிவான தமிழில் அழகாக உரை நிகழ்த்தியது பலரது மனதைக் கவர்ந்த அம்சமாக இருந்தது.

விழா மலர் வெளியீட்டைத் தொடர்ந்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. யாழ் கல்வி வலைய மாணவர்கள் சிலர் மேடைக்கு சான்றிதழ் பெற்றுக் கொள்ள வரத் தவறியதை அடுத்து விழாவில் சிறுசிறு சலசலப்பு. சான்றிதழ் வழங்கலைத் தொடர்ந்து சிறப்புரை ஆற்றவந்த கல்வியமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா அவர்களின் பேச்சும் அவரைத் தொடர்ந்தும் பிரமத விருந்தினர் உரையாற்றிய தலைமைச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் உரையும் சலசலப்பை மேலும் மெருகேற்றி விட்டிருந்தன.

சுந்தரம் டிவகலாலா அவர்கள் தனதுரையில் யாழ் மாணவர்கள் ஒதுக்கப்பட்டதாக சிலர் பிரசாரம் செய்திருக்கிறார்கள். அதில் உண்மை எதுவும் இல்லை. நாங்கள் பிரதேசவாதிகள் அல்ல. வட கிழக்கில் ஆறரை இலட்சம் மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வு கிடையாது. மதத்தால், இனத்தால், மொழியால், பிரதேசத்தால் வேறுபட்டிருந்தாலும் அனைவரும் சமமானவர்களே என்ற தோரணையில் பேசியதும், பிரதேசவாதம் ஆபத்தானது. அதனை வளர விடக் கூடாது. இந்த வாதத்தை மாணவர்கள் மத்தியில் பரப்ப முனைந்தவர்கள் விரைவிலேயே தமது தவறுகளை உணருவர்; வருந்துவர் என்ற வகையில் தலைமைச் செயலாளர் ஜீ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உரையாற்றியதுமே இதற்கு காரணமாய் அமைந்திருந்தன.

திருகோணமலை நகரத்தை ஆவலுடன் சுற்றிப் பார்க்கச் சென்ற மாணவர்கள் வரத் தாமதமானதே சான்றிதழ் வாங்க வராமைக்கு காரணம் என்பதும் எந்த உள் நோக்கமும் கொண்ட செய்கை அல்லது என்பதும் பிற்பாடு தெரியவந்தது.

விவேகி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









# தீர்வுத்திட்டத்தின் இரட்டை வேடம்: அம்பலப்படுத்த அரசின் இரு நூல்கள்

**- ஆனந்தன்**

**"18 அத்தியாயங்களைக் கொண்ட தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது."**

**-"பட்ஜட்டுக்கு முன், குறிப்பாக நவம்பரில் உத்தேச அரசியல் தீர்வுத் திட்டம் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்படும்."**

**-"தீர்வு யோசனையை இதுவரை எதிர்த்துவந்த அரசாங்க கட்சிகளில் ஒன்றான ஐ.ஐ.தே.மு.வின் தலைவி அமைச்சரவையில் இருந்து நீக்கம்."**

**-"தீர்வு யோசனையை நிறைவேற்றும் முயற்சியில் ரணிலுடன் சந்திரிகா ஆரம்ப உடன்பாடுகள் கண்டுள்ளனர்."**

தீர்வுத்திட்டம் பற்றி உத்தியோகபூர்வமாக அரசினால் வெளியிடப்பட்டுவரும் தகவல் இவைதான். தீர்வுத்திட்டம் குறித்து அரசின் நேர்மையை இவ்வாறு வெளியுலகுக்கு காட்ட அரசு மிகுந்த உற்சாகமெடுத்துவரும் இவ்வேளையில், அரசின் போலித்தனைத்தையும் பம்மாத்தையும் விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

### சிங்கள நூலில்...

"அதிகாரப்பரவலாக்கமும் காணி அதிகாரங்களும்" எனும் நூலொன்று நீதி அமைச்சின் கீழ் இயங்கும் "அரசியலமைப்புச் சீர்திருத்தம் மற்றும் ஆய்வுத்தகவல் நிலைய"த்தினால் வெளியிடப்பட்டுள்ளது. (இது தவிர அதிகாரப்பரவலாக் கம் பற்றி இன்னும்பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் பல சிங்களத்தில் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.) தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ள இந்த நூலில் சிங்களத்தில் கூறப்பட்டுள்ள விடயமும் தமிழ்ல் கூறப்பட்டுள்ள விடயமும் நேரெதிரானவை. மொழிபெயர்ப்பில் கோளாறு இருக்கக்கூடுமோ என எண்ணவும் இடமில்லை. ஏனெனில் நூலின் பெயர் ஒன்றே தவிர உள்ளே உள்ள தலைப்புகள் விடயங்கள் என்பன எல்லாமே வேறானவை. இரு மொழி வெளியீடுகளையும் இப்படி துருவி ஒப்பிட்டு பார்க்கப்போவது யார் என அரசு எண்ணியிருக்கக்கூடும். சுருக்கமாக கூறப்போனால் தமிழ் மக்களிடம் (காணி அதிகாரம் தொடர்பாக) "எங்களிடமும் ஒருக்கால் சொல்லிபோட்டு எதையும் செய்யலாம்." என்ற தொனியிலும் சிங்கள மக்களிடம் "எங்களின் அனுமதியில்லாமல் அவர்களால் எதையும் செய்துவிட முடியாது" என்ற தொனியிலுமே கூறப்பட்டுள்ளன. சிங்கள நூலில் கூறப்பட்டுள்ளவற்றை இங்கு நோக்குவோம்.

"...ஶ்ரீ லங்கா இறைமையுள்ள ஒரு ஒற்றையாட்சி அரசு. ஶ்ரீலங்காவின் நிலத்தின் மீதான அதிகபட்ச உரிமையை அரசே கொண்டிருப்பதால் பிரிவினைக்கு இடமில்லை. அவ்வாறு ஏதேனுமொரு இனக்குழுமம் பிரிவினை வாத அரசியலில் ஈபடுமாக இருந்தால் அதனை அடக்க இலங்கை அரசின் சகல அதிகாரமும் பிரயோகிக்கப்படும்...."

"...மத்திய அரசின் கீழ் காணி அதிகாரங்கள் இருந்து வருவதை, பிரிவினைவாத அரசியலானது தன்னை நிலைநிறுத்துவதற்காக கண்டித்து வருகிறது..."

"...ஆனாலும் பிராந்திய சபைக்கு காணியரிமை அளிக்கப்பட்டாலும் பிராந்திய சபைக்கு உயர்ந்தபட்ச அதிகாரம் வழங்கப்போவதில்லை...அது மட்டுமின்றி மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தின்படி பிராந்தியங்களில் உள்ள காணிகளின் மீது அதிகாரம் செலுத்த முடியும்..."

"...ஒதுக்கப்பட்ட பட்டியலின்படி பிராந்தியங்களுக்கு காணி மற்றும் காணிப்பயன்பாடு பற்றி தனித்த முடிவு எடுக்க முடியாது. இது தொடர்பில் மத்திய அரசுடன் சேர்ந்து முடிவுகளை எடுக்க வேண்டும்..."

"...உத்தேச அதிகாரப்பரவலாக்கத்தின்படி பிராந்தியமொன்று அதன் அபிவிருத்தி நடவடிக்கையை மேற்கொ ள்வதற்கு தேவையான வளங்களை அப்பிராந்தியம் தேடிக்கொண்ட வளங்களைக்கொண்டே செய்ய முடியும்...."

"...பிராந்தியமொன்றின் காணி மத்திய அரசின் தேவையொன்றிற்காக அப்பிராந்தியத்திடமிருந்து கேட்டுப்பெறலாம். இதன் மூலம் அதிகாரப்பர வலாக்கம் அர்த்தமுள்ளதாக்கப்பட்டுள்ளது. ஆனால் மத்திய அரசு அவ்வாறு கோருகையில் பிராந்திய சபை அதனை நிராகரிக்க முடியாது. மத்திய அரசுக்க தேவையேற்படின் காணியை தரும்படி ஆணையிட முடியும். பிராந்திய சபையும் அவ் ஆணையின்படி ஒழுகவேண்டும். இப்போதும் இலங்கையில் பல பிரதேசங்களின் காணிகள் மத்திய அரசின் பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த காணிகள் தொடர்ந்தும் அவ்வாறே இருப்பதுடன் பிராந்திய சபையினால் அதனை இல்லாது செய்யும் அதிகாரமில்லை.

மத்திய அரசாங்கத்தினால் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் தற்போது இயங்கிவரும் படைமுகாம்களும் தொடர்ந்து இருக்கும்..

...ஏதாவதொரு பிராந்தியம் இலங்கையின் இறைமைக்கு சவாலாக செயற்படுமாயின் அந்த சபை கலைக்கப்பட்டு மத்திய அரசின் கீழ் அது கொண்டுவரப்படும். அந்த சந்தர்ப்பத்தில் அப்பிராந்தியத்தின் காணி அதிகாரம் அனைத்தையும் மத்திய அரசாங்கம் கொண்டிருக்கும்...."

"...தற்போதைய தீர்வு யோசனையின்படி அரசின் காணிப்பகிர்வின்போது முதலில் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பின்னர் பிராந்தியத்தைச் சார்ந்தவர்களுக்குமே முனன்னுரிமை வழங்கப்படும்...ஆனால் இலங்கையில் இறுதியாக எடுக்கப்பட்ட குடிசனமதிப் பீட்டின் பிரகாரமே (1981) விகிதாசார அடிப்படையில் இது மேற்கொள்ளப்படும்...

...இதுவரை இலங்கை அரசு காணிப்பகிர்வை மேற்கொண்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் அந்த பிரதேசம், மாவட்டம், மாகாணம் என்ற ஒழுங்கிலேயே முக்கியத்துவம் வழங்கப்பட்டு வந்துள்ளது. இதன்படி பார்த்தால் தீர்வு யோசனை கூட ஏற்கெனவே நடைமுறையிலுள்ளதையே செய்யப்போகிறது...

...இந்த யோசனையின் பிரதான இலக்குகள் இரண்டு.

1. இலங்கையின் இறைமையை பாதுகாப்பது.

2.பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்குவது...."

சுருக்கமாக இவ்வளவையும் நேரடியாக கூறுவதெனில் முழு காணி அதிகாரங்களும் எம்மிடமே இருக்கும். எம்மைக் கேட்காமல் எதையும் செய்யக்கூடாது. நாங்கள் கேட்டால் அதனை மறுக்கும் அதிகாரம் உங்களுக்கு இல்லை. ஏற்கெனவே இருந்த குடியேற்றங்கள், முகாம்கள் போன்றவை அப்படியே இருக்கும். அத்தனை ஆதிக்கத்தையும் பிராந்தியத்தின் மீது செலுத்துவோம். ஆனால் உங்கள் அபிவிருத்திகளை உங்களுக்கு கிடைப்பதைக் கொண்டே பார்த்துக்கொள்ளுங்கள். இது எவைபற்றியும் கேள்வி எழுப்ப கூடாது. மீறி பிரிவினைவாதம் என்று சென்றீர்களோ இருந்ததையும் பறித்தெடுத்துவிட்டு எங்கள் முழு அதிகாரத்தையும் கொண்டு நசுக்கி விடுவோம்."

இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால் இந்த கைநூலில் பல இடங்களில் ஒரு வசனம் வருகிறது. அதாவது "...இவ்வாறு பிராந்தியங்களுக்கு அதிகாரங்களை அளிப்பதன் மூலம் காலப்போக்கில் பிராந்தியங்கள் தாமாகவே முன்வந்து போட்டி போட்டுக்கொண்டு பிராந்தியத்தின் காணியை மத்திய அரசுக்கு வழங்கும்" என்கிறது.

சிங்கள மக்களிடம் சொன்னதை தமிழ் மக்களிடமும் இது தான் எமது நிலைப்பாடு என சொல்லலாமே. அதுதான் இல்லை. தமிழ் மொழியில் வெளியிடப்பட்டுள்ள நூலில் மேற்படி எதுவும் இல்லை. மாறாக நேரெதிரான கருத்துக்கள் நிறைந்து கிடக்கின்றன. தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டுகின்ற தொனியில், தமிழ் மக்களை ஈர்க்கின்ற வகையிலேயே அவை சொல்லப்பட்டுள்ளன.

### தமிழ் நூலில் இன்னொன்று

"கோரிக்கைகள் அனைத்திலும் பிரதான இடத்தை வகிப்பது காணியில்லாப் பிரச்சினையே. முன்னிருந்த எந்த அரசாங்கமும் சரியான தீர்வை வழங்கவில்லை. எனவேதான் தமிழ் மக்களின் விரக்தி சுவாலை விட்டு எரிந்தது...."

...பொறுப்பு வாய்ந்த அரசு என்ற வகையில் விவசாயிகளின் பிரச்சினையை தீர்க்க வேண்டி கடப்பாடு எம்மீது உள்ளது. இதனை விட்டு நழுவவோ புறந்தள்ளவோ அரசாங்கத் தினால் முடியாது. காணிப்பிரச்சினையே இந்தத் துன்ப துயரங்களுகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

எனவேதான் காணி தொடர்பான அதிகாரத்தை வழங்க அரசு நேர்மையோடு முன்வந்துள்ளது. இனிமேல் வடக்கு கிழக்கு பிரதேசக்காணிப் பிரச்சினை முற்றாகத் தீர்க்கப்படும். இனிமேல் அவர்களது பாரம்பரியமதானதும் நவீனமயமானதுமான விவசாய முறைகளில் பண்புரீதியான முன்னேற்றமும் ஏற்படும். அனுகூலம் தரத்தக்கதாக இப்பிரச்சினை தீர்க்கப்படுவதால் த்னிநாடு கோருவதற்கான ஏதுக்களும் இல்லாதொழிந்துவிடும்..."

இவ்வாறு முழுக்க முழுக்க நேரெதிரான விதத்தில் தமிழ் மக்ளுக்கு நம்பிக்கையூட்டிச் செல்கிறது தமிழ் நூல்.

"பெருந்தன்மையோடு இவ்வளவையும் வழங்க இருக்கின்ற அரசே நாம்!" என்பதை பல இடங்களில் வெளிப்படுத்த முயல்கிறது இந்நூல்.

தமிழ் மக்களிடம் தைரியமாக கூறுவதை சிங்கள மக்களிடம் கூற முடியாதது ஏன்? சிங்கள மக்களிடம் கூறியதை தமிழ்மக்களிடம் தைரியமாக கூற முடியாதது ஏன்? இரு சமூகத்தவருக்கும் நேரெதிரான கருத்தைக் கூற வேண்டியதன் அவசியம் என்ன? உண்மையில் அரசின் உறுதியான நிலைப்பாடாக இதில் எதைக் கொள்வது? இதுவரைகால அணுகுமுறைகளைக் கொண்டு இத்திட்டம் பின்னோக்கி போவதாகக் கொள்ளலாமா?

### அடிவருடிகள்?

அரசு நேர்மையாகவே தீர்வு முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக பல புத்திஜீவிகள், அரசசார்பற்ற நிறுவனத்தவர்கள் சிலரும் நம்பி வருவதானது அவர்களது அப்பாவித்தனத்தை குறிக்கிறதா அல்லது அடிவருடித்தனத்தை குறிக்கிறதா தெரியவில்லை.

யோசனையை ஐ.தே.க. ஒரு வேளை எதிர்த்தால் பாராளுமன் றத்துக்கு கூட முன்வைக்காது நேரடியாக கருத்துக்கணிப்புக்கு விடப்போவதாக நீதியமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூட சில வாரங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

அவ்வாறு ஒரு கருத்துக்கணிப்பு வைக்கப்படும்பட்சதத்தில் அதனை ஆதரிக்கவே வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இவர்கள் இருந்து வருகிறார்கள். "அதில் குறைபாடுகள் இருந்தபோதும் சிங்கள மக்கள் முதன்முறையாக அங்கீகரித்திருக்கிற ஒன்றாக இருப்பதால் இதனை ஊக்குவிக்கவேண்டும்." என்பதே அவர்களது கருத்து. அதற்காக பல லட்சங்கள் செலவளித்து பிரச்சாரம் செய்தும் வருகின்றார்கள். ஆனால் அதில் உள்ள குறைபாடுகள் குறித்து அரசிடம் ஒரு போதும் கேள்வி எழுப்பியது கிடையாது. அது மட்டுமன்றி குறைபாடுகள் என்ன என்பதைப்பற்றி தேடும் முயற்சிகள் எதுவும் கூட செய்ததாக தெரியவில்லை. பொதுப் புத்தி மட்டத்திலேயே குறைபாடுகள் இருப்பதாக உள்ளளவில் கருதி வருகின்றனர். அவர்கள் தரப்பில் பார்த்தால் கூட சிங்கள மக்களிடம் "ஆதரவளியுங்கள்" எனக்கோரும் செயற்திட்டமொன்று (Agenda) இருந்தால் அரசிடம் "இது போதாது" எனக்கோரும் செயற்திட்டம் இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே சிங்கள பேரினவாத அரசுக்கு துணை போகும் வேலையையே செய்கிறார்கள். கண்மூடித்தனமான இந்த போக்கானது, இதனை விமர்சிப்பவர்களைக் கூட கடும் எதிரிகளாக காணவே இவர்களைத் தூண்டுகிறது. நிச்சயம் இன்றைய இத்திட்டம் தமிழ் மக்களின் அவநம்பிக்கையையும் விரக்தியையும் அதிகரிக்காது விடும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

## யார் இந்த...

துள்ளது. ஆனால் ராசிக்குழுவினர் மாத்திரம் அப்பகுதியில் உழவு இயந்திரம் வைத்திருப்பவர்களிடம் உழவு இயந்திரத்தை பறித்து வந்து கட்டுக்காடு பகுதியில் இருந்து வலையிறவு பாலத்தினூடாக மண் ஏற்றி வந்து நகருக்குள் ஒரு மண்லோட் 1000 ரூபாவுக்கு விற்கின்றனர். உழவு இயந்திரம் கொடுக்கும் ஒவ்வொருவரும் அதற்குரிய டீசல் கொடுக்க வேண்டும் அல்லது அதற்குரிய பணம் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அடியும் உதையும் தான். இதே போன்று வாழைச்சேனையிலும் ராசிக்குழுவினர் பொதுமக்களை துன்புறுத்தி வருகின்றனர். தயா, காந்தன், பாஸ்கரன் போன்றவர்கள் இளைஞர்களை வழிமறித்து அவர்களின் அடையாள அட்டைகளையும் பறித்து அவர்கள் குறிப்பிடும் இடத்துக்கு கூட்டிச்சென்று 'எங்களுடையக் குறூப்பில் சேருகின்றாயா' என்று வற்புறுத்துகின்றார்கள். இல்லை என்று சொன்னால் அவர்களை அடித்து துன்புறுத்தி அவர்கள் வைத்திருக்கும் பணங்களையும் பறித்துவிட்டு அனுப்புகின்றனர். இவர்கள் முஸ்லீம் இளைஞர்களையும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதோடு தங்களின் குறூப்புடன் வருமாறு சில இளைஞர்களை பலாத்காரமாக தடுத்தும் வைத்துள்ளதாகவும் தெரியவருகிறது. வாழைச்சேனை புதுக்குடியிருப்பு சரஸ்வதி வித்தியாலயத்துக்கு முன் யூன் மாதம் 24ம் திகதி நடைபெற்ற புலிகளின் தாக்குதல் சம்பவம் ஒன்றில் ராசிக் குழுவைச் [illegible]ந்த ஒருவர் கொல்லப்பட்டார். இதில் புலிகள் எதுவித சேதமும் இன்றி தப்பிச் சென்று விட்டனர். ஆனால் அங்கு நடந்த ஷெல் தாக்குதல்களினால் பாடசாலை ஓடுகள் சிதறுண்டு மாணவர்களுக்கு காயங்களும் ஏற்பட்டிருக்கின்றது. இந்த சம்பவத்தில் ஈடுபட்ட ஏனைய மூவரிடமும் ராசிக் கேட்டாராம்; 'உங்களால் ஒரு புலியைத்தானும் சுட முடியவில்லையா என்று', அதற்கு அவர்கள் புலியினர் பாடசாலைப் பகுதியில் மறைந்திருந்ததால் எங்களால் சுடமுடியவில்லை' என்று' கூறினார்களாம். அதற்கு ராசிக் உங்களிடம் மோட்டார் ஷெல் இருக்கவில்லையா? ஏன் ஷெல் அடித்து பாடசாலையை தகர்க்க வில்லை. எனக்கு பாடசாலை மாணவர்கள் முக்கியமல்ல. புலிகளைச் சுடுவதுதான் முக்கியம் என்று கூறி அவர்கள் இந்த வேலையைச் செய்யாததற்காக தண்டனையாக மூன்று நாட்களுக்கு அந்த மூன்று பேரையும் மரத்தில் ஏற்றி வைத்தானாம். இவர்களுக்கு மூன்று நாட்களுக்கும் எதுவித அன்ன ஆகாரமும் இல்லை. பாவம், பணத்தை நம்பி வந்தவர்களுக்கு இதுவும் தேவை இன்னமும் தேவை. 29ம் திகதி பி.ப. 4.30 மணியளவில் ஆஞ்சநேயர் ஆடைத்தொழிற்சாலைக்கு முன்பாக பிரபா (16) என்ற கொக்குவிலைச் சேர்ந்த பாடசாலை மாணவன் ராசிக் குழுவினரால் சுடப்பட்டார். இவர் ரியூசனுக்கு சென்று திரும்பி வரும் வழியில் இவரை வழிமறித்து விசாரித்து பின் சுட்டுவிட்டு இரண்டு கைக்குண்டுகளையும் ஒரு சயனைட் வில்லையையும் பக்கத்தில் போட்டு விட்டு சென்றுள்ளனர். ஐ.சி. ஆர்.சி. மூலமாக இவரது சடலத்தை புலிகளுக்கு அனுப்பிய போது புலிகள் சடலத்தை ஏற்க மறுத்துவிட்டனர். இவருக்கும் எங்களுக்கு எந்தவித தொடர்பும் இருக்கவில்லை என்று புலிகள் கூறினர். இவ்வாறான செயற்பாடுகளினால் மாணவர்கள் சுதந்திரமாக பாடசாலைகளுக்கு செல்ல முடியாத நிலையே இங்குள்ளது. அண்மையில் புளொட் இயக்க உறுப்பினர்களால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் புலனாய்வுக்காக பற்பொடிக் கம்பனியில் தடுத்து வைக்கப்பட்டார். இவர் புலனாய்வின் போது அடிதாங்க முடியாமல் 29.06.1997 அன்று பி.ப. 5.00 மணியளவில் முகாமின் பின்பகுதியினால் தப்பி ஓடி மட்டக்களப்பு பொதுவைத்திய சாலைக்குள் புகுந்துள்ளார். இவரை பின்னால் துரத்திவந்த புளொட் உறுப்பினர் புதூரைச் சேர்ந்த சலீம் என்பவர் வார்த்தடியினால் தலையில் அடித்ததனால் இறந்துள்ளார். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் படுகின்ற பல இளைஞர்கள், யுவதிகள் இந்த பற்பொடிகம்பனியில் புலனாய்வுக்காக தடுத்து வைக்கப் பட்டிருக்கின்றார்கள். இவ்வாறாக மட்டக்களப்பில் தமிழ் இளைஞர்கள் அப்பாவித்தனமாக இவர்களால் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். இதை வாய்விட்டு கேட்க முடியாத நிலையுமே உள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே -33



# பாலியல் உணர்வு: ஆரம்பம் எது?

ஆங்கில மூலம்:
டொக்டர். ஜெயிம் கி கினோல்ட்
தமிழில்:
அருணன்

பாலியற் கல்வி

பெரும்பாலான பெற்றோர்கள் பாலியல் கல்வியை ஒரு உரையாடலென்றே கருதுகின்றனர். அவர்கள் பிள்ளைகளின் வாலிப அல்லது யௌவனப் பருவத்திற்கு முந்திய நிலையைப் பற்றிக் கவலையற்றவர்களாக 'இந்தப் பருவத்தில்' அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று கருதுகின்ற 'வாழ்க்கை பற்றிய உண்மைகளை' சொல்கிறார்கள். பையன்களுக்கு பாலியல் நோய்கள் பற்றியும் சிறுமிகளுக்கு கர்ப்பமுண்டாகி விடக்கூடிய ஆபத்துப் பற்றியும் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் பாலியற் கல்வி அதற்கு முன்பாகவே ஆரம்பமாகிவிடுகிறது.

### பெற்றோரது சொந்த உடலுணர்வு

பாலியற் கல்வி, பெற்றோர்களது சொந்தப் பாலியல் உறுப்புகள் தொடர்பான உணர்வுகள், மனப்பாங்குகளுடன் தொடங்கி விடுகிறது. அவர்கள் தமது உடலின் தோற்றத்தை, அதன் மணத்தை, உணர்வை விரும்புகிறார்களா அல்லது அவற்றில் அநாகரிகமானவை, அசிங்கமானவை, அழகற்றவை என்று சில விடயங்கள் இருப்பதாக நம்புகிறார்களா? அவர்கள் தமக்குள் ஒருவர் மற்றவரது நிர்வாண நிலை குறித்து சந்தோசமடைகிறார்களா அல்லது வெட்கத்தால் கண்ணை மூடிக்கொள்ளவோ, துணியால் உடலை மூடிக் கொள்ளவோ செய்கிறார்களா? அவர்கள் தமது அல்லது தமது துணைவரின் பால் தொடர்பாக வெறுப்போ எரிச்சலோ கொண்டவர்களாக இருக்கிறார்களா அல்லது அதை விரும்புகிறார்களா? அவர்கள் ஒருவரையொருவர் புரிந்துணர்வற்றவராக பயன்படுத்திக்கொள்பவராக கருதுகிறார்களா அல்லது சந்தோசமூட்டும் இன்பத்தைப் பகிர்ந்து கொள்ள உதவுபவராக கருதுகிறார்களா... என்பன பிள்ளைகளின் பாலியற் கல்விக்கு அடிப்படையாகி விடுகின்றன.

பெற்றோரது உணர்வுகள் எப்படி இருப்பினும், அவை பிள்ளைகட்கு கடத்தப்பட்டு விடும். அவர்களது பேச்சு பறவைகள் பற்றியோ, வண்டுகள் பற்றியோ, அல்லது பூவைப்பற்றியோ இருக்கலாம், ஆனால் பெற்றோர்களது பேசப்படாத உணர்வுகள் பிள்ளைகட்கு கடத்தப்பட்டு விடும் இந்தக் காரணத்தினால் தான் பிள்ளைகளது பாலியல் தொடர்பான கேள்வி ஒன்றிற்கு எப்படிப் பதிலளிப்பது என்ற பெற்றோரின் பிரச்சினைக்கு சரியான பதில் கொடுக்க முடியாதிருக்கிறது. முதலில் பெற்றோர்களது இவ்விடயம் குறித்த உணர்வுகள் புரிந்து கொள்ளப்பட்டு அவர்களது கவலைகளும் சங்கடங்களும் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும்.

### பாலியல் உணர்வுகளின் தொடக்கம்

பிறந்த நாள் முதல், குழந்தைகள் உடல் உணர்வு இன்பத்தை அனுபவிக்கத் தொடங்குகிறார்கள். அவர்கள் வளர்ச்சியோடு சேர்ந்து பாலியல் மனப்பாங்கு அவர்களை உருவாக்குவதில் பங்கு வகிக்கிறது. ஒரு வளர்ந்தவரைப் போல இல்லாவிட்டாலும், தனது உடலதும் உடலின் இயக்கங்கள் குறித்ததுமான குழந்தையின் சந்தோசங்கள் இயல்பில் பாலியல் (Sexual) தன்மை வாய்ந்தவையே.

குழந்தை கொஞ்சம் வளர்ந்து அதற்கு இயலும் பருவம் வந்ததும்

அது உடலை ஆராயத் தொடங்குகிறது. அது தன் கால்களை ஆட்டுகிறது. தான் அணைக்கப் படுவதை, சீண்டப்படுவதை, தழுவப்படுவதை விரும்புகிறது. இந்த ஆரம்பகால தொடுகை உணர்வே அதன் ஆரம்பகால பாலியற் கல்வியாகும். இவற்றின் மூலமாக அது அன்பை பெற்றுக் கொள்ளக் கற்றுக்கொள்கிறது.

குழந்தைகளை அணைப்பதும், விளையாடுவதும் கூடாது என்று தாய்மார் தடுக்கப்பட்ட ஒரு காலம் இருந்தது. இது குழந்தைகளைப் பழுதாக்கிவிடும் என்பதால் இப்படிச் சொல்லப்பட்டது. ஆயினும் இதை பெரும்பாலான தாய்மார் அர்த்தமுள்ளதாக ஏற்றுக்கொள்ளவில்லை. தாய்மார் குழந்தைகளுடன் விளையாடாதிருப்பதே அவர்களை பழுதாக்கும் என்பதை இயற்கையாகவே அறிவார்கள். ஆனால் இப்போது குழந்தைக்கு அணைப்பு, ஆதரவு, தொடுகை உணர்வும் மிகவும் அவசியம் என்பதை அறிவோம்.

ஒரு குழந்தை, வாய் மூலமான சந்தோசத்தை தருகிறதை கண்டு பிடிக்கிற போது, அதற்கு சாத்தியமாகிற, அசையக்கூடிய எல்லாப் பொருட்களும் அதன் வாய்க்குள் செல்கின்றன. பெருவிரல், போர்வை, விளையாட்டுப்பொருட்கள் எல்லாமே அதன் வாய்க்குள் போகின்றன. உறிஞ்சுதல், சூப்புதல், கடித்தல் என்பன சந்தோசமான உணர்வை, அவை சாப்பிட உகந்ததல்லாத பொருட்களாக இருப்பினும், தருகின்றன. இந்த வாய் இன்பம் ஒரு போதும் நிறுத்தப்படக் கூடாது. ஆனால் ஒழுங்குப்படுத்த வேண்டும். வாய்க்குள் போவது சுத்தமான பொருளா என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். சில குழந்தைகள் சாப்பிடுவதன் மூலம் தமது வாய் இன்பத்தை அனுபவிக்கிறார்கள். வேறு சிலருக்கோ மேலதிகமான உறிஞ்சுதலும் தேவைப்படுகிறது. இவை இயல்பாகவே வழங்கப்பட வேண்டும். குழந்தைகளின் முதலாவது வயதில், அது உலகத்தைக் காணும் கண்ணாடி அதன் வாய்தான். அது ஒரு சந்தோசமான பிம்பத்தை காண அனுமதிக்கப்பட வேண்டும்.

இந்த உறிஞ்சல் தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அவை மறையப் போவதில்லை. மாறாக அவை மெல்லியதாகவோ பெரியதாகவோ மாறுபட்டவிதத்தில் வெளிப்படுகின்றன. ஒரு குழந்தை தொடர்ந்தும் விரல் சூப்பக்கூடும். வளர்ந்த ஒரு பிள்ளை தனது இரேசரை (அழிக்கும் இறப்பர்) சூப்பக் கூடும். ஒரு வளர்ந்தவர் சிகரட் அல்லது சுருட்டை உறிஞ்சக் கூடும். குழந்தைகள் எல்லாப் பொருட்களையும் கடிப்பதும் சிறுவர்கள் நகம் கடிப்பதும், வளந்தோர் பேசும் சொற்களைப் பேசுவதும் கூடும்.

*வரும்..*



# ஞானம்

மறுபடியும் போர் மூண்ட ஒரு மாலைப் பொழுதில்
வெண்தாமரையில் கோர்த்த மாலைகளுடனும்
கை நிறைய -
இறக்கை பெயர்க்கப்பட்ட வெண்புறாக்களுடனும்
அவர்கள் வந்தனர்.

கடைவாயில் துருத்திய கோரப்பற்கள் தெரிய
ஒரு நீண்ட வஞ்சகம் நிறைந்த சிரிப்போடு
என்னிடம் கேட்டனர்
ஒரு செங்கல்லும் ஒரு புத்தகமும்.

நான் சொன்னேன் -
எனக்குப் பசிக்கிறது உணவு வேண்டும்
மழையிலும் வெய்யிலிலும் பனியிலும் குளிரிலும்
அலைதல் கூடாது எனக்கொரு வசிப்பிடம் வேண்டும்
அதனுடன் உடுத்திக் கொள்ள உடையும்.

உனக்கு இப்போதைக்கு ஞானம் வேண்டும்
அதற்கென ஒரு ஞானக்களஞ்சியம் கட்டி வழங்க
ஒரு செங்கல்லும் ஒரு புத்தகமும் வேண்டுமென்றனர்
மீளவும்.

சொன்னேன் -
காணாமல் போன புதல்வியை மீட்டுத்தருக
போர்குதறிப்பிரிந்த புதல்வனை உயிர்ப்பிக்குக
சாகாணா வீட்டுக்கடுகெலாம் என்னிடம் இராயினும்.

நீ சமாதானத்தின் எதிரி அறிவின் சத்துரு
பசிக்கிறவன் முதல் பயங்கரவாதி
சொன்னார்கள் என் தலையைப் பிடித்து சுவரில் மோதினர்.

மூர்ச்சையுற்ற நான் விழித்தெழுந்த போது
அவர்கள் போயிருந்தனர்
எஞ்சியிருந்த எனது செங்கல்லுடனும் புத்தகத்துடனும்.

எனக்கோ ஞானம் வந்திருந்தது.

ஜபார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ்ப்பாணம்: காணாமற் போவோர் கதை



ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரணதுங்கவின் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் ''சமாதானத்துக்கான யுத்தம்'' வடகிழக்கில் காணாமல் போவோரின் கதைகளைத்தான் நீட்டிக் கொண்டே போகிறது.

வடக்கிலும், கிழக்கிலும் தொடரும் சமாதானத்திற்கான துயர யுத்தம் நாள்தோறும் எத்தனையெத்தனையோ மனித உயிர்களை பலியெடுக்கிறது.

அரச படைகளின் யாழ் குடா நாட்டின் மீதான ரிவிரெச படையெடுப்புக்கு பின்னர் இன்று வரை குடா நாட்டில் கைதானோர், காணாமல் போனோர், படையினரின் தாக்குதல்களில் பலியானோர், ஆயிரத்துக்கும் மேலென அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

யாழ் குடாநாட்டிலிருந்து கொழும்புக்கு வந்திருந்த கைதானோர், காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்த ஒருவரை சந்தித்தபோது குடாநாட்டில் இடம் பெற்று வரும் அரச படைகளின் மனித உரிமை மீறல்களை மக்களின் துயரங்களை அறியக்கூடியதாக விருந்தது.

ரிவிரெச இராணுவப் படையெடுப்புக்கு பின்னர் 720க்கு மேற்பட்டோர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு என்ன நடந்ததென்று தெரியாமல் இன்னும் மர்மமாகவே உள்ளது.

இவர்களுள் 620பேரின் முழு விபரங்களும் கைதானோர் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்திடம் உள்ளது. இவர்களில் 4 பல்கலைக்கழக மாணவர்கள், 20பேரளவில் பாடசாலை மாணவர்கள், 15 பேரளவில் இளம் யுவதிகள் ஆவர். அனேகமானோர் 1996 ஜூன் ஜூலை, ஒகஸ்ட் காலப்பகுதிகளிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதில் கூடுதலானோர் நாவற்குழி, கைதடி, நுணாவில், மறவன்புலவு பகுதிகளைச் சேர்ந்தவர்களேயாவர்.

காணாமல் போனோரின் பெற்றோர்கள், உறவினர்கள் யாழ் அரச அதிபர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் செய்தும், ஜனாதிபதிக்கு மகஜர் கொடுத்தும் எதுவும் நடைபெறவில்லை.

இறுதியில் காணாமல் போனோரின் உறவினர்கள், பெற்றோர்கள் யாழ் அரச அதிபர் அலுவலகத்துக்கு முன்னால் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்போவதாக அறிவித்ததும் அதை விட சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் அழுத்தம் காரணமாகவும் ஒரு விசாரணைக் குழுவுக்கு உத்தரவிடப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளைக்கொண்ட குழுவே அது. பனாகொட, (வடகிழக்கில் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டிருப்போருக்கு பொறுப்பானவர்) பாதுகாப்பு அமைச்சின் இராணுவ உயரதிகாரி பந்துலகுணவர்தன ஆகியோரைக்கொண்ட குழுவே விசாரணைகளை மேற்கொண்டது.

இவர்களின் விசாரணைக்குழு மூன்று கட்டமாக தனது விசாரணைகளை பலாலியில் நடத்தியது. அதில் 320பேரே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள். அதுவும் கேள்விக்கொத்துக்களை அவர்களே தயார் செய்து கொண்டு வந்திருந்தார்கள். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு மாத்திரமே பதில் சொல்ல வேண்டியிருந்தது

சர்வதேச நிர்ப்பந்தங்களுக்கு ஒரு கண் துடைப்பாகவும், காலம்கடத்தும் ஒரு நடவடிக்கையாகவுமே இதை அரசாங்கம் மேற்கொண்டதாக தெரியவருகிறது.

இதைத் தொடர்ந்தும் கைதானோர், காணாமல் போனோர், பாதுகாவலர் சங்கம் யாழ் அரச செயலகத்துக்கு முன்னால் கூட்டம் ஒன்றை நடத்தியும் மீண்டும் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை கொடுத்தது. சுயாதீனமான ஒரு குழுவே விசாரணையில் ஈடுபடவேண்டுமென கேட்டுக் கொண்டது.

பின்னர் காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு பனாகொடையின் ஒப்பமிடப்பட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அதில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டதாகவும், அவர்கள் வீடு வந்து சேரவில்லையெனில் ஒன்று புலிகளுக்கு அல்லது இந்தியாவுக்கு சென்றிருக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

காணாமல் போனோர்களின் பெற்றோர், உறவினர்கள் பாதுகாப்பு அதிகாரிகளை சந்தித்து தங்கள் பிள்ளைகளை விடுவிக்குமாறு கேட்கும் போதெல்லாம் இதே போன்ற பதில் தான் அனேகமாக படையதிகாரிகளால் கூறப்பட்டு வதுண்டு.

குடாநாடு இப்போது படையினரின் முழுக்கட்டுப்பாட்டில் இருக்கிறதாக சொல்லப்படுகிறது. அதுவும் ஒரு இராணுவ முகாமிலிருந்து புலிகளுக்கு அல்லது இந்தியாவுக்கு தப்பிச்செல்வதெனில் அதுவும் இவ்வளவு பேரும் (720) படையினரும் புலிகளுக்கு உதவுகிறார்களா? எனக்கேட்க தோன்றுகிறது, என்கிறார் கொழும்பு வந்த காணாமல் போனோர், கைதானோர், பாதுகாவலர் சங்கத்தை சேர்ந்த ஒருவர்.

காணாமல் போனோரில் அனேகமானோர் தென்மராட்சி பகுதியைச் சேர்ந்தவர்களேயாவர். காணாமல் போனோர் படையினரால் கைது செய்யப்பட்டதை நேரில் பார்த்த போதியளவு சாட்சிகள் உண்டு.

அதை விட தென்மராட்சியில் சுற்றிவளைப்பின் போது பெற்றோர், உறவினர் முன் 46பேர் ஒரே நாளில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதைவிட 70க்கு மேற்பட்ட இளம் பெண்கள் கணவன்மாரை இழந்து கைக்குழந்தையுடன் உள்ளனர்.

1996 இறுதிக் காலப்பகுதியில் யாழ் பல்கலைக்கழக மாணவன் சோமஸ்கந்தர் (மட்டுவில்) கைது செய்யப்பட்டபோது யாழ் பல்கலைக்கழக நிர்வாகமோ பல்கலைக்கழக மாணவர் அமைப்போ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவரின் தாய் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கெஞ்சி மன்றாடியும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையாம். பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்திருந்தால் தனது மகனை மீட்டிருக்கலாம் என அத்தாய் கைதானோர், காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்திடம் முறையிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

தமது சங்கம் 7ம்திகதி ஜனாதிபதியை சந்திப்பதற்கு இருப்பதாகவும் ஆனால் 7ம்திகதி ஜனாதிபதி சந்திப்பார் என்பது கேள்விக்குறியே எனவும் ஜனாதிபதி இப்போதைக்கு தங்களை சந்திப்பதை தவிர்ப்பதையே பெரிதும் விரும்புவதாக தெரியவருகிறது என அவர் மிகவும் கவலையுடன் கூறினார்.

ஜனாதிபதியிடமிருந்து தமக்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால் யாழ் குடாநாட்டில் வெகுஜனப் போராட்டங்களில் ஈடுபடப்போவதாகவும், தென்னிலங்கையிலுள்ள மனித உரிமைகள் அமைப்புகளுடன் தம்மை இணைத்துக் கொள்ளவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கொழும்பில் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்ட போது தங்களால் முழுமையாக செயற்படமுடியாத நிலையிலுள்ளதாகவும், இப்போதைக்கு எதுவும் செயயமுடியாதெனவும் கூறியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதை விட வாசுதேவ நாணயக்கார எம்.பி., சர்வோதயத் தலைவர் ஆரியரத்ன, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் (மோர்ஜ்) ஆகியோரிடம் முறையிட்டபோது அவர்களும் இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து தமது பங்களிப்பை நல்குவதாக குறிப்பிட்டதாகவும் தெரியவருகிறது.

இவ்வமைப்பு யாழ் குடாநாட்டில் பல இராணுவ அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே செயற்படுவதாகவும் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடக் கூடாது, தகவல்களை வெளியே சொல்லக்கூடாது என படையதிகாரிகளால் எச்சரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இன்னமும் யாழ் குடாநாடு இராணுவ அழுத்தங்களுக்குள்ளேயே உள்ளதாகவும், இப்போது ஆனைக்கோட்டை, சுதுமலை, மானிப்பாய் பகுதிகள் மிகவும் மோசமானதாயுள்ளதாகவும் தெரியவருகிறது.

புலிகள் நடத்தும் ஒவ்வொரு தாக்குதலுக்கும் பதிலடியாக அருகிலுள்ள பொதுமக்கள் மீதே இராணுவத்தினர் தமது வஞ்சகத்தை தீர்த்துக்கொள்வதாகவும் குறிப்பிட்டார். இரவு ஆறு மணிக்கு பின்னர் வீதியில் நடமாட முடியாத சூழ்நிலை. சுற்றிவளைப்புகள், கைதுகள் தொடர்ந்து கொண்டேயிருப்பதாகவும் கவலையுடன் தெரிவித்தார்.

ஆனால் கேர்ணல் விஜேரட்னாவின் பொறுப்பிலுள்ள வடமராட்சி பகுதியில் நிலைமை ஓரளவு சுமுகமாக இருப்பதாகவும் இவர் பொது மக்களை தம்வசம் இழுத்தெடுப்பதில் ஓரளவு வெற்றி கண்டுள்ளதாகவும் பொது மக்கள் இவர் மீது ஓரளவு நன்றியுடன் இருப்பதாகவும் குறிப்பிட்டார். இருந்தும் இங்கும் பலர் காணாமல் போயுள்ளார்கள். இப்போதும் கைது செய்யப்படுகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதையெல்லாம்விட 1994, 1995 காலப்பகுதியில் கடலில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர், புலிகளின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டோர் எனப்பார்த்தால் காணாமல் போனோரின் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும்.

ஜனாதிபதியை சந்திப்பதற்கு அரச அதிபர் மூலமும் தங்களாலும் பலமுறை முயற்சித்தும் இறுதியில் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவே அதற்குரிய ஒழுங்குகளை செய்து தந்ததாகவும் குறிப்பிட்டார்.

புலிகளிடமிருந்து மக்களை மீட்பதற்கான யுத்தம் இதுவரை 700க்கு மேற்பட்டோரை காணாமலாக்கியும், நூற்றுக்கணக்கானோரின் உயிர்களைக் குடித்தும், நூற்றுக்கணக்கானோரை சிறைகளிலடைத்தும் சுடுகாட்டை நோக்கி செல்கிறது. அரசின் சமாதானத்துக்கான யுத்தம்.

**எம்.பிரதீனா**

## முஸ்லிம் மாகாண

4→

கபளீகரம் செய்வதற்கு அமைச்சர் அஷ்ரஃப் துணைபோனவர் ஆகினார். புனித பௌத்த நகர் அபிவிருத்தி என்றும், தீகவாபியில் இருந்து ஒலுவிலுக்கான சிங்கள ராஜ்ஜியத்தை விஸ்தரிப்பதற்கான தீகவாபி நெடுஞ்சாலை என்றும், சிங்களவர்களுக்கு தனது அமைச்சர் பதவிக்காகவும் நன்றியறிதலை வெளிப்படுத்தியதை முஸ்லிம் காங்கிரசின் ஒரு அரசியல் தற்கொலை முயற்சியாகவே பார்க்க வேண்டியுள்ளது.

தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்து விட்டே, முஸ்லிம் சமூகத்திற்கு அநீதி இழைக்கப்பட்டால் அல்லது தான் அமைச்சரவையில் இருப்பதை சந்திரிகா விரும்பாவிட்டால் தான் பதவியை தூக்கியெறிவதற்கு தயாராகவே இருக்கிறேன் என வெறும் பம்பாத்து அறிக்கைவிட்ட அமைச்சர் அஷ்ரஃப் ஜூன் 9ம் திகதி தனது அமைச்சர் பதவி அந்தஸ்து குறைக்கப்பட்டதுடன் சந்திரிகாவை அரசியல் ரீதியாக பயமுறுத்தியதும் பின் தன் அமைச்சர் பதவியையும் காப்பாற்றிக் கொள்வதற்காக தீகவாபியில் தனது விசுவாசத்தை ஜனாதிபதியிடம் காட்டி தீகவாபியைத் திறந்து வைத்த கையோடு தனது பழைய அமைச்சர் பதவியை எடுப்பதற்கு கொழும்பு திரும்பிய அமைச்சர் அஷ்ரஃப் அவர்களுக்கு பலத்த ஏமாற்றமே காத்திருந்தது. ஜூன் 26ம்திகதி 'ஐலன்ட்' பத்திரிகைக்கு அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் அளித்த பேட்டியில் தனக்கு மாகாண சபை அமைச்சு பதவியே இப்போது தரப்பட்டிருப்பதாக தனது குறையை வெளிப்படுத்தியுள்ளார். அமைச்சர் அஷ்ரஃப் தீகவாபியில் தனது அமைச்சுப்பதவியைக் காப்பாற்றிக்கொள்வதற்காக மேற்கொண்ட கைங்கரியமும், நன்றிக்கடனும் முஸ்லிம்களை பாரிய ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியிருக்கிறது.

தனது அமைச்சில் கை வைத்தவுடன் தனது உத்தியோகபூர்வ வாஸஸ்தலத்தில் இருந்து இரவோடு இரவாக வெளியேறிய அஷ்ரஃப் - முஸ்லிம்களின் ஹஜ்ஜுப்பெருநாள் விடுமுறை தினத்தை இரத்து செய்த போது இதே ஆவேசத்தில் தனது அடையாள எதிர்ப்பை வெளிப்படுத்தி இருந்தால் அஷ்ரஃபை நாம் வேறு ஒரு கோணத்தில் பார்த்திருக்க முடியும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






இந்த விஞ்ஞான கேள்வி பதில் நூலும், இவ்வரிசையில் வர இருக்கும் இன்னபிற பன்னிரண்டு நூல்களும் தமிழில் எழுத என்னைத் தூண்டியது, ஆயிஷாதான். இந்த நூலுக்குள் நுழையும் முன்னர் என் ஆயிஷாவைத் தெரிந்து கொள்ளுங்கள். ஏனெனில் இந்த புத்தகமெங்கும் வார்த்தைகளாக வாழ்பவள் அவள்தான். உங்களிடம் சொல்வதில் என்ன இருக்கிறது? இதை எழுதிக்கொண்டிருக்கும் இந்த நொடியில் என் விழிகள் கனத்துப் போகுமாறு கண்ணீர் கொப்பளிக்கிறது. இந்த நூலை எழுதிய ஒரு தேர்ந்த விஞ்ஞானவாதிக்கும் ஆயிஷாவின் கதையை எழுதிக் கொண்டிருக்கும் ஒருத்திக்கும் இடையில்தான் எத்தனை வித்தியாசம்? என் ஆயிஷாவை நினைக்கும் போது மட்டும் இப்படிக் குழந்தை மாதிரி, துக்கம் கொப்பளிக்க அழ நேர்கிறது எனக்கு.

எனக்கு முதன் முதலில் தெரியவந்த ஆயிஷாவுக்கு 15 வயது. நான் அறிவியல் ஆசிரியையாக பணியாற்றிய ஒரு கிறிஸ்துவப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பி பிரிவில் அய்ம்பத்தாறு மாணவிகளில் ஒருத்தி. அப்பள்ளி மாணவியர் விடுதியின் காப்பாள யுவதிகளில் ஒருத்தியாக அங்கேயே தங்கியிருந்த எனக்கு ,சற்றேறக்குறைய ஒரு செக்கு மாட்டு வாழ்க்கை பழகிப் போயிருந்தது. நாங்கள் எட்டுபேர் அவ்விதம் காப்பாள யுவதிகளாக நியமிக்கப்பட்டிருந்தோம். திருமணமாவதன் மூலம் இந்தச் சுழல் வாழ்விலிருந்து தப்புவோர், அவர்களுக்குப் பதிலாய் வரும் புதியோர், பிறகு தங்கள் திருமணத்திற்காகக் காத்திருக்கத் தொடங்கும் அப்பணியிடத்தில் ற்றேறக்குறைய நிரந்தர யுவதிகளாக நானும் ஆஸ்துமாக்காரி ஒருத்தியும் திருமணமாகாமல் தங்கிப்போனோம்.

நீண்ட பகலும் நிம்மதியற்ற இரவுகளும் என்னைத்தின்றுகொண்டிருந்த அந்த நாட்களில் எனக்கு அறிமுகமானாள் அவள். அதிகம் கவர்கிற விதமில்லை ஆயிஷா. பற்கள் துருத்தியபடி முகத்தில் வந்துவிழுகிற கேசத்தைப் பற்றிய அக்கறையின்றி நாலாவது வரிசையில் குச்சியாக அமர்ந்திருக்கும் ஒருத்தி ஆசிரியையின் அபிமானத்தைப் பெற வாய்ப்பில்லை. தவிர நான் அவர்களது வகுப்பாசிரியை இல்லை. வருகைப் பதிவேட்டை சரிசெய்யவும் ஒவ்வொரு மாணவியையும் நெருக்கமாக அறியவும் வாய்ப்பு இல்லை. ஆகையால் முதலில் எனக்கு ஆயிஷா யாரோ ஒருத்தி.

முதன் முதலில் அவளை அறியநேர்ந்த சந்தர்ப்பத்தை நினைக்கிறேன்.. எனக்கு சிலிர்க்கிறது. பல ஆண்டுகளாக ஒரு வகுப்பறையில் ஒரு குறிப்பிட்ட பாடத்தையே தொடர்ந்து போதிக்கும் எல்லா ஆசிரியைகளையும் போலவே நானும் ஒரு எந்திரமாய் ஆகிப்போயிருந்தேன். சில வேளைகளில் சில பாடங்களை நடத்தினோமா என்கிற நியாபகமே இல்லாமல் கூட நடந்திருக்கிறேன். இத்தனை வருடத்தில் பத்தாம் வகுப்பு அறிவியல் புத்தகத்தில் என்ன பெரிதாக மாறிவிட்டது? காலையில் எழுந்து பல் துலக்குவதை உற்சாகத்தோடா செய்கிறோம்? எப்போதாவது புதிய பிரஷ் அல்லது பேஸ்ட். இங்கே அதுவும் இல்லை. அதே ஓம்ஸ் விதி அதே செல் பிரிதல். புதிதாக தெரிந்து கொள்ளும் ஆர்வமற்று ஒரு இயந்திரமாய் கிரீச்சிட்டுக் கொண்டிருந்த என்னை என் முகத்தில் கேள்விகளால் ஓங்கி அறைந்தாள் ஆயிஷா.

அன்று காந்தவியல் குறித்த பாடம். பூமி எப்படி காந்தமாக உள்ளதென விளக்கிக்கொண்டிருந்தேன். ஒரு காந்தம் அதுவும் செவ்வக வடிவ காந்தம். அதைக் கையில் உயர்த்திக் காட்டினேன். சிரமமே இல்லை. பாரா பாராவாக பேசலாம். காந்தத்தின் வட நோக்கு அம்சம் குறித்து வழக்கமான எந்திரத்தனத்துடன் யாவரையும் உறங்கவைத்துவிடும் என் தொனியில் கரும் பலகையில் சில கிறுக்கல்களுடன் நடத்திக்கொண்டே போனேன். எவ்வளவு நேரமோ?

''மிஸ்'' என்றொரு குரல். கரும்பலகையிலிருந்து திரும்புகிறேன். எதற்காகவோ திடுக்கிட்டபடி எழுந்து நிற்பவளை வழக்கமான எங்கள் அக்கறையற்ற பார்வையுடன் ''என்ன.. வாந்தி வருதா?'' என்றேன். வகுப்பே கொல்லெனச் சிரித்தது. சரியான முண்டம் நான். எப்பேர்ப்பட்டவள்? என் ஆயிஷாவைப் போய் அப்படிச் சொல்லி இருக்கிறேன்.

''இல்ல மிஸ் ... சந்தேகம்''

இது நிச்சயம் ஆச்சிரியமான ஒன்றுதான். சராசரி ஆசிரியை யாரையும் இது எரிச்சலூட்டுவது. சட்டென முகம் சுருங்கி சுள்ளென எரிந்து விழும் குரலில் ''என்ன...?'' கடைசி வரிசையில் யாரோ சிரித்தார்கள். அப்பெண்ணின் இளைத்த தேகம் நடுங்குவதைக் காணமுடிகிறது. பக்கத்து இருக்கைக்காரி அவளது சட்டையை இழுக்கிறாள். காப்பாற்றி உட்கார வைக்கும் கடைசி முயற்சி. பின மறுபடி ''என்ன...?'' என்றேன்.

''மிஸ்.. அந்த காந்தத்தை ரெண்டா வெட்டினா




என்ன ஆகும் மிஸ்?

நெடுநாள் தூக்கத்திலிருந்து எழுந்தவள் போலானேன். இதுவரை இல்லாத அர்த்தத்தில் அவள் என்னைப் பார்த்தாள். நான் அறிவியல் போதினியாக வந்துவிட்ட இந்த ஆறு வருடத்தில் காந்தவியல் பற்றி நான் சந்திக்கும் முதல் சவால். காந்தத்தை பார்த்து யோசித்து மூன்று நிமிட அவகாசத்திற்குப் பிறகு சற்று பொறிதட்டியது.

''ரெண்டு காந்தம் கிடைக்கும்'' சரி பதில் சொல்லியாகி விட்டது.

ஆனால் அவள் உட்காரவில்லை. மிகக்கடினப்பட்டு புன்னகைக்க முயற்சி செய்தாள்.

''அந்த காந்தத்தை வெட்டிக்கிட்டே போனா? உதாரணமாக, நமக்கு இந்தக் காந்தத்தைத் துண்டாக்கிக் கிடைத்த காந்தங்களின் எண்ணிக்கை ஒரு முடிவுறா எண் என்று வெச்சிட்டா...?''

''ரொம்ப சிம்பிள்மா.... முடிவுறா எண்ணிக்கையில் காந்தம் கிடைக்கும்.''

மீண்டும் நிசப்தம், லேசாக வியர்க்கிறது, அவளுக்கு. வகுப்பு, உற்சாகத்தில் ஒரு போட்டியை ரசிப்பது போல் உணர்ந்தேன். உடனே ''உட்காரு'' என்றேன். பின் நடந்து கொண்டிருந்தேன். ஏதேதோ பாவனைக்காகப் பேசிக்கொண்டு குறுக்கு நெடுக்காக மணி அடிக்கும் வரை அலைந்து விட்டு வகுப்பிலிருந்து வெட்கமில்லாமல் மிடுக்காக வெளியேறினேன்.

அடுத்த வகுப்பறையை தாண்டியிருக்க மாட்டேன். கூடவே வந்தது நிழல். ''மிஸ்... பிளீஸ் மிஸ்... ஒரே ஒரு நிமிசம் மிஸ்...'' அப்படி சொல்லும் போது அவள் முகத்தைப் பார்க்க வேண்டும் நீங்கள், அதற்கு மேலும் புறக்கணிக்க முடியவே முடியாது.

''என்ன சொல்லு''

''காந்தம்... பத்தித்தான் மிஸ்''

''சொல்லும்மா.. டயம் ஆச்சில்ல?''

''முடிவுறா எண்ணிக்கையிலான காந்தங்களை ஒரே நேர் கோட்டில் வெச்சா.. எதிர் துருவங்களை கவரும் அதன் இயல்பு என்ன ஆகும்?''

''............''

''ஒரு காந்தத்தின் வடக்கு மறு காந்தத்தின் தெற்கை இழுக்கும். ஆனால் இழுபடும் காந்தத்தின் வடக்கே அடுத்துள்ள காந்தம் ஏற்கெனவே இழுத்துகிட்டிருக்கும் இல்லையா...? மிஸ்''

''ஆமா.. அதுக்கென்ன?''

''என் சந்தேகமே அங்கதான் இருக்கு.. எல்லா காந்தங்களின் கவர்திறனும் அவை ஒன்றெனக் கொண்டால்... அவை ஒட்டிக்கொள்ள வாய்ப்பே இல்லயே.. எப்புறமும் நகராமல் அப்படியே தானே இருக்கும்''

''........''

''ஏன் நாம இந்த பிரபஞ்சம் முடிவுறா எண்ணிக்கையிலான காந்தங்களை நேர்க்கோட்டில் வைத்தது போல் அமைக்கப்பட்டதா வெச்சிக்கக் கூடாது? அந்த கோணத்தில் பூமிங்கர காந்தத்த ஆராயலாம் இல்லயா?''

பதின்மூன்று வருட பள்ளி வாழ்க்கை. பின் மூன்றாண்டு இயற்பியல் பல்கலைக்கழகத்தில். இப்படியொரு கேள்வியை நான் கேட்டுக் கொண்டதாக நினைவில்லை. 'எங்கோ படித்ததாக நியாபகம் என்றேன். ஏதாவது சொல்ல வேண்டுமே.

The truth of the Magnets வெப்ரோட்ஸ்டூடண்ட்கிங்லீங் எழுதியது.. அருமையா இருக்கு.. படிக்கிறீங்களா மிஸ்...''

''இந்த புக்கெல்லாம் நீ படிக்கிறாயா?'' அவ்வளவுதான் என் ஆயிஷா கிடைத்து விட்டாள். அந்த அதிர்ச்சியில் இருந்து இன்று வரை மீள முடியவில்லை. அறை வாங்கியவளைப் போல புத்தகத்தை வாங்கிக்கொண்டு சரசரவென ஆசிரியர் அறைக்கு நடந்தேன்.




2

இப்போதும் சொல்கிறேன். அந்த நிமிடத்திலேயே ஆயிஷா என்னை முழுசாக வென்றுவிட்டாள். எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்திலும் அதன்பின் அவளை நான் வெறுத்ததே இல்லை. ஒரு செக்குமாட்டிற்கு இதைவிட அமர்க்களமாய் யார்தான் சூடு போட முடியும்?

இரவில் புத்தகத்தை எனது விடுதி அறையில் புரட்டிய போது மேலும் பல அதிர்ச்சிகள். முதலில் அது மாவட்ட மைய நூலகத்தின் முத்திரை பெற்றிருந்தது. அது திருடப்பட்டிருக்க வேண்டும். பின் அதில் ஆயிஷா அடிக்கோடிட்டிருந்த முறை. ஆங்காங்கே காணப்பட்ட அடிக்குறிப்புகள். எல்லாமே அவளைக்குறித்த எனது எண்ணத்திற்கு மேலும் மேலும் ஆச்சரியக்குறிகளை சுட்டிக்கொண்டிருந்தன. இல்லை, ஆயிஷா ஒரு குழந்தை இல்லை. அவள் யாரோ மனுஷிகூட இல்லை. வேறு ஏதோ பிறவி. கடவுளே.. நான் ஒரு நிமிடம் கூட தூங்கவில்லை.

விடுதியில் காலை வேளையில் அவளது வகுப்புப் பெண்களை அழைத்துப் பேச துடித்தேன். அவளைப் பற்றி அறிய வேண்டும். இத்தனை நாட்கள் அவளை அறியாது போனது ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தியிருந்தது. புத்தகமோ என் அறையே கனத்துப்போகும்படி என்னைத் திடுக்கிட வைத்துக்கொண்டிருந்தது. வேலைகள் ஓடவில்லை. இத்தனைக்கும் எல்லாவற்றையும் படிக்கவில்லை. அப்பெண் அடிக்கோடிட்டிருந்த வரிகளையும் அவளது அடிக்குறிப்புகளையுமே படித்து விழிபிதுங்கி போயிருந்தேன்.

முதல் பாட வேளையில் வகுப்பேதும் இன்றி ஆசிரியர் ஓய்வறையில் அமர்ந்து இருந்தேன். கையில் புத்தகம். ஓய்வறையில் ஆசிரியர்கள் புதிய புடவை டிசைன்களைப் பற்றி நீண்ட விவாதத்தில் ஈடுபட்டிருந்தார்கள். சரோஜினிக்கும் ரெஜினாமிஸ்க்கும் இதேதான் வேலை. இல்லையென்றால் நடிகைகளின் வித்தியாசங்கள். ஒரு நாள் புருவம், மறுநாள் மச்சம், இப்படிப் பேசிப் பேசி களைத்து பாடம் நடத்த வேண்டிய வகுப்பறையில் ஓய்வெடுப்பார்கள். ஆரம்பத்தில் இது எரிச்சலூட்டுவதாக இருந்தது. பிறகு மறத்துப் போனது. இப்போது புதியவளாகி இருக்கிறேன். அவர்களைப் பார்த்த எனக்கு அளவற்ற அருவருப்பு உண்டாகியிருந்தது.

திடீரென்று மாணவியர் பக்கம் பேச்சு சென்றது. ரெஜினா ஒவ்வொரு பெண்ணாக கேலி செய்துகொண்டிருந்தாள். அவளது கொண்டை குலுங்க அவ்வள் அதை செய்தாள். குதிரை மூஞ்சி, நரிவால், எலிவால் என்றெல்லாம் குழந்தைகளுக்கு பெயர் வைத்திருந்தாள். அவளது அருவருப்பான வேடிக்கைகளை சரோஜினி ரசித்துக்கொண்டிருந்தாள். மாராப்பு விலகி மாரு குலுங்க அவள் சிரிப்பது காண சகிக்கவில்லை. ''ரெஜி.. ரெஜிமா.. கொன்னுட்டடி...'' ஆராதனைகள் வேறு.

பள்ளிக கூடங்கள் பலிக்கூடங்கள் ஆகிவிட்டன.

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நானும் அவளது கூட்டத்தில் ஒருத்தியா? எல்லாம் முன் தயாரிக்கப்பட்டவை. ரெடிமேட் கேள்விகள், அவற்றிற்கு நோட்ஸ்களில் ரெடிமேட் பதில்கள். வகுப்பறையில் ஆசிரியர் கள் ஓய்வெடுக்கிறார்கள். வெறும் மனப்பாடம் செய்யும் இயந்திரமாய் (அதுவும் முக்கிய கேள்விகளுக்கான விடைகளை மட்டும்) மாணவர்கள் உருமாற்றம் அடைந்து விட்டனர். எல்லாம் பொட்டை பாடம்.

எல்லா மாணவர்களுக்கும் எண்கள் தரப்பட்டுள்ளன. வகுப்பு வரிசை எண், தேர்வு எண், அவை பெற்றெடுக்கும் மதிப்பெண் எண்கள். எங்கும் எண்கள். எண்களே பள்ளி களை ஆள்கின்றன. எல்லா ஆசிரியைகளுமே ஏதாவது ஒரு வகையில் மாணவரின் அறிவை அவமானப்படுத்துகிறார்கள் என்பதை கண்டேன். அவர்களில் ஒருத்தியா நான்? என் மீதே எனக்கு வெறுப்பு உண்டாயிற்று. ஒரு பெண் அறிவார்த்தமான ஒரே ஒரு கேள்வியால் என்னை எப்படி யோசிக்க வைத்து விட்டாள்?

''ஒரு கேஸ் இன்னிக்கு பிடிப்பட்டுது.. இதை கேட்டியோ...'' என்று அங்கலாய்த்தபடி என்னிடம் வந்தாள் சுகுணா மிஸ். மேல் நிலை கணக்கு நடத்துபவள். விடுதிக்காப்பாள யுவதிகளில் ஒருத்தி. எந்த உற்சாகமும் இன்றி ''என்ன'' என்றேன்.

''வினோதமான கேஸ்... லெவன்த் வீட்டுக் கணக்கு திருத்திக்கிட்டிருந்தப்போ கஷ்டப்பட்டு பிடிச்சேன்... பாதி பேர் நோட்ல ஒரேகை யெழுத்து! அதுவும் ஒரு லாஜிக்சம் முதல்ல காப்பினு நெனைச்சேன். அப்புறம் ஒருத்திய பிடிச்சி செமத்தியா குடுத்தேன். உண்மைய கொட்டிட்டா...''

கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தேன். அவள் என்னை காத்திருக்க வைத்தாள். நான் திடுக்கிட வேண்டுமென விரும்புபவள் போலிருந்தாள். ''ம்.. சொல்லு'' என்றேன்.

''நம்பமாட்ட... ஒரு டென்த் ஸ்டாண்டர்டு படிக்கிற பெண் லெவன்த்க்கு வீட்டுக்கணக்கு போட்டுத் தந்திருக்கு...''

''டென்த்தா...?'' எழுந்து நின்றிருந்தேன்.

''ஆமாம்.. கஷ்டப்பட்டு கண்டு பிடிச்சேன்... நேரா.. ஸிஸ்டருட்ட போயிட்டேன்''. எனக்கு ஊர்ஜிதமாகிவிட்டது போலானது. ''என்ன.. பண்ணினாங்க அந்தப்பெண்ண...?''

''அது ஒரு ஆயி அப்பன் இல்லாத கேஸ்''

''ஆர்பன்ஸ் ஹோமா?''

''சித்தி வீடோ என்னமோ.. கார்டியன வரச்சொல்லியிருக்காங்க.. மோஸ்ட்லி டி.சி. யாதான் இருக்கும்''.

நான் எப்படித் தவித்தேன் என்பதை என்னால் இங்கு எழுத முடியாது. பிரின்சிபால் அறைக் கும், ஒய்வறைக்கும் இருப்புக் கொள்ளாமல் நான் அலைந்தேன். பதினொன்றாம் வகுப்பு மாணவியர்க்கு ஒரு டென்த் மாணவி வீட்டுக் கணக்குச் சொல்லித் தருகிறாள் என்றால் அவள் என்ன நம்பமுடியாத பிறவி? இங்கு ஏன் வந்து பிறந்து தொலைந்தாள். அம்மா, அப்பா இல்லாதவளாமே... கடவுளே எங்கள் குழந்தை களை ஆசிரியர்களிடம் இருந்து காப்பாற்றும்.

அவளது வகுப்பிற்கு நான் போன நேரத்தில் அவளது இடம் காலியாக இருந்தது. விசாரித்தேன். ''செம்ம அடி மிஸ்'' என்று கலங்க அடித்தார்கள். ஏதோ ஆகிப் போயி ருந்தேன். எதுவும் நடத்தப் பிடிக்காதவளாய் இருக்கையில் அமரப்போனேன்.

''மே.... அய் கம்.... இன்... மிஸ்..'' ஆயிஷா நின்றிருந்தாள். கலைத்தெரியப்பட்ட கனவுபோல், வெள்ளைப்படுதாவுடன் இரண்டு இசுலாமிய பெண்கள் உடன் நின்றிருந்தனர். ஒருத்தி எனக்கு முகமன் செய்தாள்.

''நான் ஆயிஷா வோட சித்தி...''

''வாங்க...''

''எப்படி படுத்தறா பாத்தீங்களா.. இவ என்னோட அக்கா பொண்ணு. இவப் பொறந்த நேரமே சரியில்ல. இந்த சனியன் வேணும்னுயார் அழுதா.. தருதல மவ...''

என்கண் முன்னால் ஆயிஷாவை அடிக்க முயன்றாள்.

''கொஞ்சம் பாத்துக்கங்க.. புத்தி சொல்லுங்க, என் புருசன் கூட இங்க இல்ல.. துபாயில இருக்காரு.. தனியா அவஸ்தைபடறேன். இது இப்படி இருக்கு படிப்ப நிறுத்திடலாம்னா. சரி இவ்வளவு வருசம் படிச்சது படிச்சாச்சு ஒரு எசெல்சி முடிச்சிடட்டுமேனு பாக்கேன்...''

அன்று வகுப்பிலிருந்து கிளம்பும் போது தீர்மானித்துக் கொண்டேன்.


''ஆயிஷா .. ஈவினிங் ஹாஸ்டல்ல வந்து என்னப்பாரு...''

''மிஸ்... மிஸ்..''




3

ஆயிஷாவோடு நான் மிக நல்ல உறவு வைத்துக்கொண்டேன் என்பதை சொல்ல வேண்டியதில்லை. ஆரம்பத்தில் அவளது வருகை என் சக ஆசிரியைகளுக்கு எரிச்சலை கொடுத்தது உண்மைதான். ஆனால் நாட்



போக்கில் சரியாகிப் போனது. அவளிடம் இருந்து எக்கச்சக்கமான கேள்விகள் வந்து கொண்டேயிருந்தன. ஆயிஷாவுக்கு மட்டு மென்ன? கேள்விகளை யாரிடமாவது கொட்டித் தீர்க்கமாட்டோமா என்று ஏங்கிக் கிடந்தவள்தானே.. நான் கிடைத்ததும் ஒட்டிக்கொண்டு விட்டாள். தினமும் மாலை நான்கு மணியிலிருந்து இருட்டும் வரையில் விடுதியில் என் அறையில் இருக்கத் தொடங்கினாள்.

ஆயிஷா விடம் எனக்குப் பிடித்தமான இரண்டு அம்சங்கள் இருந்தன. ஒன்று அவளது வேகம். அது அசாதாரணமானது. பத்து பன்னிரண்டு பக்கங்கள் படுவேகமாய் படித்துவிடுவாள். இரண்டாவது கேள்வி கேட்கும் அவளது அறிவுப்பசி, புரியாததை புரியும்வரை விட மாட்டாள். நான் அவளோடு பழகிய குறுகிய காலத்திற்குள் இந்த புத்தகத்தில் நான் சேர்த்திருக்கும் இத்தனை கேள்விகளும் அவளை கேட்க வைத்தது அவளது அறிவுப்பசிதான்.

வெப்பவியல் நடத்தியபோது அவள் கேட்ட கேள்வி அற்புதமானது. ''மிஸ்.. மெழுகுவர்த்தி எரியுது. ஒரு கேஸ் அடுப்பும் எரியுது. இரண்டுமே நெருப்புத்தான். மெழுகு தீபத்தில் ஒளி அதிகமாயும் வெப்பம் கம்மியாவும் இருக்கு. ஆனா அடுப்புல ஒளி கம்மியாகவும் வெப்பம் அதிகமாயும் இருக்குதே.. ஏன் மிஸ்?'' (இந்த நூலில் 12ஆம் பக்கத்தில் இக்கேள்வி உள்ளது) நான் கேட்டுக்கொண்டேன். இந்த கேள்வி கேட்கும் மாபெரும் வித்தையை அவள் எங்கேயிருந்து கற்றாள்? அது அவளது உதிரத்தில் உள்ளதா? வகுப்பறை என்றல்ல, ஒரு நாள் நான் எனது ஆடைகளை துவைத்துக் கொண்டிருக்கும் போது கேட்டாள். ''துணி துவைக்கிற சோப் அழுக்கை அகற்றுவதற்கும் குளியல் சோப் அழுக்கை அகற்றுவதற்கும் இடையிலான வித்தியாசம் என்ன?'' கடவுளே... இந்தப்பெண்.. கேள்விகளால் இந்த பிரபஞ்சத்தை உலுக்கவே பிறந்திருக்கிறாள்.

ஒரு நாள் 'The Most Dangerous Man in America' என்கிற பெஞ்சமின் பிரான்கிளினின் வாழ்க்கை வரலாற்று புத்தகத்தை கொண்டு வந்தாள். அதிசயிக்கத்தக்க வகையில் என்னையும் ஒரு புத்தகப்புழுவாக மாற்றிக்கொண்டிருந்தாள். ''மின்னலில் மின்சாரம் உள்ளதை நிரூபித்த பிரான்களின் பட்டம் ஒரு பட்டு கைகுட்டையால் செய்யப்பட்டது மிஸ்'' என்றாள். எனக்கு அது வரை தெரியாது. ஒரு கேள்வியை எழுப்பிக்கொள்வது பிறகு அதற்கொரு விடை தெரியும் வரை ஓயாது தேடுதல் என்ற ஒரு தேர்ந்த விஞ்ஞானியின் தகுதி ஆயிஷாவிடம் இயல்பிலேயே இருந்தது.

''மிஸ்...நியூட்டன் அறிவியல் சோதனைகள் நடத்த ஆரம்பிச்சப்போ அவருக்கு வயது பன்னிரெண்டு. பிரான்கிளின் தன் முதல் சோதனையை 40 வயசுலதான் செய்திருக்காரு வயதா பிரச்சனை. ரெண்டுபேரும் விஞ்ஞானிகள் தான்...''

''........''

''மிஸ்.. இந்த புத்தகத்துல சில பக்கங்கள் நல்லா புரியுது சிலது புரிய மாட்டேங்குது''

''போகப்போகப் புரியும். அது அதுக்கு ஒரு வயசு வேண்டாமா..''

''என்ன மிஸ்.. நீங்க, எனக்கு இங்கிலிக்ஷ் தான் பிரச்சனை...''

''அதுவும் ஒரு பிரச்சனைதான்''

''ரொம்ப கஷ்டமாயிருக்கு மிஸ்.. நம்ம மொழிலேயே வரணும்...''

''யாரு எழுதறாங்க... சொல்லு

'நீங்க எழுதலாமே மிஸ்'

''இப்படி.. புத்தகங்களை திருடிட்டு வரியே.. மாட்டிக்கிட்டா...''

''நானே தான் படிசிட்டு எடுத்து எடத்திலேயே வெச்சிடரேனே..''

'தம்பும்மா...''

'சொல்லுங்க மிஸ்...''

'என்ன.. சொல்லணும்...?''

''நீங்க ஏன் தமிழில் இதையெல்லாம் எழுதக்கூடாது...?''

''பார்க்கலாம்.. அதுக்கெல்லாம் நிறைய விஷயம் தெரியணும்?''

''தெரிஞ்சவரைக்கும் எழுதலாமே''

பிறகு வழக்கமான வேகத்தோடு கேட்டாள். இந்தப் புத்தகத்தின் 32ஆம் பக்கத்தில் உள்ள அந்த கேள்வியை

''மிஸ்.. மின்னலிலிருந்து மண்ணை மின்சாரம் தாக்கும் இல்லயா, மரம் கூட விழுவதுண்டு... கம்பியிலுள்ள மின்சாரத்திற்கும் அதுக்கும் என்ன வித்தியாசம்? காற்றில் எப்படி மின்சாரம் பரவுது?''




4

என் ஆயிஷா அப்படிப்பட்டவளாக இருந்தாள். பழைய எனது ரெக்சின் பையில் அவளது சின்ன ஆய்வுக்கூட பொருட்கள் இருந்தன. ஒரு லென்சுக் கண்ணாடி.. வட்ட வடிவ காந்தம்... மருத்துவரின் ஊசி சிரிஞ்சு ஒன்று, மற்றும் ஒரு பழுதடைந்த டிரான்சிஸ்டர் வானொலி. அதனை சரிசெய்யும் முயற்சியிலேயே பல விடுமுறை நாட்கள் கழிந்தன.

நானோ நிறைய மாறிக்கொண்டிருந்தேன். எவ்வளவு மோசமானவளாக இருந்திருக் கிறேன்? எனது சொந்தத் துறை மீதே எவ்வித அக்கறையும் இல்லாமல் சொரணையற்ற பிண்டமாக ஆறு ஆண்டுகள் வெறுமனே தள்ளியிருக்கிறேன்.

ஆயிஷாவின் உறவில் தான் நான் உணர ஆரம்பித்தேன். எவ்வளவு விஞ்ஞானமற்ற முறையில் நாம் நம் குழந்தைகளுக்கு விஞ்ஞா னம் போதிக்கிறோம் என்று. நாம் எங்கே குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட விஷயத்தை உணர்ந்து கேள்வி கேட்க அவகாசம் தருகி றோம்? அவர்கள் கேட்கத் தொடங்கு முன்னரே நாமாக முன் தயாரிக்கப்பட்ட கேள்விகளால் அவர்களை மூழ்கடித்து விடுகிறோம். அறிவும் வளருவதில்லை பள்ளியில் ஆசிரியர்கள் அதிகம் சொல்வது எதை? ''கையகட்டு.. வாயை பொத்து.''

விரைவில் புரிந்து கொண்டேன் என் ஆயிஷாவுக்கு நாலுபுறமிருந்தும் பிரச்சனைகள் முளைத்தன. ஆனால் பயித்தியகாரி. நான் உணரத்தலைப்படவில்லை அவளை, அவளது அறிவை, அது எந்தத் திசையில் செலுத்தும் என்று. ஒரு நாள் சட்டென்று கண்ணில் பட்டது ஆயிஷாவின் பின்காலில் பட்டை பட்டையாக வீக்கம். துடித்துப்போகுமளவு அடிவாங்கியி ருக்கிறாள். இப்போது அவள் என்னிடம் மிகவும் நெருங்கியிருந்தாள். அவளைத் தொடாமல் உங்களால் பேசவே முடியாது. அவள் மீது அவ்வளவு அன்பூறும்படி அவள் செய்திருந் தாள். கிட்டத்தில் அழைத்து விசாரித்தேன்.

''கெமிஸ்ட்ரி மிஸ் அடிச்சாங்க'' என்றாள்.

''ஏன்..? ஏன் ஆயிஷா?''

''பேப்பர் வந்தது.. மார்க் சரியா போடல.. கேட்டேன்... சொந்த சரக்குக்கெல்லாம் மார்க்கு கிடையாதாம். நோட்ஸ்ல இருக்கிறத அப்டியே எழுதணுமாம் டென்த்னு மிரட்டுறாங்க.. மிஸ்.. நோட்ஸ்லயே தப்பாயிருந்தா என்ன பண்றது னுட்டு கேட்டேன்...'' பேசமுடியவில்லை அவளால். உதடு துடிக்க சப்தமின்றி குலுங்கிய அவளை காண சகிக்காது. அழும்போது அவள் குழந்தையாய் இருக்கிறாள்.

முன்பு ஒரு முறை சரோஜினியிடம் வாங்கிக்கொண்டு வந்தாள். இதே நோட்ஸ் பிரச்சனை..., கடவுளே.. அவரவர் அறிவை பயன்படுத்த அனுமதியுங்களேன். எப்பேர்ப் பட்ட பெண். அவளை அடிப்பது என்றால் எப்படி மனசு வருகிறதோ ராட்சசிகள்.

தவிர வேறுவித சிக்கல்கள். டியூசன், கிட்டத்தட்ட எல்லா ஆசிரியைகளுமே வீட்டில் தனியாக டியூசன் நடத்திவந்தனர். பணம். எல்லாம் அது படுத்தும் பாடு. போட்டாபோட்டி சண்டை. வீட்டிற்கு படிக்க வருவோர்க்காக விசேட சலுகை. சட்டங்கள் வகுப்பில், ராஜமரியாதை.. வினாத்தாட்களை முன்னர் அறியும் உரிமை. எவ்வளவு குமட்ட வைப்பது அது. வெட்கமில்லாமல் இதை அவர்கள் செய்தே வருகிறார்கள். வருமான வரியில் சேராத வருமானம். யார்தான் விடுவார்கள்?

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆயிஷா யாரிடமும் டியூசன் படிக்காதவள் என்பதால் ப்ழிவாங்கப்பட்டாள். வகுப்பிலும் கேள்விகள் கேட்டு குழப்பி விடுபவளாக இருக்கிறாள் அல்லவா. தொழிலை கடினமாக ஆக்குபவளை யார்தான் விரும்புவார்கள். விரைவில் எனது போராளி தினமும் உதை வாங்கிவரத் தொடங்கினாள்.

வரலாற்றுப் பாடவேளையில் கூட ஜெர்சி மிஸ் என்ன செய்தாள்?

''அசோகரை புத்தமதத்துக்கு மாற்றியது யார் மிஸ்...?''

''புத்த பிட்சு ஒருத்தர்?''

''இல்ல, அவர் பெயர்?''

''.......''

''அவரது பெயர் உபகுப்தர்... மிஸ்''

''தெரிஞ்சு வெச்சுகிட்டு டெஸ்ட் பண்றயா.. வாடி இங்க..''

o

"என் தாய்,
என் முதல் ஆசிரியை,
என் முதல் உயிர்,"
என்று
ரத்தத்தினால்
எழுதியிருந்தாள்.
ஆம்...
அது
ரத்தம் தான்.

o

ஒரு காலில் நிற்கவைத்து உதைத்திருக்கிறாள். இப்படி ஆயிஷா முன் எல்லா ஆசிரியைகளுமே தனது பிரம்புப் பிரயத்தனத்தால் அறிவை நிலை நாட்டிடத் தொடங்கிவிட்டார்கள். ''டீச்சருங்க அடிச்சா வலிக்காம இருக்க ஏதாவது மருந்து இருக்கா?'' என்று கேட்கிறாள் ஆயிஷா.

''அடி... அசட்டுப் பெண்ணே'' என்று கட்டிக்கொண்ட என்னால் அப்போது எந்த புதிரையும் உணரமுடியவில்லை. எவ்வளவு பெரிய முட்டாளாக இருந்து விட்டேன்.

ஆயிஷா



5

ஒரு இரவு அவள் அவசர அவசரமாக வீட்டுக்கு கிளம்பிய போது தனது சிறிய குறிப்பு நோட்டை விட்டுச் சென்று விட்டாள். அன்றைக்குத் தான் என் ஆயிஷாவின் இன்னொரு பக்கம் தெரிய வந்தது. நூற்றுக்கணக்கான கேள்விகளின் தேவையை விட இந்த என் ஆயிஷா வித்தியாசமானவள். முதலில் அந்த நோட்டு என் கண்களில் பட்டபோது அதை எடுத்து மேஜையில் வைத்து விட்டு வழக்கமான விடைதிருத்தும் வேலையில் இறங்கி விட்டேன். பிறகு ஏதோ ஒரு உந்துதலின் பேரில் அதை எடுத்து புரட்டினேன். முதல் பக்கம், இரண்டு, மூன்று, நாலாம் பக்கத்தில் எனக்கு முதல் அதிர்ச்சி. ஒரு பக்கம் முழுதும் ஆயிஷா நூற்றுக்கணக்கான முறை என் பெயரை எழுதிவைத்திருந்தாள். நீண்ட நேரம் அந்தப்பக்கத்தை நோக்கிய எனக்கு கண்ணீர் முட்டியது. பிறகு சில பக்கங்கள் வகுப்பில் எழுதப்பட்ட ஆங்கிலப்பாட்டு மூன்று முறை. பின் அந்தப்பக்கம் என்னை மேலும் அதிர்ச்சி யடையவைத்து கிட்டத்தட்ட மூர்ச்சையாகி விழவைத்தது அந்தப்பக்கம்.

என் பெயரை எழுதியிருந்த ஆயிஷா அதற்கு கீழே ''என் தாய்; என் முதல் ஆசிரியை;என் முதல் உயிர்'' என்று ரத்தத்தினால் எழுதியிருந்தாள். ஆம் அது ரத்தம் தான். அய்யோ... இது என்ன பெண்ணே உனக்கு என்ன நான் செய்து விட்டேன். உனது கேள்விகள் சிலவற்றை காது கொடுத்து கேட்டதைத் தவிர அதற்கேவா இத்தனை அன்பைப்பொழிகிறாய்? அம்மா நீ மாபெரும் மனுஷி, என்னுள்ளே யாரை தேடுகிறாய்? நீ பார்க்காமல் போன அப்பா, அம்மாவையா? அல்லது யாரையடி என் உயிரே. நீ இல்லாது போயிருந்தால் நான் மட்டும் யாரடி? ஒரு எந்திரத்தை விட கேவலமான ஆசிரியையாகவே செத்துப் போய்க்கிடந்த என்னை மீட்டெடுத்தவளல்லவா நீ, என் பொக்கிஷமே இத்தனை நாட்கள் எங்கேயடி இருந்தாய்? எனக்கு உடல் சிலிர்த்துப் போனது, நான் சொல்லிக் கொண்டேன். அவளுக்கு, என் உயிரான ஆயிஷாவுக்கு எப்படியாவது நன்றியாக எதையாவது செய்ய வேண்டும். உன்னை எப்படி ஆக்குகிறேன் பாரடி....? கடவுளே.. அப்போது தான் அந்த சம்பவம் நடந்தது.

ஆயிஷா



6

சம்பவத்திற்கு முதல் நாள் வகுப்பில் சர்ஹம்ப்ரி டேலியை பற்றி சுருக்கமாய் சிலவற்றை சொன்னேன். அறுவை சிகிச்சையின் போது உடலை மறத்து மறந்து போக வைக்கிற நைட்ரஸ் ஆக்சைடு வாயுவை அவர் கண்டுபிடித்தது குறித்து பாடம் நடத்தினேன்.

''நைட்ரஸ் ஆக்சைடு தண்ணீரில் கரையுமா.. மிஸ்''

''தண்ணில மட்டுமில்ல அது எத்தனாலிலும் சல்பியூரிக் அமிலத்திலும் கூட கரையும்.''

இப்படித்தான் நான் சோரம் போனது. எப்படி மறப்பது நான். அன்று பள்ளியில் குழந்தைகள் தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் வருவதாய் இருந்தது. மதியம் விழா இருந்தமையால் காலையில் பள்ளி விடுமுறை . விடுமுறை நாட்களில் வீட்டில் எவ்வளவுதான் வேலைகள் என்றாலும் பத்து பதினொரு மணிக்குள் என் ஆயிஷா ஓடோடி வந்துவிடுவாள். அன்றைக்கு என்று ஆளைக் காணவில்லை. எனது சொந்த வேலைகளில் மும்முரமாக இருந்தபோது உச்சிவெயிலில் ஒரு மாணவி வந்து அழைத்தாள். ஆயிஷா அனுப்பியதாகவும் வேதியியல் ஆய்வுக் கூடத்திற்கு பின்புறம் அவள் இருப்பதாகவும் கூறினாள்.

''ஏன் அவ இங்க வரவேண்டியது தானே''

'தெரியல மிஸ்''

அவளை அனுப்பிவிட்டு கிளம்பினேன். மனசுக்குள் ஏதோ எங்கோ பிசகிப் போனதை உணர்ந்தேன். கடவுளே... இதை எழுதும் தருணத்தில் எனக்கு எப்படி உடல் நடுங்குகிறது.

லேசான களைப்பில் இருப்பவளைப் போலிருந்தாள் ஆயிஷா.

''இன்னிக்கி.. எக்ஸ்பரிமண்ட் சக்சஸ் மிஸ்''

''என்ன என்ன எக்ஸ்பரிமண்ட்?''

''இந்தாங்க ஸ்கேல். என்னை அடியுங்க பாப்போம்.''

''ஏன்.. ஆயிஷா என்ன சொல்ற நீ...?''

''மருந்து மிஸ் .மறத்துப்போற மருந்து...''

இனிமே யாரு அடிச்சாலும் எனக்கு வலிக்காது மிஸ்... எப்படிவேணும்னாலும் அடிச்சிக் கட்டும்...''

''ஆயிஷா....''

''உனக்கென்ன பயித்தியமா?''

''லேபிலிருந்து நைட்ரஸ் எத்தனால் கரைசல் கெடச்சது மிஸ்.. முதல்ல இந்த தவளைக்குப் போட்டேன் ஊசி. இரண்டு மணிநேரம் மல்லாக்கப் போட்டாலும் உணர்ச்சி இல்ல... அப்போ மறத்துப் போச்சினு அர்த்தம்...''

''.......''

''அப்புறம் அதே மருந்தை எனக்கு ஊசி போட்டுகிட்டேன்.. எப்படி அய்..டியா...''

''ஏம்மா... இப்படியெல்லாம் பண்ற...''

''பாருங்க இந்த தவளைதான்''

நான் பார்த்த இடத்தில் இருந்த வாளித் தண்ணீரில் ஒரு தவளை தலை கீழாய் மிதந்தது.

''ஆயிஷா... நோ...''

''அய்யய்யோ.. தவளை செத்துப் போச்சு... மிஸ்''

கடவுளே அதற்கு மேல் எழுத என்ன இருக்கிறது? வேதியியல் ஆய்வுக் கூடத்தின் பின்னால் ஆயிஷா விழுந்து கிடந்தாள். ஒரு மலை மாதிரி விழுந்து கிடந்தாள். சின்ன கூட்டம் கூடியது. பியூன் கோவிந்தன் ஆட்டோ கொண்டு வர ஓடினான். சிஸ்டருக்கு சொல்லப்பட்டது. அவளை என் உயிருக்கு உயிரான ஆயிஷாவை சுமந்து கொண்டு நான் சாலைக்கு ஓடினேன். என் கண்ணான அவளை எப்படியாவது பிழைக்க வைத்துவிட வேண்டுமென தவித்தேன்.

ஆனால் ஆட்டோவில் ஆஸ்பத்திரிக்கு போவதற்குள் என் ஆயிஷா பிரிந்து விட்டாள். எப்பேர்ப்பட்ட ஆயிஷா. நான் தாங்கிக் கொள்ள முடியாதவளாய் குழந்தை மாதிரி அவள் மீது புரண்டு கதறி அழுதேன். இனி என்ன உங்களுக்கு திருப்திதானே மிருகங்களே.. என் ஆயிஷாவை ஒப்பற்ற அந்த அறிவுக் கொழுந்தை கொன்று தீர்த்து விட்டீர்கள். போங்கள்.. இனி உங்கள் வகுப்புகள் எளிமையானவை.. அறிவுக்கு அங்கு வேலை இல்லை.

ஆயிஷா என் கண்ணே.. என் கண்களை திறந்து விட்டு, ஏன் அவ்வளவு சீக்கிரம் என்னை விட்டு ஓடிப்போனாய், பார்.. உனக்காக நீ கேட்ட எல்லா கேள்விகளுக்கும் பதில்களை தேடித்தேடி எழுதி வைத்திருக்கிறேன். நீ சொன்னது போல தமிழில் எழுதியிருக்கிறேன்.

உன் மாதிரி எத்தனை ஆயிஷாக்களை நாங்கள் இழந்திருப்போம். நீ இறந்து போனாய். வயிசுக்கு வந்த நாளோடு பள்ளிக்கூடம் விட்டு ஓடியவர்கள்; எங்கேயோ ஒரு ஊரில் யாரோ ஒருவனுக்காக துவைத்து சமைத்து பிள்ளை பெற்றுப் போடுபவர்கள்; ஆணின் பாலியல் பசிக்காக தன்னை விற்பவர்கள்; முப்பது ரூபாய் சம்பளத்திற்காக வீடு பெருக்கி சாணி மெழுகுபவர்கள்; வயல் கூலிகள்; கட்டிடங்களுக்கு கல் உடைக்கும் பெண்கள் அவர்களில் எத்தனை ஆயிஷாக்கள் உள்ளனரோ. தன் விஞ்ஞானக்கனவுகளை நாள்தோறும் அடுப்பு நெருப்பில் போட்டு வேக வைத்துவிடும் அந்த நூற்றுக்கணக்கான ஆயிஷாக்களுக்கு இந்த புத்தகத்தை கண்ணீரோடு சமர்ப்பிக்கிறேன்.

இந்த விஞ்ஞான நூலை வாசிப்பவர்கள் அதை ஒரு பத்துப்பெண்களுக்காவது இரவல் கொடுப்பார்களா?

அவர்களில் ஒரு ஆயிஷாவாவது இருப்பாளா? என் பொக்கிஷமே ஆயிஷா.. நீ கேட்ட கேள்விகளிலேயே என்னை மிகவும் பாதித்த ஒரு கேள்வி உண்டு. அதை வாசகர் முன் வைத்து என் முன்னுரையை முடிப்பதே பொருத்தமாக இருக்கும்.

''மிஸ்.. கரோலின் ஏர்ஷல் போலவோ மேரிக்கியூரி போலவோ நம்ம நாட்டுல பெயர் சொல்ற மாதிரி ஒரு பெண் கூட விஞ்ஞானியா வரமுடியலையே ஏன்?''

இக்கேள்விக்குரிய பதிலை நான் சொல்ல வேண்டியதில்லை. தனது சொந்த வீடுகளின் இருண்ட சமையலறையில் போய் அவர்கள் அதை தேடட்டும்.

O

நன்றி : கணையாழி

## பாம்புச் செட்டை



அது,
ஆபத்து இல்லாத
எனது சாரையின் நீண்ட வெண்செட்டை -
-என்பதால்

எத்தனை நாளைக்கு விட்டுவைப்பேன்,
அறையின் கட்டில் மூலையில்
மடங்கி சுருண்டு கிடக்க
அதனை?

நேற்றிரவு,
வெளிச்சம் இல்லாத அறையின்
கட்டில் மூலையிலிருந்து
தும்புத்தடியால் இழுத்து
பின் கதவால் தள்ளி வீசினேன், வெளியே.

வெளியில்,
பக்கத்துக் கோயில் விளக்குகளின்
மங்கல் கீற்றுகள்தான்
வேப்பமரக் கிளைகளினூடு வெட்டுண்டு.

வெட்டுண்ட கீற்றுகளின் மங்கல் வெளிச்சத்தில்
ஒட்டித்தெரிந்தது செட்டை
ஒரு பழைய பெட்டியோடு.

உற்றுப்பார்த்துத் திகைத்தேன்.

தலைக்குரிய செட்டை சற்றுப் பெரியதாய்
கரியநிறமாய்,
Walkie Talkie ஆய், அதன் அளவில்
பின்,
பழுப் புளியின்
கறுத்தக் கொட்டைகளின் அடுக்காய்-

உதறல் எடுத்தது எனக்கு...
உள்ளே கருநாகம்!

ஓடினேன் இருளில் மதில் ஏறி -
கோயில் வெளியில் புதைத்திருந்த
துப்பாக்கியை எடுத்து வர

பின்னிப்பிணைந்தது எனது சாரை
புறங்கால்களைச் சுற்றி!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை திராவிடர் இயக்கம் பெ.முத்துலிங்கம் எழுதிய வரலாறு


எஸ்.வி.ராஜதுரை

இலங்கையிலிருந்து வெளிவரும் 'சரிநிகர்' ஏட்டின் டிசம்பர் 19, 1996 - ஜனவரி 8, 1997 இதழில் 'நேத்ரா' என்பவர் எழுதியிருந்த நூல் மதிப்புரையிலிருந்துதான் பெ.முத்துலிங்கத்தின் 'எழுதாத வரலாறு' பற்றி முதன் முதலாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. பேராதனைப் பல்கலைக் கழக பேராசிரியர் மல்லிகா ராஜரத்தினம் அவர்களின் உதவியால் அந்த நூலை படிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அந்நூலின் தலைப்பு சுட்டுக் காட்டுவது போல, இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரிடையே - குறிப்பாக மலையக தமிழ் மக்களிடையே குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களது அரசியல், சமூக, பண்பாட்டு, பொருளாதார மேம்பாட்டுக்காகவும் விடுதலைக்காகவும் போராடியதுடன் அவ்விடுதலை ஈழத்தமிழர்கட்கும் சிங்கள உழைக்கும் மக்களுக்கும் கிடைப்பதற்கான மனப்பூர்வமான முயற்சியில் ஈடுபட்டிருந்த ஒரு இயக்கத்தைக் குறித்து தமிழ்நாட்டில் அறிமுகமும் மரியாதையும் பெற்றுள்ள ஈழத்தமிழர்/ சிங்கள இடதுசாரிகள் ஒருவரேனும், ஒருவரியேனும் எழுதியதில்லை என்பதை நினைத்து ஆத்திரமுறச் செய்யும் வகையில் நவீன இலங்கையின் வரலாற்றின் முக்கிய அம்சங்களிலொன்றான இலங்கையின் திராவிடர் இயக்கம் பற்றிய செய்திகள் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அந்த நூலைப் படித்து முடித்த பின்னர், 'நேத்ரா' எழுதியுள்ள மதிப்புரை, முத்துலிங்கத்தின் உழைப்பிற்கு நியாயம் வழங்கியிருக்கிறது என்பதையும் உணர முடிந்தது.

அம்மதிப்புரை வெளிவந்த சமயத்தில் தான், வ. கீதாவும் நானும் எழுதியுள்ள 'பெரியார்: சுயமரியாதை சமதர்மம்' என்ற விரிவான நூலும் வெளியாகியிருந்தது. பெரியார் பற்றியும், அவரது இயக்கம் பற்றியும் இந்திய தேசியவாதிகள், இடதுசாரிகள், தனித்தமிழ்நாட்டுக் கோரிக்கையாளர்கள், தலித் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு சிலர் எனப்பல்வேறு தரப்பினர் பரப்பி வந்துள்ள முழுப்பொய்கள், அரை உண்மைகள், தப்பெண்ணங்கள் ஆகியவற்றுக்கு விடையிறுக்கும் நோக்கத்திலும் பெரியாரையும் அவரது இயக்கத்தையும் குறிப்பிட்ட அரசியல்- வரலாற்றுச் சூழலுடன் தொடர்புப்படுத்திப் பார்ப்பதிலும் எங்கள் நூல் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளது.

பெரியார் பற்றியும் அவரது இயக்கம் பற்றியும் எழுதுவதற்குத் தேவையான மூலாதாரங்களைத் திரட்டுவதில் நாங்கள் முகங்கொடுக்க வேண்டியிருந்த சிக்கல்களை எங்கள் நூலின் முன்னுரையில் விரிவாக விளக்கியுள்ளோம். எனவே, இலங்கையிலுள்ள எழுத்தாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் தமக்குத் தேவையான நூல்களையும் தரவுகளையும் திரட்டிக்கொள்ள முடியாமல் போனது எங்களுக்கு வியப்பைத் தரவில்லை. இருப்பினும் பெரியாரால் தொடங்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்தின் தாக்கத்தினால் உருவான இலங்கை திராவிடர் இயக்கம் பற்றி வரலாற்று நூலை எழுதியுள்ள பெ. முத்துலிங்கம் தமிழ் நாட்டில் இன்றும் கூட மிக எளிதாக கிடைக்கின்ற பெரியாரின் படைப்புகள், பெரியார் பற்றிய நூல்கள் (பல்வேறு பதிப்புகளைக் கண்டுள்ள) சாமி சிதம்பரனார் எழுதிய 'தமிழர் தலைவர் - பெரியார் ஈ.வே.ரா வாழ்க்கை வரலாறு' போன்றவற்றைத் திரட்டிக் கொள்ளவோ, சென்னையிலுள்ள பெரியார் திடல் நூலகத்திற்கு ஒரு முறை வருகை புரியவோ செய்திருந்தால் சில விவரப் பிழைகளை எளிதாகத் தவிர்த்திருக்கலாம். 'எழுதாத வரலாறு' நூலிலும் கூட எழுதப்படாத பக்கங்கள் சிலவற்றை எழுதியிருக்கலாம்.

எடுத்துக்காட்டாக, பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறியதற்குக் காரணம், வ.வே.சு.அய்யர் நடத்தி வந்த குருகுலம் பற்றி காஞ்சிபுரத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் அவர் கொண்டுவந்த தீர்மானம் நிராகரிக்கப்பட்டதுதான் என்று பி.ராமமூர்த்தியின் நூலிலிருந்து மேற்கோள் காட்டுகிறார் முத்துலிங்கம் (ப.4). உண்மையில் 25.11.1925இல் காஞ்சிபுரத்தில் நடந்த தமிழ் மாகாணக் காங்கிரஸ் மாநாட்டில் பெரியார் கொண்டு வந்த வகுப்புரிமைத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாலேயே அவர் இனி காங்கிரசை ஒழிப்பதே என் வேலை என்று மாநாட்டை விட்டு வெளியேறிய பெரியார் பல மாதங்களுக்குப் பிறகே காங்கிரசிலிருந்தும், காந்தியத்திலிருந்தும் வெளியேறினார். ''பாம்பையும் பார்ப்பனனையும் ஒன்றாகக் கண்டால் முதலில் பார்ப்பனனை அடித்துக்கொல்'' என்ற சுலோகத்தையும் பெரியார் முன்வைத்தார் என்று முத்துலிங்கம் எழுதுவதும்




கூட பி.ராமமூர்த்தியின் நூலை ஆதாரமாகக் கொண்டுதான்! பெரியாரின் எதிர்ப்பாளர்கள் திட்டமிட்டு பரப்பிவருகின்ற பொய்களில் அதுவும் ஒன்று. இந்தப் பொய்யை அறிந்தோ அறியாமலோ உண்மையென்று ஏற்றுக்கொள்பவர்கள், இலங்கை மார்க்சியச் சிந்தனையாளர்களிடையேயும் உள்ளனர். அது வட இந்திய பழமொழி என்பதையும், இந்தியா முழுவதிலும் பார்ப்பனர்களால் அழுத்தி வைக்கப்பட்டிருந்தவர்களின் இயல்பான எதிர்வினைகளில் அதுவும் ஒன்று என்பதையும், மட்டுமல்லாது வன்முறையை அறவே வெறுத்தொதுக்கிய பெரியார் ஒரு காலத்தில் அத்தகைய கூற்றைச் சொன்னதில்லை என்பதையும் நாம் வலியுறுத்த வேண்டியுள்ளது. 'ஒரு வரலாற்று நூலை எழுதாமல் இருப்பது எப்படி?' என்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ள பி.ராமமூர்த்தியின் 'திராவிட மாயையா? ஆரிய மாயையா?- பயங்கரமான பொய்களையும், அபத்தங்களையும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி பல ஆண்டுகளுக்கு முன் அம்பலப்படுத்தியுள்ளார். (விடுதலைப்போரும்திராவிட இயக்கமும் - உண்மை என்ன?, திராவிடக்கழக வெளியீடு சென்னை (1985)) பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் நெகிழ்ச்சித்தன்மை இல்லாததாலேயே ப. ஜீவானந்தம் போன்றோர் வெளியேறினர் என்கிறார் முத்துலிங்கம். (ப.5) உண்மையில் தமிழக, இந்திய இலங்கைச் சூழ்நிலைமைகளை சாதியம், பார்ப்பனியம், ஆணாதிக்கம், தேசிய இன அடையாளங்கள், மொழியடையாளங்கள், மதவாதம் போன்றவற்றை - கருத்தில் கொள்ளாத ஒரு யாந்திரிகமான மார்க்சியம்தான் நெகிழ்ச்சித்தன்மையற்றதாக இருந்திருக்கிறது. இந்த உண்மையைத்தான் 'பெரியார்: சுயமரியாதை சமதர்மம்' என்ற எங்கள் நூல்மட்டுமின்றி பெ.முத்துலிங்கத்தின் 'எழுதாத வரலாறு'ம் சுட்டிக்காட்டியிருக்கிறது!

இலங்கையில் சுயமரியாதை இயக்கம் 1932ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதாக முத்துலிங்கம் கூறுகிறார். (ப.10) ஆனால் 1931 ஜனவரியில் அது தொடங்கப்பட்டதாக பி.எஸ்.எம். கொம்பையா என்பவர் 'குடி அரசு'க்கு எழுதிய கடிதத்திலிருந்து தெரியவருகிறது (கு.அ, 16.10 .43). கொம்பையா 'திருநெல்வேலி ஜில்லா ஆதி திராவிட லீக் (இலங்கைக் கிளை' என்ற அமைப்பாளர்) பொறுப்பாளராக இருந்தவர். கொழும்பு கொள்ளுப்பிட்டி 338ஆம் இலக்கக் கட்டிடத்தில் 'குடி அரசு ஸ்டோர்' என்ற சுயமரியாதை புத்தக, பத்திரிகை விற்பனை நிலையத்தை நடத்தி வந்தவர். எஸ்.வி. சிங்காரம் என்பவர் தலைமையில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் பெரியாரின் சேவையைப்பாராட்டி கொம்பையா பேசியதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது. இலங்கையிலும் பாம்பையிலும் இருந்த ஆதி திராவிடர்கள் தனித்தனி அமைப்புகளாக இருந்து போட்டி பொறாமையுடன் செயல்படுவதை விடுத்து ஒன்றுபட்டுச் செய்ல்பட வேண்டும் என்ற வேண்டுகோளும் விடுத்திருக்கிறார் (கு.அ 20.11.43, ப.6.44). இந்தியாவிற்கு அவசரமாகத் திரும்பி வரநேர்ந்த காரணத்தால் திருநெல்வேலி ஜில்லா ஆதி திராவிட லீக் (இலங்கை)இன் கௌரவக் காரியதரிசி, 'தமிழ் இசைக் கழகத்தின்' துணைப்பொருளாளர், பெரியார் ஈ.வே.ரா பிரசார கழகத் துணைக்குழுத்தலைவர், நிர்வாக உறுப்பினர், 'பந்தமடை வாலிபர் ஆதி திராவிட வாலிபர் லீக்'கின் பொருளாளர் ஆகிய பதவிகளிலிருந்து விலகுவதாகவும் 'குடி அரசு ஸ்டோருக்கு' என்.ஏ. செல்லையா என்பவரை மேலாளராக நியமித்திருப்பதாகவும் அவர் விடுத்த அறிக்கை 'குடி அர'சில் வெளியாகியுள்ளது. (கு.அ. 4.3.44) கொழும்பு நகரில் பல்வேறு நபர்களால் 'குடி அரசு' விற்பனையாகி வந்த நிலைமாறி இலங்கை முழுவதற்குமாக ர.கே.தேவதாசன் அண்ட் கம்பனி (90 செயிண்ட் மைக்கேல்ஸ் ரோடு, கொள்ளுபிட்டி) மொத்த விற்பனையாளராக நிமிக்கப்பட்டது.

பெ. முத்துலிங்கம் சுட்டிக்காட்டுவதுபோல, பெரியாரின் சுயமரியாதை இயக்கம் இலங்கையில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களையே தனது முதன்மையான சமூக அடித்தளமாகக் கொண்டிருந்தது. எனினும் அவர்கள் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களாகவே இருந்திருக்கின்றனர். அவர்களிற் பெரும்பாலானோர் தமிழகத்தின் தென்மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். தங்களது மாவட்ட, தாலுக்கா, ஊர் அடையாளங்களைப் பேணியவர்கள் என்பதை அவர்களது அமைப்புகளின் பெயர்களிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. அதேபோல, தமிழ்நாட்டிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களிடையே இருந்த அமைப்பு ரீதியான வேறுபாடுகளின் நீட்சியை இலங்கை சுயமரியாதை இயக்க ஆதரவாளர்களாக இருந்த தாழ்த்தப்பட்ட மக்களிடையேயும் காணலாம். கொம்பையாவின் 'ஆதி திராவிட லீக்' இயங்கிய அதே சமயம், 'திருநெல்வேலி ஜில்லா ஆதி திராவிட மகாஜன சங்கம் (இலங்கைக் கிளை) என்ற அமைப்பு ஏ.பி.ஈனமுத்து தலைமையில் இயங்கி வந்தது. முத்துலிங்கத்தின் நூலில் குறிப்பிடப்படும் கே.எம். அருமை நாயகம் இந்த அமைப்பில் இருந்திருக்கிறார். (கு.அ.16.10.43, 30.10.43, 27.11.43, 1.5.44) 'மராந்தை ஆதி திராவிட வாலிபர் ஐக்கிய சங்கம், காரைக்கிணறு ஆதி திராவிட அபிவிருத்திச் சங்கம், திருப்பணி கடுசங்குளம் ஆதிதிராவிட மகாஜன சங்கம், காமர் நாய்க்கர்பட்டி ஆதி திராவிட மகாஜன சங்கம், இராமானுஜம் புதூர் புதுவீட்டு மாணிக்க வாசகர் ஐக்கிய சங்கம், நான்குநேரி தாலுக்கா ஆதி திராவிட மகாஜன சங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆதி திராவிட மகாஜன சங்கம், கொழும்பு தமிழ் நாடு அருந்ததியர் சமூக ஊழியர் சங்கம், அழகநேரி விராங்குளம், இந்து - கிறிஸ்தவ சங்கம் எனப் பல்வேறு சங்கங்கள் இருந்தன. (கு.அ.16.10.43, 30.10.43, 27.11.43, 11.12.43, 11.3.44, 1.4.44, 5.4.44, 13.5.44, 20.5.44, 3.6.44, 27.5.44, 10.6.44, 24.6.44, 22.7.44, 26.8.44)

சுயமரியாதை இயக்க ஆதரவாளர்களாக இருந்த தனித்தனி அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும் என்று கொம்பையா விடுத்த அறிக்கை முக்கியத்துவம் பெறுவது இதனால்தான். இலங்கைத் திராவிடர் கழகத்தை தோற்றுவித்தவர்களிலொருவர் என முத்துலிங்கம் குறிப்பிடும் எஸ்.கே. மாயக்கிருஷ்ணன் 'இராமநாதபுரம் மாவட்ட ஆதி திராவிட இளைஞர் கழகம்', 'இலங்கை பெரியார் ஈவேரா பிரச்சாரக் கழகம்' ஆகியவற்றின் தலைவராக இருந்திருக்கிறார். அம்பேத்கர் பிறந்த நாள் விழாக்கூட்ட மொன்றுக்கு அவர் ஏற்பாடு செய்த செய்தியும் கிடைக்கிறது. (கு.அ. 12.2.44, 1.4.44, 15.4.44) சுயமரியாதை இயக்க ஆதரவாளர்களில் 'தீபம்' டி.எஸ்.பீட்டர் என்ற பெயரும் காணப்படுகிறது. 'தீபம்' என்ற பத்திரிகையை அவர் நடத்தி வந்திருக்கிறார். நின்று போய்விட்ட அந்தப் பத்திரிகையைப் புதுப்பிக்க வேண்டுமென 'திராவிட இளைஞர் கழகம்' என்ற அமைப்பு விடுத்த வேண்டுகோள் குடி அரசு 30.4.44 இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை சுயமரியாதை இயக்கத்தினரின் செயற்பாடுகள், அவர்களது குடும்ப நிகழ்வுகள் (பிறப்பு, இறப்பு, திருமணம்) 'குடி அரசு', 'திராவிடநாடு' ஆகியவற்றுக்கு அவர்கள் அனுப்பிய நன்கொடைகள் பற்றிய செய்திகள் 1943, 1944ஆம் ஆண்டு 'குடி அரசு' இதழ்கள் கிட்டத்தட்ட எல்லாவற்றிலுமே காணப்படுகின்றன. (அதற்கு முந்திய, பிந்திய இதழ்களில் உள்ள செய்திகளை என்னால் திரட்ட முடியவில்லை - எஸ்.வி.ஆர்.)

மேற்கொண்ட 'குடி அரசு' இதழ்களில் வெளிவந்துள்ள செய்திகளில் குறிப்பிடப்படுவோர் கீழ்வருமாறு: ஜே.வி. முத்தையா, ஜே.எம். அந்தோனிமுத்து, எஸ். எம் சிதம்பரநாதன், எஸ்.வி. சிங்காரம், என்.ஏ. செல்லையா, எம்.ஏ.பி. ஆறுமுகம், எஸ்.எம்.டி. சுப்பையா, எஸ்.வி. மன்னன், என். எஸ். கே. டேவிட், எஸ்.ஈ. நல்லையா, பா.ப. முத்தையா, எஸ்.எம். ராஜேந்திரம், எம். ஜெகநாதன், வி.எஸ். சுப்பையா, ஏ.எஸ். ஏசுதாசன், கே.கே.சண்முகம், எஸ்.எம்.டி. சாமி, ஆர்.கே. ராமசாமி, என்.ஏ. செல்லையா, கு.க. பிச்சையா, போ.பே. குருமன், ஆ.மா.சாமி, நெ.க.காளிமுத்து, பெ.க. காத்தமுத்து, மு.சு.பெருமாள், தி.பா.மாணிக்கம், பொ.மா.மு. கோமால், ஆ.அய்யாசாமி, எம்.எஸ். பழனிநாதன், பி.எஸ். சுப்பையா, மா.ச. கோவிந்தசாமி, எஸ்.கே.பாலகிருஷ்ணன், என். ஏ. பழனிநாதன், எம்.ஏ.பெரியசாமி, தி.செ.அருணாச்சலம், கே.செல்லமுத்து, என்.என். அய்யப்பன், என்.என். ஆழ்வார், தே.க. லட்சுமணன், ஒ.ஆ. மாடசாமி, தேவதாசன், து.மூ. வேலாயுதன், நே.க. காளிமுத்து, பே.கி.காளிமுத்து, த.பட்டமுத்து கொழும்பு திருநெல்வேலி ஜில்லா அயன் அழகேரி. திராவிட வாலிபர் அபிவிருத்தி கழகத்தின் சார்பில் கொள்ளுப்பிட்டியில் 'இலங்கை இந்தி எதிர்ப்புத் தோழன்' என அழைக்கப்பட்ட ஏ.டி. சுப்பையா தலைமையில் நடந்த சிறப்புப் பொதுக்கூட்டத்தில் 28.4.44 அன்று கொழும்பிற்கு 2 முறை வரவிருந்த சி.ராகோபாலச் சாமிக்கு (ராஜாஜி) எதிர்ப்புத் தெரிவிக்கக் கறுப்புக்கொடி போராட்டம் நடத்துவது என்று க.கொ.சுதந்திர ராம் என்பார் கொண்டுவந்த தீர்மானத்திற்கேற்ப கொழும்புநகர சபை மண்டபத்திற்கு வந்த ராஜாஜிக்கு 300 பேர் கறுப்புக் கொடி காட்டியதாக ஒரு செய்தி 'குடி அரசி'ல் வெளியாகியுள்ளது. (6.5.44) சுந்தரராஜ் தமிழ் நாட்டிற்குப் பயணம் மேற்கொண்ட செய்தியொன்றையும் காணலாம். (கு.அ. 30.4.44)

தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சென்ற, சுயமரியாதை இயக்க ஆதரவாளர்களாக இருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் பல்வேறு அமைப்புகளாக பிரிந்து கிடக்காமல் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என கொம்பையா விடுத்த அறிக்கையின்

→19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# ஷியாம் பெனிகலின் இரு படங்கள்

இந்த ஆண்டு ஜனவரி மாதம், திருவனந்தபுரத்தில் இடம்பெற்ற அனைத்துலகத் திரைப்பட விழாவிலே, ஷியாம் பெனிகலின் இரண்டு படங்கள் காண்பிக்கப் பட்டன. அவையாவன:

The Making of Mahatma என்ற ஆங்கிலப் படம். சர்தாரி பேகம் என்ற உருது மொழிப்படம்.

ஷியாம் பெனிகல் இந்தியாவின் முக்கிய/ முன்னணித் திரைப்பட நெறியாளர்களில் ஒருவர். உலகத் திரையரங்கிலும் இவர் பெயர் அடிபடுகிறது. தமது 12 ஆவது வயது முதல், ஒளிப்படக் கருவியைப் பயன்படுத்தி ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டு வருபவர். ஹைதராபாத்திலுள்ள ஒஸ்மானியப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத் துறையில் முதுமாணிப்பட்டம் பெற்ற பின்னர், மும்பாய் சென்று விளம்பரத் துறையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

பின்னர் 1967ல் புனையா மெய் விளக்கப் படங்களை எடுப்பதில் ஆர்வம் காட்டினார்.



ஷியாம் பெனிகல்

(புனையா மெய் விளக்கத் திரைப் படம். - இடையிடைப்பட்ட விளக்கவுரைகளுடன் மெய்நிகழ்ச்சிகளை மட்டும் கலப்பின்றிக் காட்டும் இயக்கப் படம். இதனையே ஆங்கிலத்தில் Documentary Film என்கிறார்கள்.)

ஷியாம் பெனிகல் முதலில் தந்த புனையா மெய் விளக்கத் திரைப் படம் பெரிய வரவேற்பைப் பெற்றது. அதன் பெயர், Children of the Street (வீதிகளின் குழந்தைகள்) சத்யஜித் ராய் தொடர்பாக ஷியாம் பெனிகல் நெறிப்படுத்திய ''மெய் விளக்கத் திரைப்பட''மும் உயர்ந்த ஒரு ஆக்கமாகக் கருதப்படுகிறது. ஷியாம் பெனிகலின் முதலாவது முழு நீளக் கதைத்திரைப்படம் ''அங்கூர்''. இந்தியாவில் கலை மெருகு கொண்ட படங்கள் 70களில் வரத்தொடங்கிய கால கட்டத்தில், இந்தப்படம் 1974ல் வெளிவந்தது. பல குறும் படங்களையும், தொலை நாடகத் தொடர்களையும் தந்துள்ள இந்த 60வயது நெறியாளர், இதுவரை 18 திரைப்படங்களை, வெவ்வேறு மொழிகளில் தந்திருக்கிறார்.

1976ல் இவருக்கு பதம ஸ்ரீ பட்டமும் 1991ல் பத்மபூஷன் பட்டமும் வழங்கப்பட்டதிலிருந்து இவருடைய பங்களிப்புகளின் முக்கியத்துவம் உணரப்படும்.

இனி இவருடைய புதிய இரு படங்கள் பற்றிய தகவற் குறிப்புகளைப் பார்ப்போம்.

தென்னாபிரிக்காவில் வாழும் பேராசிரியர் பாத்திமா மீர் எழுதிய The Apprenticeship of Mahatma என்ற நாவலைத் தழுவி ஆங்கில மொழியில் எடுக்கப்பட்ட படம் ''மகாத்மாவின் உருவாக்கம்'' என்ற ஆங்கிலப் படம்.

பரிஸ்டரான மோஹன்தாஸ் கரம் சந்த் காந்தி 1893 ஆண்டு தென்னாபிரிக்காவுக்குச் செல்கிறார். அங்கு குடியேறிய ஒரு இந்திய பணக்காரரின் வழக்கு ஒன்றைத் தீர்த்துவைப்பதற்காகவே அவர் அங்கு செல்கிறார். இவருடைய ஆங்கில அறிவும், உச்சரிப்பும், தென்னாபிரிக்க வெள்ளையரை ஆச்சரியத்தில் ஆழ்த்தினாலும், இனவெறி கொண்ட இவர்கள், இளம் காந்தியைத் தாக்கி இம்சைப் படுத்துகிறார்கள்.

இந்த நேரடியனுபவம் காந்தியின் வாழ்க்கைப்போக்கில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வருகிறது. ஒரு சில மாதங்களிலேயே இந்தியா திரும்பவிருந்த காந்தி, 21 வருடங்கள் தென்னாபிரிக்காவில் வாழ வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இனரீதியான ஒதுக்கல் (Apartheid) இனப்பாகுபாடு/ புறக்கணிப்பு போன்றவற்றினால், கிளர்ச்சி பெறும் காந்தி, வன்செயலை, வன்செயல் அல்லாத சத்தியாகிரகம் மூலம் முறியடிக்க முற்படுகிறார் சத்தியத்தை நாடி அவர் செல்வதனால், இவர் குடும்பத்தினர் பாதிக்கப்படுகின்றனர்.

தாமாகவே முன்வந்து உதவும் மருத்துவ உதவியாளராக தென்னாபிரிக்கா இந்தியத்தொழிலாள மக்களின் உரிமைகளை வென்றெடுக்கப்போராடுபவராக, நிறத்தவர்களுக்கெதிராகச் செயற்படும் அனுமதிமுறை, சுமத்தப்படும் வரிகள் போன்றவற்றிற்கு அடிபணியாது காந்தி போராடுகிறார்.

இந்தச்சம்பவங்களை வைத்தே இந்த ஆங்கிலப்படம் எடுக்கப்பட்டுள்ளது. 19ஆம் நூற்றாண்டு இறுதிக கட்டத்தில் தென்னாபிரிக்காவில் நிலவிய இன வேறுபாடுகளைத் தத்ரூபமாக நெறியாளர் படம் பிடித்துக்காட்டுகிறார். அஷோக் மெஹ்தாவின் படப்பிடிப்பு குறிப்பிடும்படியாக இருக்கிறது. ராஜித் கப்பூர் இளைஞர் காந்தியாக நடிக்கிறார். பல்லவி ஜோஷி கஸ்தூரிபாயாக வருகிறார். மற்றும் சில வெள்ளையரும் இந்தியரும் தாக்கம் ஏற்படுத்தும் விதத்தில் நடித்திருக்கின்றனர்.

காந்திக்கும் இவர் மனைவி கஸ்தூரிக்கும் இடையே இருந்து வந்த உறவுகள், இவர்களின் இரு குழந்தைகளுடன் வளர்ந்த விதம் மாத்திரமல்லாமல், காந்தியின் குறைபாடுகள் சிலவும் இப்படத்தில் தீட்டப்படுவதனால், படத்தின் நம்புந்தன்மை அதிகரிக்கிறது.

ரஸ்கின், டோல்ஸ்டோய், வில்லியம் மொரிஸ் போன்றோரின் எழுத்துக்களினால் கவரப்பட்டவர் மோகன்தாஸ் காந்தி. சமூக நீதி, பாகுபடுத்தப்படல் கண்டு சீறி எழுதல் போன்ற குணாதிசயங்களைத் தன்னகத்தே வளரவிட இந்த எழுத்தாளர்கள் இவருக்குப் பெரிதும் உதவினர்.

Nine Hours to Rama, Ghandi ஆகிய வேறு இரு ஆங்கில படங்களும் காந்தியை வெவ்வேறு கோணங்களில் சித்திரித்தன. The Making of Mahatma இன்னொரு பார்வையின் சித்திரிப்பு. வண்ணத்திலமைந்த இந்தப்படம் இரண்டரை மணித்தியாலம் ஓடுகிறது.

✱

ஷியாம் பெனிகலின் உருது மொழிப் படம் பார்க்கும் முன்னர், இவருடைய ஏனைய படங்களில் விருது பெற்றவை பற்றிய தகவலையும் இங்கு பதிவு செய்வோம். அவையாவன. அங்கூர் (1974), சரண்தாஸ் சோர் (1975), நிஷாந்த் (1975), மன்தன் (1976), பூமிக்கா (1977), கொண்டுரா(1977), அனுக்ரஹம் (1977), ஜுனூன் (1978), மந்தி (1983), நேரு (1984), சத்யஜித் ராய் (1984), சுராஜ் கா சத்வன் கோடா (1993), மம்மோ (1994).

✱

''மம்மோ'' என்ற படத்தில் ஹிந்தி, உருது, ஆங்கிலம் ஆகிய மொழிகள் பயன்படுத்தப்பட்டன.

சர்தாரிபேகம் என்ற உருது மொழிப் படம் சுமார் இரண்டுமணிநேரம் ஓடுகிறது.

வண்ணத்திலமைந்த இந்தப் படத்தின் கதையை எழுதியிருப்பவர் காளிட் மொஹம்மட். இவர் Film Fare என்ற ஆங்கிலத்திரையேட்டின் ஆசிரியராவார். காந்தியாக நடித்த ராஜித் கப்பூர், அம்ரிஷ் பூரி மற்றும் பல வட இந்திய நடிக நடிகையர் இப்படத்தில் பங்கெடுக்கின்றனர்.

படத்தில் பின்னோக்கு உத்தி (Flashback) பயன்படுத்தப்படுகிறது. ஓர் இளம் பெண் தலைசிறந்த பாடகியாக வளர்ச்சிபெறுவதையும், அவளின் அந்தரங்க வாழ்க்கையுடன் தொடர்புள்ள அம்சங்களையும் படம் சித்திரிக்கிறது.

வட இந்திய சாஸ்திரிய இசையில் ''தும்ரி'' பாணி என்பது ஒரு வகை. அதில் சிறப்புற்றுப் பிரகாசித்தவர் சர்தாரி பேகம் என்ற இந்தப்பெண். சர்தாரி பேகத்தின் மகள் பெயர் சகீனா. மகளின் சங்கீதப் பயிற்சியில் அதிக அக்கறையை, முதுமையடைந்து வரும் சர்தாரி பேகம் காட்டி வந்தார். ஒரு நாள், இந்து - முஸ்லிம் கலவரம் ஏற்பட்டபொழுது, கல்லினால் தாக்கப்பட்டு சர்தாரி பேகம் இறந்து விடுகிறார். மரணச்சடங்குகளில் கலந்து கொள்ள இவரின் சகோதரர் ஜப்பார் அப்பாஸி, சகோதரியின் வீட்டிற்கு வந்திருக்கிறார். இதுவரை காலமும் அவர் அங்கு செல்லவில்லை. ஏனெனில், சர்தாரி பேகமின் நடத்தை குடும்பத்திற்கு இழுக்கு என்பதனாற்றான்.

அக்காலத்தில் ஆணாதிக்கச் சமூகம் பெண்கள் மீது பாராபட்சமாக நடந்து கொண்டது. ஆடுதல், பாடுதல் பெண்களுக்கு அழகில்லை என்று சர்தாரியின் தந்தை அனுமதி வழங்காத போதும், சர்தாரி தனது இளம் வயதிலேயே சங்கீதம் கற்றுக் கொண்டார். அத்துடன் ஹேம்ராஜ் என்ற நிலச்சுவாந்தர் ஒருவரின் சட்டரீதியற்ற துணைவியாகவும் இருந்துள்ளார்.

ஜப்பார் அப்பாஸியின் மகள் பெயர் தெஹ்ஸீப் அப்பாஸி. இவள் ஒரு பத்திரிகையாளர். இவளுக்குத் திருமணமான பத்திரிகை ஆசிரியர் மீது காதல். பத்திரிகாசிரியன் ஒரு கிறிஸ்தவன். இவளோ ஒரு முஸ்லிம். சர்தாரி பேகம் தனது தந்தையாரின் சகோதரி என்று அறிந்திராத தெஹ்ஸீப், மைய வீட்டில் தனது தந்தையைக் கண்டு அதிர்ச்சியுறுகிறாள்.


துருவத்தேடும் பத்திரிகை எழுத்தில் (Investigative Journalism) நாட்டமுடைய தெஹ்ஸீப், தனது மாமியாருக்குப் பக்கவாத்தியம் வாசித்து வந்த ஒருவருடன் சேர்ந்து கொண்டு, சர்தாரி பேகம் முன்னர் வசித்து வந்த ஆக்ராவுக்குச் செல்கிறாள். அங்கு சர்தாரியின் கணவன் சாதிக் மூஸ்வியையும், தனது மாமியாரின் சட்டரீதியற்ற காதற்கணவன் ஹேம்ராஜின் கைம் பெண்ணையும் சந்திக்கிறாள். ஹேம்ராஜிக்கும் சர்தாரிக்கும் பிறந்த குழந்தையான சகீனாவைத் தன் மகளாக, சர்தாரியின் சட்டரீதியான கணவன் ஏற்று இருந்ததையும், பின்னர் அக்குழந்தையைப் புறக்கணித்ததையும் அறிந்து கொள்கிறாள். சகீனா தனது தாய் கொடூர நெஞ்ச முடையவள் என்று வாதிடுகிறாள்.

பின்னர், எல்லோரும் சர்தாரி பற்றிய தமது கருத்துக்களை மாற்றிக் கொள்கிறார்கள்.

இந்து - முஸ்லிம் திருமணத்தை சர்தாரி ஏற்பாடு செய்ததனால்தான் அவர் மீது கல்லெறியப்பட்டு, அவர் உயிரிழக்க நேர்ந்தது என்று ஒரு மௌலவி குறிப்பிடுகிறார்.

இதற்கிடையில், பெண் பத்திரிகையாளர் மணமான தனது பத்திரிகை ஆசிரியர் மீதான காதலைத் துறந்து, பத்திரிகையில் இருந்து விலகி, வேறொரு பத்திரிகையில் சேர்ந்து சர்தாரி பற்றிய கட்டுரையை எழுதுகிறார். இதுதான் படக் கதை. சுவாரஸ்யமான படம்.

கே.எஸ்.சிவகுமாரன்



**காலக்கீறல்கள்**

*கனகசபை தேவகடாட்சம்*
*வெளியீடு:-*
*செ. பிரபாகரன்*
*உதவிச்செயலாளர்,*
*பிரதம செயலாளர் பணிமனை,*
*திருகோணமலை.*

கையடக்கமான சிறிய நூல். எண்பது பக்கங்கள். இருபத்தைந்து சிறு (குறுங்) கதைகளைக் கொண்டு வெளிவந்துள்ளது. கனகசபை தேவகடாட்சத்தின் காலக்கீறல்கள்.

இத்தொகுதியில் அடங்கியுள்ள சிறு (குறுங்) கதைகள் இன்றைய எம் வாழ்வியலின் துயரங்களை வெளிக்காட்டுகின்றன. மனிதத்தின் மீதுள்ள ஆர்வத்தையும், பற்றையும் உணரக் கூடியதாகவுள்ளது.

இருப்பினும் கதாசிரியர் தன்னுடைய திறனை, ஆர்வத்தை, பற்றை, நீண்ட தொலைவுக்கு நகர்த்த வேண்டும். விசாலமாக்க வேண்டும்.

இனிவரும் காலங்களில் இன்றைய போர்க்காலச் சூழல் பற்றியும் மனித உணர்வுகள் பற்றியும் ஒழுங்கமைக்கப்பட்ட சிறுகதைகளை தருவாரென எதிர்பார்ப்போமாக.

அட்டைப்படம் ''காலக்கீறல்கள்'' பற்றிய இழப்புகளையும் துயரம், தனிமை என்றதான இன்றின் முகங்கள் நெஞ்சில் மெல்லென கனக்கிறது.

ஆனாலும் ''பார்வையற்றோர் கல்வி மேம்பாட்டு நிதிக்காக'' ஓர் தன்னலமற்ற நன்னோக்கிற்காக வெளியிடப்படும் இந்நூல் பற்றிய மகிழ்வில் நாமும் இணைந்து கொள்கிறோம்.

*பி. ரவிவர்மன்*




**'நான் ஒரு பெண்**

*பெண்கள் தொடர்பான சரிநிகர் கட்டுரைகள்*
*வெளியீடு:*
*பாரதி வெளியீட்டகம்*
*விலை ரூ. 100/=*

சரிநிகர் வெளிவரத் தொடங்கியதிலிருந்து 1996ம் ஆண்டு வரையான அதன் இதழ்களிலுள்ள பெண்கள் தொடர்பான கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூலில் வெளிவந்துள்ளது.

இருபத்தியொரு பல்வேறு தலைப்புக்களில் பெண்களின் பல்வேறு பிரச்சினைகள் இந்நூலில் அலசப்படுகின்றன.

பதிப்புரையில் சொல்லப்படுவது போல் 'இது வரன்முறையான ஆய்வு நிலைப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக இல்லாதிருப்பினும், தமிழில் பெண்ணியம் தொடர்பான விழிப்புணர்வையும், சிந்தனைத் தேடல்களையும், தெளிவுகளையும், தர முற்படுகிறது என்பதில் ஐயமில்லை''. எனினும், வரன்முறையான ஆய்வுகளுடன் பெண்ணிய விழிப்புணர்வுக்கான நூல்கள் தமிழில் குறிப்பிடத்தக்களவு வந்துள்ளமையும் எம் கவனத்திற்குரியது.

சத்யா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## காலத்துக்கு ஏற்ற கட்டுரை!

சரிநிகர் இதழ் 123இல் ''இவையெல்லாம் வெறும் அறிகுறிகளே'' என்ற தலைப்பின் கீழ் வந்த கட்டுரையை எழுதிய அரன் அவர்களுக்கு நன்றி. உண்மையிலேயே ''பறையனாலங்குளம் என்ற பெயரை சிங்களப் பெயராக (சப்புமல்புர) மாற்றும் போது இவ்விடயமாக தமிழ்க் கட்சிகளின் எதிர்ப்பு வரும் என்ற நினைப்போடு விட்டுவிடாமல், அவ்வெதிர்ப்பானது பலமாக இருக்கப் போவதில்லை, தமிழ் கட்சிகளின் எதிர்ப்பு சமாளிக்கக்கூடியதாகவே இருக்கும் என்ற எண்ணத்தில் இக்காரியத்தில் இறங்கியவர்களின் கணிப்பு எதுவும் தவறாகப் போகவில்லை. இப்பெயர் மாற்றத்தைக் கேள்விப்பட்ட தமிழ் கட்சிகள் அறிக்கை விடுவதில் முந்தினார்களே தவிர, அப்பெயரை (சப்புமல்புர) மீண்டும் தமிழ்ப் பெயராக (பறையனாலங்குளம்) மாற்றாவிட்டால் இதற்கான மாற்று நடவடிக்கையாக தாங்கள் எதைத் தான் செய்யப்போகின்றோம் என்று சொல்லவில்லை. செய்யவுமில்லை. தம் பதவியை விட்டு விலகிவிடுவார்கள் என்று நாம் எண்ணவுமில்லை. அது எப்படி விலகுவார்கள்? அற்ப நாட்காலி ஆசை, மாதச் சம்பளம்.. இவ்வாறு தொடரும் அற்ப சலுகைகளுக்கு அடிமைப்பட்ட இவர்களை என்னவென்று அழைப்பது?

மற்றும் இவ்வாறான பெயர் மாற்ற விடயம் தங்களுக்கு தெரியாமல் நடந்ததாக கூறும் அரசியல்வாதிகள் சொல்வதைக் கேட்டால் கேலிக்கூத்தாக இருக்கின்றது. தங்களுக்குத் தெரியாமல் இவை நடக்குமாயின் இவர்கள் என்ன தேங்காய் துருவிக்கொண்டா இருக்கின்றார்கள்?

அடுத்ததாக ''யுத்தங்களினால் ஏற்படும் நிலச் சீரழிவுகள் என்ற கட்டுரை இந்தக் காலத்துக்கு மிகவும் பொருத்தமானதாகவும், அத்தியவசியமானதாகவும் இருந்தது. இவைகளை தடுக்காவிட்டால் எதிர்கால சந்ததியினருக்கு பாரிய பிரச்சினை ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றே. அதுவும் நம் நாட்டை எடுத்துக் கொண்டால், யுத்தத்தால் மட்டுமா மரங்கள் பாதிக்கப்படுகின்றன. ஏன் இயற்கை மரங்களை வெட்டிச் சம்பாதிக்கும் சில அரசியல்வாதிகளுக்கு இவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு போலத்தான் இருக்கும் என்பத ஐயமில்லை.

*மு. கருணாகரன்*
*எட்டியாந்தோட்டை*

## மோசடி உண்மை ஆனால் எனக்குத் தொடர்பில்லை

தங்களது பத்திரிகை இதழ் 123ன் 2ம் பக்கத்தில் இடம்பெற்றுள்ள ''தரமுயர்த்தப்பட்ட செலகத்தின் தரங்கெட்ட சேவை'' எனும் தலைப்பில் கணக்காளரான என்னைப்பற்றி வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானாதாகும். இச்செய்தியால் எனது பதவிக்கும், சுய கௌரவத்திற்கும் இழுக்கு ஏற்பட்டுள்ளது இதன் உண்மை நிலை வருமாறு.

1. ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் 31.07.1996 வரை கணக்காளராகக் கடமையாற்றியிருந்தேன். 01.06.1996ல் இருந்து மட்டக்களப்பு பொது வைத்திய சாலைக்கு மாற்றம் பெற்றுச் சென்றுள்ளேன். 10,000/= ரூபா மோசடி ஒன்று ஒகஸ்ட் மாதம் கணக்காய்வு அத்தியட்சகரால் கண்டுபிடிக்கப் பட்டதாகச் செய்தியில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. உண்மையில் 19.09.1996ல் கணக்காய்வின் போது மேற்படி மோசடி கண்டுபிடிக்கப்பட்டது. இதில் சம்பந்தப்பட்டவருக்கெதிரான உரிய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனக்கும் இந்த மோசடிக்கும் எதுவித தொடர்புமில்லை. நான் எனது சுயவிருப்பிலேயே விண்ணப்பித்து இவ்விடமாற்றத்தினைப் பெற்றுக் கொண்டேன். (விண்ணப்பம் இணைக்கப்பட்டுள்ளது) ஒழுக்காற்று நடவடிக்கையின் பிரகாரம் மாற்றம் செய்யப்பட்டதாகக் கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானதாகும். கணக்காய்வு உத்தியோகத்தகர்கள் மோசடியினைக் கண்டுபிடிக்க முன்னரே எனக்கு இடமாற்றம் கிடைத்ததிலிருந்து இதனை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

2. பிரதேச செயலக விழா சம்பந்தமாக நிதியுதவியாளர் முற்பண மெடுத்துச் செலவு செய்திருந்தார். பெற்ற முற்பணங்கள் யாவும் பற்றுச்சீட்டுடன் மீளளிக்கப் பட்டிருக்கின்றது. இதில் மோசடி நடந்ததாகக் கணக்காய்வு அத்தியட்சகராலும் சுட்டிக்காட்டப் படவில்லை. இக்காலத்தில் நான் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பயிற்சியெடுத்துக் கொண்டிருந்தேன் என்பது குறிப்பிடத்தக்கது.

3. புனர்வாழ் கொடுப்பனவு தொடர்பில் 1993ம் ஆண்டிலிருந்து கிராம சேவையாளர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற பட்டியல்கள் நிர்வாக பகுதியினால் செவ்வை பார்க்கப் பட்டு பிரதேச செயலாளரால் அனுமதிக்கப்பட்டு கணக்கிளைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. இப்பட்டியலில் உள்ள பெயர்களுக்கே காசோலை எழுதப்பட்டு நிர்வாக கிளை, கணக்குக் கிளை, எழுதுவினைஞர்கள், கிராம சேவையாளர் ஆகியோரின் முன்னிலையில் என்னால் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. கொடுப்பனவு இடம்பெற்ற பின்னர் கிராம சேவையாளர் உரியவருக்கே கொப்பனவு இடம்பெற்றுள்ளதனை உறுதிப் படுத்தி கையொப்பமிடுவார். கிராமத்திலில்லாதவர்களின் பெயர் எழுதப்பட்டதென்பது உண்மைக்குப்புறம்பானதாகும். இதனை கொடுபபனவு பட்டில்களிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.

இந்த மோசடியில் யார் தொடர்புடையவர் என்பது இங்குள்ள திணைக்களங்களில் கடமையாற்றும் அநேகமான அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்கு தெரிந்து விடயமாகும். இதனை கணக்காய்வு திணைக்களத்திடமிருந்தும் அறிந்து கொள்ளலாம். இவ்வாறான பொய்யான செய்தினைத் தங்களுக்கு வழங்குவது தங்களது பத்திரிகையின் தரத்தினைக் குறைக்க எடுக்கின்ற முயற்சியாகவே நான் கருதுகின்றனே.

*சி. குலதீபன்*
*மட்டக்களப்பு*

5ம் பிரேமதாசா...

மாக நடைபெறும். எனினும் நாம் தைரியமாகவே உள்ளோம். அரசின் அடக்குமுறை மேலும் எம்மை நோக்கி திரும்பும் என்பது எமக்கு தெரியும். இன்னும் சிலரை கைது செய்யவிருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. எம்மை பயமுறுத்தவே அரசாங்கம் முயற்சிக்கிறது'' என்றார்.

எவ்வாறாயினும், பிரேமதாச அவர்களின் ஜனன தினவிழா ஐ.தே.க தலைவர், பிரேமதாச குடும்பத்தினர் ஆகியோரின் பங்களிப்பு இல்லாமல் இடம்பெற்றிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## புதிதாக உருவாகும் 'புரங்கள்'

ஹபரணையிலிருந்து திருகோணமலை வரையிலுள்ள பிரதான வீதியின் இருமருங்குகளிலும் பல பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரண்களுக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களின் பெயர்ப் பலகைகளில் புதிய புதிய ஊர்ப் பெயர்களைக் காணக் கூடியதாகவுள்ளது.

நாம் கேள்விப்பட்ட வகையில் குறிப்பிட்ட பிரதேசத்தின் ஊர்களுக்கு, அல்லது கிராமங்களுக்கு பெயர் சூ[illegible]வது அந்தந்த உள்ளூராட்சி சபைகளே, அதுவும் மக்களின் விருப்பத்தின் பேரிலே அனுமதி பெறப்பட்டு விதிமுறைகளுக்கேற்ப பெயர் சூட்டுவதே வழமை.

ஆனால் தற்பொழுது மேற்படி வீதிகளில் அமைந்துள்ள பாதுகாப்பு முகாமைச் சார்ந்தவர்கள் தங்களுக்கேற்றவிதத்தில் பல ''புரங்களை'' அமைத்துள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் இவ்விதம் பெரும்பான்மை சமூகத்தினருக்கு ஏற்ற வகையில் பல புரங்களை பாதுகாப்பு பிரிவினர் அமைத்து அதற்கு பெயர் சூட்டுவது இங்குள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு தெரியாத விடயமுமல்ல. என்னவாக இருந்தாலும் விதிமுறை பிழையென்பதைக்கூட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விதம் புரிபவர்களுக்கு சுட்டிக் காட்டாமல் இருப்பது கவலைதரும் விடயமாகும்.

*துட்டகைமுனு*
*திருகோணமலை*

## இலங்கைத் திராவிடர் இயக்கம்....

முக்கியத்துவத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. சேலத்தில் 1944 பெப்ரவரியில் நடைபெற்ற நீதிக் கட்சி மகாநாட்டில் தான் அக்கட்சி திராவிடர் கழகமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அம் மாநாட்டினைத் தழுவி, இலங்கைச் சுயமரியாதைச் சங்கத்தினரும் தமக்குள் சில மாற்றங்களைச் செய்வதற்காக நடத்திய ஆலோசனைக் கூட்டமொன்றை வரவேற்று கொழும்பு சுயமரியாதைச் சங்க நிறுவனர்களில் ஒருவரான டி.எம்.ஏ.ஹமீது அவர்கள் விடுத்த அறிக்கை 'குடி அரசு' 12-2-44 இதழில் வெளியாகியுள்ளது. 'திருநெல்வேலி ஜில்லா திருப்பணி கருசங்குளம் ஆதி திராவிட கல்வி அபிவிருத்திச் சங்கம் ' என்ற அமைப்பின் தலைவராக இருந்த கான் செல்லையாவின் (கு.அ. 27-11-43) தலைமையில் 14-7-44 அன்று திராவிட நாடு பிரிவினை ஆதரவுடன் பொதுக் கூட்டம் கொழும்பில் நடத்தப்பட்டது. (கு.அ. 12-8-44)

பெரியார் ஐரோப்பிய பயணத்தை முடித்து விட்டு இலங்கைக்கு வந்த போது 'கொழும்பு ஆதி திராவிட அபிவிருத்திச் சங்கத்தின்' சார்பில் அவருக்கு வரவேற்புரை வாசித்தவர் **எஸ்.ஆர்.** முத்தையா (கு.அ. 6-11-32). அவரது தலைமையில் திருநெல்வேலி ஜில்லா ஆதி திராவிட சங்கத்தின் சார்பில் 3-3-44 அன்று நடந்த 'நமது நாள்' கொண்டாட்ட பொதுக்கூட்டத்தில் ஏ.பி.ஈனமுத்து, டீ.டீ.மூர்த்தி, எஸ்.கே.கனகராஜா, கே. நல்லமுத்து, எஸ். எம். சிதம்பரநாதன், எஸ்.ஈ. நல்லையா ஆகியோர் கலந்து கொண்டனர் (கு.அ. 15-4-44)

பெரியார் கொழும்பு, கண்டி, நாவலப்பிட்டி, ஹட்டன், யாழ்ப்பாணம், பருத்தித்துறை முதலிய இடங்களில் சொற்பொழிவாற்றியதாக 'தந்தை பெரியார் அவர்களின் பேருரை' என்ற வெளியீட்டிலிருந்து அறிந்து கொள்கிறோம்.

''கொழும்பு அய்பிக்ஸ் பார்னா என்ற எஸ்டேட்டில் உள்ள 200 கூலிகள் தோழர் க. முத்தையா தலைமையில், சென்ற 30-4-44ந் திகதி ஒரு சங்கத்தை நிறுவியுள்ளார்கள். செயலாளர் ராமசாமியும் மற்ற நிர்வாகிகளும் தெரிந்தெடுக்கப்பட்டனர்'' என்ற செய்தியிலிருந்து (கு.அ,3.6.44) இலங்கை சுயமரியாதை இயக்கத்தினர் (திராவிட இயக்கத்தினர்) தொழிற் சங்க அமைப்புப் பணிகளையும் தொடங்கினர் எனத் தெரிய வருகின்றது. கொழும்பில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வரும் ''கள்ளிப் பட்டு பகுத்தறிவு கழக '' ஸ்தாபகருமான பி.எஸ். தமாரு என்பவரின் மரணச் செய்தியை குடி அரசு வெளியிட்டுள்ளது. (கு.அ.- 8.7.44)

தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சென்றவர்களிடம் மட்டுமன்றி ஈழத் தமிழர் பகுதிகளுக்குள்ளும் சுயமரியாதை இயக்கம் பரவி வருவதற்கான ஓரிரு சான்றுகள் கிடைக்கின்றன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜி. எம். பொன்னுத்துரை, பெரியாருடன் தொடர்பு கொண்டிருந்ததாக, அவர் தமிழகம் வந்து பெரியாரைச் சந்தித்துப் பேசி விட்டுச் சென்ற செய்தி தெரிவிக்கிறது (கு.அ. 3.6.44). 'புலோலித் தமிழ் இளைஞர் கழகம்' பற்றிய செய்தி கூறுவதாவது: ''13.8.44ல் மேற்படி கழகம் ஒன்று நிறுவப்பட்டது. தமிழ் வளர்ச்சி, தமிழர் முற்போக்கு, மூடப்பழக்கம் ஒழிப்பு, திராவிடர்களைத் தட்டியெழுப்புதல் என்பன இச்சங்கத்தின் நோக்கம். வழக்கறிஞர் தோழர் சே. தருமகுலசிங்கம் அவர்கள் தலைமையில் புலோலி எம்.எம். பள்ளியில் நடைபெற்ற மேற்படி கழகக் கூட்டத்தில் தோழர்கள் ஜி.எம். ஆழ்வார்ப் பிள்ளை, பண்டிதர் க. வீரகத்திப் பிள்ளை, பண்டிதர் த. கிருஷ்ணன் முதலியவர்கள் பல பொருள் பற்றிப் பேசினார்கள். பின் நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். (கு.அ. 26.8.44)

4 **உரும்..**

## இலங்கையில் தமிழர் உயர்....

பெறும் போது 1800-2000 தமிழ் மாணவர்கள் அனுமதிபெறும் நிலை தற்போது இல்லையென்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். யாழ். மாவட்டத்தில் ஏற்படும் கல்வித் தராதர வீழ்ச்சி, நாடளாவிய ரீதியில் தமிழர்களின் உயர்கல்வி வாய்ப்புகளையும் உரிமைகளையும் பாதிக்கும் என்பதை மனங்கொள்ளல் வேண்டும்.

பல்கலைக்கழக அனுமதி பெறும் தமிழ் மாணவர்களில் பெரும்பாலனவர்கள் வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் பயில வேண்டியுள்ளது. இதனை மறுப்பதற்கில்லையெனினும் தென்னிலங்கையில் ஒப்பீட்டளவில் பெருவளர்ச்சி பெற்றுள்ள வளங்களைப் பயன்படுத்தும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லாது போகின்றது. இவ்வளங்களற்ற வட கிழக்குப் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் மத்தியிலிருந்து, உயர் தேர்ச்சியுடை கற்றறிவாளர் குழாமொன்று உருவாவதில் சிரமங்கள் உண்டு. பல பாதிப்புகளுக்குள்ளான யாழ். பல்கலைக்கழகத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய நிலையொன்றுண்டு. போர் நிலைமைகளால் ஆசிரியர்களும், மாணவர்களும் சிதறிவாழுகின்ற நிலையே இன்று ஏற்பட்டுள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலான தமிழ் மொழி வழிக் கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக் கல்வி கூடிய ஸ்திரத்தன்மையைக் கொண்டு விளங்குவதைக் குறிப்பிட வேண்டும்.

ஒட்டுமொததமாக நோக்குமிடத்து தமிழர்களின் உயர்கல்வி நிலைமைகள் எதிர்மறைப் போக்குகளையே காட்டுகின்றன. அவர்களுடைய உயர்கல்வியின் எதிர்காலம் உற்சாகம் தருவாதாயில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a news paper in Srilanka

# முல்லைத்தீவு: மரணப்பொறி வாழ்க்கையில் மக்கள்

முல்லைத்தீவு மாவட்டம் யுத்த நெருக்கடிகளுக்குள் பல்வேறுபட்ட துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

தொடர்ச்சியான மக்கள் இடம்பெயர்வு, உணவுவைத்தியசாலை மருந்துகள் பற்றாக்குறை, போக்குவரத்து நெருக்கடிகள் என்பன காரணமாக முல்லைத்தீவு மாவட்ட மக்கள் தொடர்ச்சியான துன்பங்களை எதிர்கொண்டிருக்கிறார்கள்.

கௌரவ யுத்தமாக உருமாற்றம் பெற்றுள்ள ஜயசிகுறு இராணுவ நடவடிக்கை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் மையப்பகுதியான மாங்குளம், ஒட்டிசுட்டான், கணராயன்குளம் ஆகிய பகுதிகள் மக்களின்றி வெறிச்சோடியுள்ளன.

புளியங்குளத்திலிருந்து மாங்குளம் வரையிலான யாழ் வீதிப்பகுதியும் ஒட்டிசுட்டான் நகரப்பகுதியும் தொடர்ச்சியான இராணுவத்தாக்குதல் காரணமாக -ஷெல் வீச்சுக்கள், விமானக்குண்டுத்தாக்குதல்களினால்- அதிர்ந்துகொண்டிருக்கின்றன. யுத்த தாண்டவத்தின் கோரச்சுவடுகளே அழிவுகளின் எச்சங்களாக அங்கு எஞ்சியுள்ளன.

ஜயசிகுறு இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்துள்ள பதின்மூவாயிரம் குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, துணுக்காய், பாண்டியன்குளம், வவுனிக்குளம் ஆகிய பகுதிகளின் தஞ்சம் அடைந்துள்ளார்கள்.

இவர்களில் சுமார் 5100 குடும்பங்களுக்கு மட்டுமே மூன்று தினங்களுக்கான சமைத்த உணவும் தொடர்ந்து இரண்டு வாரகாலப்பகுதிக்கான நிவாரண உலர் உணவுகளும் வழங்கப்பட்டன. இவர்களுக்கான நிவாரண உலர் உணவு தொடர்ந்து வழங்கப்படுவதற்குரிய அனுமதி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திடமிருந்து கிடைப்பதில் நிச்சயமற்ற நிலையே காணப்படுகிறது. எஞ்சிய 7900 குடும்பங்களுக்கு முதற்கட்ட நிவாரண உதவி கூட இன்னமும் கிட்டவில்லை. அதற்குரிய அனுமதி இன்னமும் அரசாங்கத்திடமிருந்து தமக்கு கிடைக்கவில்லையென நிவாரண உதவி கேட்டு செல்கின்ற பொதுமக்களிடம் அதிகாரிகள் கைவிரிக்கும் நிலையே நிலவுகிறது.

இதைவிட இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைக் கட்டடங்களில் நிரம்பி வழிவதனால் மாணவர்களின் கல்வி மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் இடம் பெயர்ந்தவர்கள் தங்கியிருந்தாலும் கூட மாணவர்கள் கல்வியைத் தொடரவேண்டுமென்று பிடிவாதமாகக் கல்வி அதிகாரிகளாலும் பாடசாலை அதிபர்களினாலும் மர நிலழ்களில் வகுப்புகளும் பாடசாலைகளும் நடத்தப்படுகின்றன.

வெய்யில் காரணமாக அசைந்து செல்கின்ற மர நிழல்களுக்கேற்ப மாணவர்களின் வகுப்புகளும் அரக்கி அரக்கி நகர்ந்து திறந்தவெளிக் கல்வி நடைபெறுகிறது.

பாடசாலைக் கட்டடங்களைவிட ஏற்கெனவே அகதிமுகாம்களாக விளங்கிய கட்டடங்கள் கொட்டில்கள் என்பவற்றின் கூரைக் கிடுகுகளும் மரங்களும் உக்கிப்போயுள்ளன. சுழன்று வீசும் சோளகக் காற்று காரணமாக அழிந்த கிடுகுகள் துகள்களாக மாறி அகதி மக்களின் மீதும் அவர்கள் படுக்கும் பாய்கள் பாத்திரங்கள் பொருட்கள் மீதும் அபிஷேகமாக கொட்டிக்கொண்டிருக்கின்றன. இந்த நிலைமை எவ்வளவு காலத்துக்கு நீடிக்கப்போகின்றது என்று தெரியாமல் இடம்பெயர்ந்த மக்கள் அங்கலாய்த்த வண்ணமுள்ளனர்.

இக்கூரைகளைச் சீரமைப்பதற்கு பல்லாயிரக்கணக்கில் தேவைப்படுகின்ற கிடுகுகளையும் மரந்தடிகளையும் அரசு எவ்வளவு பொறுப்போடும் அக்கறையோடும் அனுப்பி வைக்கப் போகிறது என்பது எவருக்குமே தெரியாது.

ஜயசிகுறு இராணுவ நடவடிக்கை காரணமாக முழுமையான ஒரு யுத்தகலமாக வன்னிப்பகுதி மாறிக் கொண்டிருக்கும் அதேவேளை வன்னிப்பகுதிக்கும் வவுனியாவுக்கு மிடையேயான வாகனப்போக்குவரத்து காதைச் சுற்றி மூக்கை தொடுகிற கதையாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையானது மக்களுக்கு அவசியமான அவசர உதவிகளை வழங்குவதில் மேலும் இழுத்தடிப்புக்களையும் தாமதங்களையும் ஏற்படுத்தவே உதவுமென்பதில் எள்ளவும் சந்தேகமில்லை.

புதிதாக இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டு துன்பமுற்றுள்ள மக்கள் ஒருபுறமிருக்க ஏற்கெனவே இடம் பெயர்ந்து அகதிகளாகியுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரண உலர் உணவு உதவிகளையும் அரசு கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அரைவாசியாக குறைத்துள்ளது. இதன் காரணமாக வெறுங்கையோடு சென்று இடம்பெயர்ந்து வேதனைப்பட்டுக்கொண்டிருக்கும் மக்கள் முகத்தில் எவ்வாறு விழிப்பது என்ற இக்கட்டான நிலைக்கு கிளிநொச்சி-முல்லைத்தீவு அரசாங்க அதிபர்கள் ஆளாகியுள்ளனர்.

புதுக்குடியிருப்பு,முல்லைத்தீவு பகுதிகளில் இருந்து மேற்கு நோக்கி பயணம்செய்யவேண்டிய பொதுமக்கள், ஒட்டிசுட்டான் மாங்குளம் ஆகிய பகுதிகளை கடந்து செல்லும் போது இராணுவத்தால் ஏவப்படுகின்ற ஷெல்கள் விமானக் குண்டுத் தாக்குதல்களில் சிக்காமல் செல்ல வேண்டிய ஓர் மரணப்பொறி பிரயாணத்தையே மேற்கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன் யாழ்குடா நாட்டுக்கு திரும்பிச் செல்பவர்களுக்கு உயிலங்குளம் இராணுவச் சோதனைச் சாவடியூடாகச் செல்வதில் இராணுவம் மேற்கொள்கின்ற எண்ணிக்கைக் குறைப்பானது ஆயிரக்கணக்கான பொதுமக்களை பெரும் ஏமாற்றத்தோடு அடம்பன் பகுதியில் காத்திருக்கச் செய்வதோடு மடுவுக்கும் உயிலங்குளத்துக்கும் அலைந்து துன்பப்பட வேண்டிய அவல நிலைக்கும் ஆளாக்கியுள்ளது.

மாங்குளம் ஒட்டுசுட்டான் பகுதிகளில் நிலவுகின்ற பிரயாண மரணப்பொறி நிலையானது முல்லைத்தீவு, மாவட்டத்தின் கிழக்குப்பகுதிகளில் இடம்பெயர்ந்து தஞ்சமடைந்துள்ள மக்களையும் பாதித்துள்ளது. இம்மக்களுக்கு அத்தியாவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படுகிற உணவு சாராத நிவாரண உதவிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மட்டுமே வழங்கி வருகிறது. ஏனைய சர்வதேச தொண்டர் நிறுவன தலைமைக் காரியாலயங்கள் வன்னிப் பகுதியில் நிலைகொண்டுள்ள தமது பிரதிநிதிகளை பாதுகாப்பு காரணங்களுக்காக மாங்குளம் ஒட்டுசுட்டான் பகுதிகளைக்கடந்து பிரயாணம் செய்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு பணித்துள்ளது.

உள்நாட்டு யுத்தப்போக்குகள் காரணமாக சீரழிந்து செல்லும் வன்னிப்பகுதி மக்களின் வாழ்க்கை நிலைமைகளை நேர்மையான ஒரு யுத்த நிறுத்தமும் மனப்பூர்வமான பேச்சுவார்த்தையின் மூலமே சீர் செய்ய முடியும்.

# 'சண்டே ரைம்ஸ்' தீர்ப்பு: தொடர்பு சாதனங்களுக்கு எச்சரிக்கை!

ஜனாதிபதி மீதான அவதூறு வழக்கில் அரசாங்கத்தால் குற்றஞ்சாட்டப்பட்ட "சண்டே டைம்ஸ்" ஆசிரியர் சிங்க ரத்ணதுங்கவுக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்படுமென எதிர்பார்க்கப்பட்ட இத்தீர்ப்பு முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. குற்றவாளியாகக் காணப்பட்ட சிங்க ரத்ணதுங்கவுக்கு ஏழு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒன்றரை வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதுடன். பத்தாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்டதனால் சட்டத்தரணியான சிங்க ரணதுங்க அவர்கள் இனிமேல் சட்டத்தரணியாக செயற்படும் உரிமை இழந்தவராகிறார். இத்தீர்ப்பானது தொடர்பு சாதனத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக அமைவதுடன் எதிர்காலத்தில் பின்பற்றப்படும் ஒன்றாகவும் இருப்பதால் இது மிகப்பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என கருதப்படுகிறது.

மானநஷ்ட அவதூறுச் சட்டத்தின் கீழும் பத்திரிகைக் கவுன்சில் சடட்த்தின் கீழுமே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சுதந்திர ஊடக இயக்கத்தினர் எதிர்காலத்தில் "தொடர்பூடகவியலாளர்கள் மீது குற்றவியல் அவதூறு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு இது முன்மாதிரியாக அமையுமென்று எச்சரித்துள்ளனர். "இதனால் இலங்கையின் தொடர்புசாதன துறை தொடர்பான சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு ஆலோசனை வழங்கவென இந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட பட்டதுபோல நடைமுறையிலிருக்கும் பத்திரிகை கவுன்சில் சட்டம் மற்றும் குற்றவியல் அவதூறுச் சட்டம் ஆகியவற்றை மறு பரிசீலனை செய்யுமாறு உறுதியாக கோருகிறோம்." என்றும் அவ்வறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

தொடர்புசாதனவியலாளர்களை குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிப்பது என்பது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் அடிப்படை ஜனநாயக உரிமை என்பவற்றுக்கு எதிரான ஒரு நடவடிக்கையாகும் தொடர்புசாதனவியலாளர்கள் தவறிழைத்தபோதும் அது திட்டமிட்டவகையிலான பாரதூரமான தவறாக கொள்ளப்படுவது ஜனநாயக கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரானதாகவே கருதப்படும். இவற்றுக்கு சாதாரண சிவில்சட்டத்தின் மூலமே பரிகாரம் காணமுடியும்.

தொடர்புசாதனத்துறையை இல்லாதொழிக்கக்கூடிய இத்தகைய நடைமுறையையும் இதற்கு வாய்ப்பளிக்கும் குற்றவியல் சட்டத்தையும் உடனடியாக நீக்கவேண்டுமென்பதே பொதுவான தொடர்புசாதனவியலாளர்களின் கோரிக்கையாகும்.

# வைத்திய அதிகாரி தாக்குதல்!

23.05.1997 அன்று பி.ப.1.30 மணியளவில் திருமலை மாவட்ட தளவைத்திய அதிகாரி திருமதி.பா. சிவநாதன் அவர்களை குடிபோதையில் உள்ளே நுழைந்த சிங்கள இளைஞர்கள் சிலர் தோழில் இடித்தும், மரியாதை இல்லாமல் பேசியும் அவமானப்படுத்தியும் உள்ளனர்.

இச்சம்பத்தைக் கண்டிக்கும் விதத்தில் வைத்தியசாலை ஊழியர்கள் அனைவரும் வேலை நிறுத்தத்தில் குதித்தார்கள். நிலைமை மோசமடையவே உட்துறைமுக வீதியில் உள்ள பொலிஸ் அதிகாரியினால் அந்த இளைஞர்கள் அடுத்த நாள் காலை வைத்தியசாலைக்கு கூட்டி வரப்பட்டு எல்லா ஊழியர் முன்பாகவும் வைத்திய அதிகாரியிடம் மன்னிப்பு கேட்டதன் பின்னரே ஊழியர்கள் தங்கள் கடமைக்குத் திரும்பினார்கள்.

ஆயினும் வைத்திய அதிகாரிக்கு ஆதரவாக ஊழியர்கள் இவ்வாறு நடந்து கொண்ட விதம் அங்குள்ள நிர்வாக அதிகாரிக்குப் பிடிக்கவில்லையென்றும் அவர் இந்த எதிர்ப்பு நடவடிக்கையை எதிர்ப்பதிலேயே தீவிர கவனம் செலுத்தினார் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன!

# வேலைக்கு பொலிஸ் சிபாரிசு வேணுமாம்!

இலங்கை புகையிரத சேவைக்கு தற்காலிகமாக ஆறு வருட சேவையில் ஈடுபட்ட பின்னர் 09.04.1997 அன்று நிரந்தர நியமனம் நானுஓயா பொறியியல் காரியாலயத்தில் வழங்கப்படும் முகமாக நேர்முகப் பரீட்சைக்கு பல சான்றிதழ்கள் கோரப்பட்டிருந்தன.

சுமார் நூற்றியம்பது விண்ணப்பதாரிகள், விண்ணப்பிக்கும் பிரதேச பொலிஸ் காரியாலயத்தில் இருந்து சிபாரிசுக் கடிதம் ஒன்றும் கோரப்பட்டிருந்தது.

மௌன் ஜீன் முத்துசாமி கொண்டன் விஜயகுமாருக்கு பொலிஸ் சிபாரிசுக் கடித்ம் பெறவேண்டி அவர் 54 தடவைகள் அட்டன் பொலிஸ் நிலையத்துக்கும், பொலிஸ் அத்தியட்சகரை மூன்று தடவையும், H.Q.I. ஐ பத்துதடவையும் சந்தித்தும் இதுவரை பொலிஸ் சிபாரிசுக் கடிதம் கிடைக்கவில்லை.

குறித்த கடிதம் தர மறுப்பதற்கு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டது காரணம் காட்டப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்லாது குறித்த நபருக்கு சிபாரிசுக் கடிதம் கொடுப்பதாயின் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி லால் குமார தொழில் இழக்க வேண்டி வருமெனவும் கருத்து தெவித்திருக்கின்றார்.

சிபாரிசுக்கடிதம் அவசியம் உணரப்படுமாயின், வட்டவளை ஞானாதந்த தேரோவிடமிருந்து கடிதம் பெற்று வந்தால் சிபாரிசு தரலாம் என லால் குமார கூறியிருந்தார். அப்போது வட்டவளையில் பதிவு செய்யப்பட்ட ஆலய அறங்காவலர் சபை தலைவரிடமிருந்து கடிதம் பெற்று வரவா என விஜயகுமார் வினவியபோது அது மறுத்துரைக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு சிங்கள பௌத்த பேரினவாத மதகுரு அறிமுகமில்லாத தமிழரை சிபாரிசு செய்ய தகுதியுடையவராயின், ஒரு பதிவு செய்யப்பட்ட ஆலய அறங்காவலர் சபை தலைவர் தனக்கு பரீட்சயமான விஜயகுமாரை சிபாரிசு செய்வதில் என்ன தவறு இருக்க முடியும்?

இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையின் கீழ் பொது மன்னிப்பு வழங்கப்பட்டதன் பின்பும், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விடுதலையான விஜயகுமார் குற்றவாளியாகக் கருதப்படுவாராயின், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி உத்தம ஜனாதிபதியின் தாயாரும், பிரதமருமான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க கூட ஏற்கெனவே குடியுரிமை பறிக்கப்பட்டு பொது மன்னிப்பு வழங்கப்பட்டதை இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும்.

மேற்குறித்த பிரச்சினையில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பெருந்தோட்ட வீடமைப்பு பொது வசதிகள் பிரதிய மைச்சருமான சந்திரசேகரன் தலையிட்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

ஆனால் களவு, கொள்ளை, பாலியல் வல்லுறவு புரிந்தவர்கள், கள்ள வடிசாராயம் போன்ற சாதாரண குற்றவியல் குற்றச்சாட்டுக்களின் கீழ் குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்டு தண்டனை பெற்ற பெரும்பான்மை இனத்தோருக்கு அட்டன் பொலிஸ் நிலையத்தில் சிபாரிசுக் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் தனக்கு நீதி கிடைக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட விஜயகுமார் பொதுமக்களின் உதவியோடு அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்ய இலங்கையின் நீதித் துறையை நாடப் போவதாக தெரிய வருகிறது.

*தாவீது*
*வட்டவளை*

**நூல் அறிமுகமும் கலந்துரையாடலும்**

என். ஆத்மாவின்
"மிக அதிகாலை நீல இருள்"
(கவிதைத் தொகுதி)

பெண்கள் கல்வி ஆய்வு
நிறுவன மண்டபம்
58, தர்மராம வீதி, கொழும்பு - 06.

06.07.1997 ஞாயிறு
மாலை 4.30 மணி

தங்களை
அன்புடன் அழைக்கின்றோம்.

எனவே இனி
கொழும்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்